பக்கங்கள் 16 | விலை ரூபா 10.00

# ஈழநாதம்

வெள்ளிநாதம்

Registered as a News paper

நாதம் 13 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | பங்குனி 22 | 05-04-2002 | வெள்ளிக்கிழமை | ஓசை 46

அவசர..........
தேவைக்கான
கறுப்பு, வெள்ளை படங்கள்
ஒரு மணி ஒரு நாள் சேவையில்
(NIC, PLP, PIC
படம் பெரிதாக்கல்)
★ யாழ் ஒளி
புகைப்படக்கலையகம்
டிப்போவீதி, கிளிநொச்சி
(சந்தையருகாமை)
★ ஒளிப்படக்கலையகம்
(K. S. R. PHOTOS)
ஸ்கந்தபுரம்-அக்கராயன்.
வீடியோ
புகைப்படசேவைகள்.
(1701)

# தடைகள் அனைத்தும் நீக்கப்பட்ட பின்னர் இடைக்கால நிர்வாகம் பற்றி முதலில் பேச்சு!

## விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்


(புதுக்குடியிருப்பு)

**போர் நிறுத்த உடன்பாட்டில் இரு தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டு- தமிழர் தாயகத்தில் இயல்பு நிலை தோற்றுவிக்கப்படுவதோடு விடுதலைப் புலிகள்மீதான தடையும் நீக்கப்படுதல் வேண்டும். இதன் பின்னரே நாம பேச்சுவார்த்தைக்குச் செல்வோம். இப்பேச்சுக்களில முதலில் நாம இடைக்காலநிர்வாக அரசுபற்றியே பேசுவோம். இவ்வாறுவிடு தலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம அவர்கள் தெரிவித்தார்.**

நேற்று தற்போதைய அரசியல் நிலைகுறித்து புதுக்குடியிருப்பு சிறி சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாலை 6.00 மணிக்கு தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் அவர்களின தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களும் போராளிகளும் கலந்து கொண்டனர்.

அங்கு அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் ஆற்றிய உரையின் விபரம்வருமாறு;



எனது அன்புக்கும் பாசத்திற்கும் உரிய தமிழீழ மக்களே. எனது அன்பு வணக்கங்கள்.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கடுமையான நோய் வாய்ப்பட்டு முல்லைத்தீவு கடற்கரையில் இருந்து ஒரு படகு மூலமாக இந்த மண்ணைவிட்டு வெளியேறிய பொழுது இந்த மண்ணுக்கு திரும்பி வருவேனோ என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் அதிர்ஷ்டவசமாக ஏதோ உருப்படியாக வெளி உலகத்திற்கு போய்ச்சேர்ந்து எனது நோயை மாற்றி, ஒரு சிறுநீரக மாற்றுச் சிகிச்சை செய்து திரும்பிவந்திருக்கிறேன்.

இங்கிருந்து சென்ற பொழுது களவாக ஒரு கப்பலில் ஏறி பயங்கரவாதி பாலசிங்கம் என்ற பட்டப் பெயருடன் போய் திரும்பி வரும் பொழுது எல்லா இராஜமரியாதையுடன் ஒரு கடல் விமானத்தில் வந்து சேர்ந்தேன்.

சென்றபோது கடல் வழியாகச்சென்றேன். வந்தபோது குளத்தில் வந்து குதித்தேன. என்னை வழியனுப்பி வைத்தவர்களில் தலைவர் பிரபாகரன் ஒருவர். எனது அன்புத் தம்பி தமிழ்ச்செல்வன்,எனது மிகவும வேண்டிய தளபதி சூசை இவர்கள் தான் என்னை அனுப்பி வைத்தார்கள. நான் வரும் பொழுதும் என்னை அவர்கள் தான் இங்கு வந்து கைலாகு கொடுத்து வரவேற்றார்கள்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவை அன்றிருந்த இலங்கை சனாதிபதி பிரேமதாசாவுடன் இரகசியமாக அவரது மாளிகையில் பேசிக் கொண்டிருக்கும் பொழுது அவர் ஒரு விசயத்தை சொன்னார். என்னவென்றால், நீங்கள் எனது ஆலோசகராக இருந்தால் அதே வேளை தலைவர் பிரபாகரன் எனது இராணுவத்தின் தளபதியாக இருந்தால் எனது ஆட்சி பலமாக இருக்கும். என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார். அப்பொழுது சொன்னேன் நான் ஆலோசகராக இருந்தால் உங்களது ஆட்சி பலப்பட உதவி செய்வேன் என்று சொன்னேன். ஆனால் தலைவர் பிரபாகரன் உங்களது இராணுவத் தளபதியாக இருந்தால் உங்களது ஆட்சி தொடருமோ என்பது தெரியாது. அத்தோடு நீங்களும்உயிரோடு இருப்பீர்களோ என்று சொல்ல முடியாது. அவர் சிரித்தார். அவருக்கு விசயம் விளங்கவில்லை. நான் என்ன அர்த்தத்துடன் சொன்னனான் என்று சொன்னால் உங்களது சுயநலத்துக்காக உங்களது ஆட்சியைநிலைப்படுத்துவதற்காக விடுதலைப்புலிகளை பயன்படுத்த முடியாதுஎன்ற உண்மையைத்தான் நாசூக்காக அவருக்குச் சொன்னேன். அவர்அதை அந்த அர்த்த பரிமாணத்தில் விளங்கிக்கொள்ளவில்லை. அதனால்தான் அவர் இப்போது உயிரோடு இல்லை;

பிரேமதாசா அரசோ, சந்திரிகா அரசோ, உண்மையுடன், நேர்மையுடன் எமது விடுதலை இயக்கத்தை அணுகவில்லை. பிரேமதாசா அரசாங்கத்துக்கு ஒருஉள்நோக்கம் இருந்தது. அதாவது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக அவருக்கு ஒரு இரகசிய உள்நோக்கம் இருந்தது. என்னவென்று சொன்னால் அன்று தென்னிலங்கையில் தலைதூக்கிய ஜே.வி.பி புரட்சிக்காரர்களை அடக்கவேண்டும். வடகிழக்கு மாகாணத்தில் ஆக்கிரமித்து நின்ற இந்திய இராணுவத்தை வெளியேற்ற வேண்டும். இந்த இரண்டு நோக்கத்துக்காகத்தான் அவர்கள் புலிகளுடன் பேசினார்களே ஒழியதமிழினத்தின் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பேசவில்லை.

நாங்கள் நேர்மையுடன் பிரேமதாசாவுடன் பேசினோம். எமது நோக்கமும் எமது மண்ணை ஆக்கிரமித்துநின்ற இந்திய இராணுவத்தை தமிழீழ மண்ணில் இருந்து வெளியேற்ற வேண்டும் என்பதுதான். ஆகவே இந்த பிரேமதாசாவின் பேச்சு இரண்டு வருடங்கள வரை நீடித்தது. எமது இலக்கும் நிறைவேறியது. பிரேமதாசாவின் இலக்கும் நிறைவேறியது. இதனை அடுத்து பிரேமதாசா தமிழரின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பின்னடித்தார். திரைமறைவில் மாற்று இயக்கங்களுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தினார். விடுதலைப் புலிகளை ஓரம் கட்ட முனைந்தார். இதன் காரணமாக பேச்சுக்கள் அன்று முறிந்துபோயின.

சந்திரிகா அரசும் எங்களுடன் பேச்சுக்களை நடத்தியது. அதாவது சந்திரிகா ஆரம்பத்தில் ஒரு சமாதானத் தேவதை போன்ற வேடம்பூண்டு உலகத்தை ஏமாற்றி தமிழ் மக்களை ஏமாற்றி சிங்கள மக்களை ஏமாற்றி, புலிகளுடன் பேசுவதுபோல நடித்து இறுதியில் புலிகளை அழிக்க முற்பட்டார்.

இன்று சந்திரிகா சிங்களவர்களாலும் தமிழர்களாலும் மற்றைய சிறுபான்மை இனத்தவர்களாலும் ஓரங்கட்டப்பட்டு ஒதுக்கப்பட்டு நிற்கிறார். ஒருகூண்டில் அடைபட்ட சிங்கம்போல அவர் அதிகாரம் இருந்தும் அதிகாரத்தை பிரயோகிக்க முடியாது ஒதுக்கப்பட்டு நிற்கிறார்.

விடுதலைப் புலிகளை பயங்கரவாதக் கூண்டில் அடைத்து அவர்களை அவமானப்படுத்தலாம் என சந்திரிகாவும் கதிர்காமருமாக கூட்டாக செய்த சதிகளும் முயற்சிகளும் இறுதியில் தோற்றுப் போயின நாங்கள் இப்பொழுது பயங்கரவாதக் கூண்டை உடைத்துக்கொண்டு வெளியே வந்து எமது தாயக மண்ணில் நிற்கின்றோம்.

உங்களுக்குத்தெரியும் கடந்த மூன்று மாதகாலத்துக்கு மேலாக ஒரு புதிய அரசுஆட்சி (2ஆம் பக்கம் பார்க்க)

### நேர்நோக்கி

கடந்த பொதுத் தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி தோல்வியடைந்ததையடுத்து அது பிளவடையக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏற்படத்தொடங்கியிருந்தன. புதிய அரசாங்கத்தை அமைப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி முயற்சிகளை மேற்கொண்டிருந்தவேளை அது தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு கோரிக்கை விடுத்தபோது அதற்கு ஆதரவான குரல்கள் பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் இருந்து எழுந்தன. இதற்கு முன்னாள் அமைச்சர் ஏ:எச். எம்: பௌசி தலைமை தாங்கினார்;

பின்னர் தணிந்திருந்த இவ் விவகாரம் உள்ளூராட்சித்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி படுதோல்வி அடைந்த நிலையில் மீண்டும் மேலெழுந்துள்ளது.

இப்பொழுது உள்ள நிலையில தேசிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படாவிட்டாலும் கூட, பாராளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ஐக்கிய தேசிய முன்னணியுடன் ஒத்துப்போக வேண்டிய நிலையிலேயே சந்திரிகா உள்ளார்.

இவ் வாறான நிலையில் வெளிப்படையாகவே ஒத்துழைக்கும் போக்கைக் கடைப்பிடித்து சில பதவிகளைப் பெற்றுக்கொள்ள பொதுசன ஐக்கிய முன்னணியிலுள்ள சிலர் விரும்பக்கூடும். அவர்களைச் சமாதானப்படுத்த சந்திரிகா முனைந்துள்ளார்.

சனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க- அதற்கும் மேலாக சனாதிபதியையே பதவிநீக்கம் செய்ய ஐ.தே. முன்னணி முயற்சி எடுக்கும் நிலையில், சந்திரிகாவின் இந் நடவடிக்கை அவருக்கு வெற்றியைத் தராவிடின், கட்சி பிளவுறுவதுடன், பாராளுமன்றம் பறிபோனதுபோல சனாதிபதி பதவி பறிபோகும் நிலையும் உருவாகலாம்.

ஆனால் கட்சித் தலைமைபீடத்தின் மீது ஏனையோருக்கு தற்போது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையானது கட்சி பிளவுறுவதற்கான வாய்ப்பையே அதிகம் வெளிப்படுத்துகிறது.

பீடம்ஏறிஇருக்கிறது: திரு: ரணில் விக்கிரமசிங்கவின் இந்தஅரசாங்கம் ஆட்சிபீடம்ஏறியமைக்கு புறநிலை- சூழ்நிலையைஅமைத்துக் கொடுத்தது எமது விடுதலை அமைப்புத்தான்.

## ரணில் வெல்ல புலிகளே காரணம்

எமது தலைவரின் கடந்த மாவீரர்உரையை கவனமாகப் படித்தீர்கள் என்று சொன்னால் மிகவும் நுட்பமாக சிங்கள மக்களுக்கு அந்த உரையில் ஓர் அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது சமாதானத்துக்கான சக்திகளை தேர்ந்தெடுத்து ஆட்சி பீடம் ஏற்றுமாறு தலைவர் பிரபாகரன் அவர்கள் சிங்கள மக்களுக்கு முதல் தடவையாக ஓர் அழைப்பைவிடுக்கிறார்.

அதேவேளை போருக்கும் அழிவுக்கும் ஏதுவாக இருந்த சந்திரிகா அரசைக் கண்டித்து நிற்கிறார்.

ஆகவே, இந்தச் செய்தி, இந்த அழைப்பு எமது சிங்கள மக்கள் மத்தியில் ஒரு பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தியது; அதன் விளைவாக ரணில் விக்கிரமசிங்கவின் கட்சி ஆட்சிக்கு வந்தது. அதாவது ஒரு சமாதான மனுவுடன் ஆட்சிக்கு வந்ததை நீங்கள் அறிவீர்கள்;

அதேவேளை தமிழீழப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளை ஏக பிரதிநிதிகளாக, உண்மையான பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்ட தமிழ்க் கட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன: இது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கொடுக்கப்பட்ட ஒரு வெகுசன அங்கீகாரமாகும். இதன் மூலம் இந்தத் தேர்தலில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வெகுசன அங்கீகாரமும் சமாதானத்துக்கான மனுவும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆகவே சிறிலங்காவில் ரணிலின் ஆட்சிபீடம் தோன்றியதும் தலைவர் அவர்கள் ஒருதலைப் பட்சமாக போர் நிறுத்தப் பிரகடனம் செய்தார்:

நாம் வலுமிக்க போராட்ட சக்தியாக நின்று. பிரமிக்கத்தக்க இராணுவசாதனைகளை செய்தபோதும். சமாதானத்தில் நாம் அக்கறையாக இருக்கிறோம். சமாதானத்தில் எமக்கு ஒரு நேர்மையான குறிக்கோள் இருக்கிறது என்பதைதெளிவாக எடுத்துக்காட்டும் நோக்குடன் இந்த ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தம் பிரகடனம் செய்யப்பட்டது.

எமக்குத் தெரியும், ரணில் விக்கிரமசிங்க அரசும் இந்தப் போர் நிறுத்தப் பிரகடனத்தை சந்திரிகாவை போல நிராகரிக்காது !தாங்களும் நல்லெண்ண அறிகுறியாக இந்தப் போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொண்டு அவர்களும் போர் நிறுத்தம் பிரகடனம் செய்தனர். ஆகவே இந்த சமாதானத்துக்கான புறநிலையை உருவாக்கும் முன்முயற்சியை செய்ததும் எமதுஇயக்கம்தான்.

இந்த சமாதான முயற்சிக்கு இந்த போர் நிறுத்தத்துக்கு இராஜதந்திர காய் நகர்த்தல் மட்டும் காரணம் அல்ல. இரண்டு மிக முக்கியமான நிகழ்வுகள் காரணமாக அமைந்தன:

## யுத்த நிறுத்தத்திற்கு காரணம் என்ன?

அதில் ஒன்று அக்கினிச்சுவாலை போர் நடவடிக்கை. சிறிலங்கா இராணுவம் தனது சுடுகல சக்தியை மிகவும் பிரமாண்டமான அளவில் பயன்படுத்தி ஒரு மாபெரும் தாக்குதலை நிகழ்த்தியதை நீங்கள் அறிவீர்கள்;

அதனை எதிர்கொண்டு தாக்கி அந்த எதிர்த் தாக்குதலை முறியடித்து ஏராளமான சிங்களப் படையினரை கொன்று குவித்து விடுதலைப் புலிகள் எத்தகைய சுடுகல சக்தியை கொண்டு தாக்கினாலும் அவர்களை வெல்லமுடியாது என்ற உண்மையை உலகுக்கும் சிங்களதேசத்துக்கும் உணர்த்தினோம்:

அடுத்ததாக, கட்டுநாயக்க விமான நிலையத்தில்நடைபெற்ற தாக்குதல்: இந்த தாக்குதலின் விளைவுகள் பாரதூரமானவை என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்த தாக்குதல் சிங்கள தேசத்தின் பொருளாதார கட்டுமானத்தை சிதைத்தது, சிங்கள தேசத்தை மண்டியிடச் செய்தது. ஆகவே இந்த இரு தாக்குதல்களும் எமது வீரர்களின் உறுதியான இலட்சியப்போக்கையும், வீரத்தையும், தியாகத்தையும் வெளிக்காட்டுவதாக அமைந்தது.

போரில், போர்க்கலையில் புலிகளைவென்றுவிட முடியாது என்ற உண்மையை உணர்த்தியது.

இதற்கு அப்புறம் தான் சிறிலங்கா அரசு புலிகளுடன் பேசி பிரச்சினையை தீர்க்க வேண்டும் என இறங்கிவந்தது. இந்த தாக்குதல்களின் ஒட்டுமொத்த விளைவாகத்தான் சர்வதேச உலகம் சிங்கள அரசு |மீது அழுத்தத்தை பிரயோகித்து புலிகளுடன் பேசுங்கள் என அவர்களுக்கு புத்திமதி கூறியது.

அமெரிக்காவையும் மற்றைய நாடுகளையும் தன்வசப்படுத்தி புலிகளை பயங்கரவாதிகளாக பிரகடனப்படுத்தி உலக வல்லரசுகள் மூலம் புலிகளை அழித்துவிடலாம் என எண்ணிய அரசுக்கு சர்வதேச உலகம் சொல்லியது என்னவென்று சொன்னால், நீங்கள் புலிகளுடன் பேசித்தான் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் வேறு எதுவும் மார்க்கம் இல்லை. இராணுவரீதியாக நாங்கள் உங்களுக்கு உதவிசெய்து புலிகளை அழிப்பதற்கு நாங்கள் ஒத்துழைக்கமாட்டோம் என உலகம் கூறியது:

ஆகவே இந்த புதிய அரசை ரணில் விக்கிரமசிங்கவின் அரசை சமாதானப்பாதையில் தள்ளியது அந்த அரசின் அரசியல் ஞானோதயம் அல்ல. நெருக்கடியான பொருளாதார புறநிலை. அத்துடன் விடுதலைகள் புலிகளை இராணுவரீதியாக வெல்ல முடியாது என்ற உண்மை நிலை. இவை காரணமாகத்தான் ரணில் விக்கிரமசிங்க அரசு இறங்கி வந்து சமாதானப்பாதையில் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்த முன்வந்திருக்கிறது.

ஆகவே இந்த சமாதான சூழலை உருவாக்கியது இராஜதந்திரம் மட்டும் அல்ல. எமது போராளிகளின் வீரம் செறிந்த விடுதலைப் போராட்ட சாதனைகள்தான்.

1994 ஆம் ஆண்டு சந்திரிகா அரசுடன் நாம் நடத்திய பேச்சுக்களை அடுத்து எமது இயக்கம் ஒரு விடயத்தை காலம் காலமாக வலியுறுத்தி வருகிறது.

## அன்றாடப்பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்

அதாவது எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், எமது மக்களின் நாளாந்த வாழ்க்கைப் பிரச்சினைகள் முதலில் தீர்க்கப்படவேண்டும். அதற்கு அப்புறம்தான் இனப்பிரச்சினை சம்பந்தமாக பேச்சுக்களை நடத்த நாங்கள் தயாராக இருக்கிறோம். இதை நான் திருப்பித் திருப்பிச் சொல்லத் தேவையில்லை. கடந்த ஐந்து, ஆறு ஆண்டுகளாக எமது தலைவர் அவர்கள் வருடந்தோறும் வெளியிடும் மாவீரர் தின அறிக்கையில் இந்த நிலைப்பாடு தெட்டத் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. எம்மைப் பொறுத்தவரை சமாதானப் பேச்சுக்கள் | இனப்பிரச்சினை சம்பந்தப்பட்ட பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடைகள், மருந்துத் தடைகள், போக்குவரத்துத் தடைகள், மீன்பிடித் தடைகள் இப்படியான பல்வேறு ஒடுக்குமுறையான தடைகளை நீக்கி ஓர் இயல்பு நிலையைத் தோற்றுவித்து, ஓர் அமைதியைத் தோற்றுவித்து அதன்பிறகு பேச்சுக்களை நடத்த வேண்டும் என்பதுதான் கடந்த பல வருடங்களாக எமது நிலைப்பாடாக இருந்து வருகிறது. இப்பொழுதும்அதே நிலைப்பாட்டைத் தான் நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். அதே நிலைப்பாட்டைத் தான் நடைமுறைப்படுத்தியும் வருகிறோம்.

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிபீடம் ஏறியதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றப்போவதாக வாக்குறுதியளித்தார். பொருளாதாரத் தடைகளை நீக்கி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்த்து நிலையான உறுதியான ஒரு சமாதானத்தை ஏற்படுத்தி விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு அவர் முன் வந்தார். ஆனாலும், அவர் ஆட்சி பீடம் ஏறியதையடுத்து முதற்தடவையாக | உடனடியாக இந்தியாவிற்கு ஓடினார்:

இதில்தான் சூத்திரங்கள் இருக்கின்றன. ஏன் ஓடுகிறார்? இந்தியாவிடம் போய் இந்திய அரசிடம் கேட்கிறார்; நீங்கள்தான் இந்தப்பிரச்சினைக்கு மத்தியஸ்தம் வகிக்கவேண்டும் நீங்கள்தான் இந்தப்பிரச்சினையில் தலையிடவேண்டும், நீங்கள்தான் எமக்குப் பக்கபலமாக நிற்கவேண்டும் என்று இந்திய அரசாங்கத்திற்குவேறு பல பிரச்சினைகள் இருக்கின்றன. அங்கே அமெரிக்கா போய் ஆப்கானிஸ்தானில் குண்டு போட்டுக்கொண்டிருக்கின்றது. காஷ்மீர் பிரச்சினை தீவிரமாகிக்கொண்டிருக்கின்றது, இந்திய பாகிஸ்தான் எல்லைப்பிரச்சினை இருக்கிறது. இந்து -முஸ்லிம் கலவரப்பிரச்சினை இருக்கிறது. இப்படியாக உள்நாட்டு வெளிநாட்டுப் பிரச்சினைகளில்மூழ்கிப்போன இந்தியா இலங்கைப் பிரச்சினையிலே தலையிடுவதற்குத் தயாராக இல்லை,

## போர்நிறுத்த லாபநட்டங்கள்

அதுவும் ஏற்கனவே இதில் தலையிட்டு சூடு கண்ட இந்தியாவிற்கு மீண்டும் இதில் தலையிட விருப்பமில்லை. அப்பொழுது அவர்கள் என்ன சொன்னார்களென்றால் நீங்கள் நோர்வேயைப் பிடியுங்கள். நோர்வே அரசின் அனுசரணையுடன் இந்தப்பேச்சுக்களை இந்தச் சமாதான முயற்சிகளை செய்யுங்கள் நாங்கள் அதற்கு ஆதரவாக இருக்கிறோம். ஆனால் நாங்கள் நேரடியாக இந்தப்பிரச்சினையில் தலையிட விரும்பவில்லை என்று இந்திய அரசு ரணிலுக்குச் சொல்லுகிறது. அதன்பின்னர்தான் ரணில்விக்கிரமசிங்க நோர்வேக்குச் செல்கிறார். சோர்ந்து போய்க்கிடந்த நோர்வேயின் அனுசரணை மீண்டும் புதுப்பிக்கப்படுகிறது. ஒதுக்கப்பட்டிருந்த எரிக்சொல்கெய்ம் மீண்டும் கொண்டுவரப்படுகிறார். அதன்பின்னர் நோர்வேயின் முன்முயற்சியுடன் இருதரப்பும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு போர்நிறுத்த உடன்பாட்டிற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. இந்தப்போர் நிறுத்த உடன்பாட்டில் எமதுமக்களின் நலனைப்பேணும் வகையில் நாம் பெரியமுயற்சி எடுத்தோம். இது குறித்து லண்டனில்பேச்சுக்கள் நடந்த போதும் நாளாந்தம் நான்லண்டனிலிருந்து தலைவர் பிரபாகரனுடன் தொடர்புகொண்டு இந்தப் போர்நிறுத்தத்திலுள்ள சிக்கல்கள், போர் நிறுத்த நடைமுறை விதிகள், இதனால் எமக்கு ஏற்படக்கூடியநஷ்ட, இலாபங்கள் நன்மை, தீமைகள் பற்றி பேசி எமது மக்களுக்குச்சார்பானமுறையில் இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டைச் செய்துகொண்டோம்.

இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டை நீங்கள் ஆழமாகப் பார்த்தால், போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது மட்டுமல்லாமல் போருக்கு ஓய்வு கொடுப்பது மட்டுமல்லாமல் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளின் தீர்வு அதில் நிபந்தனைகளாக சேர்க்கப்பட்டிருக்கின்றது என்ற உண்மையை நீங்கள் பார்ப்பீர்கள். பொருளாதாரத்தடை நீக்கம், அத்தியாவசியப் பொருட்களின் தடை நீக்கம், மருந்து வகைகளுக்கான தடை நீக்கம், மீன்பிடித்தடை நீக்கம் அதாவது படிப்படியாக ஒரு கால அட்டவணையின் கீழ் மீன்பிடித்தடை நீக்கப்படும் விதிகள் இந்தப் போர் நிறுத்த உடன்பாட்டில் சேர்க்கப்பட்டிருக்கின்றன, இராணுவக்கெடுபிடிகள், இராணுவக்கைதுகள், சுற்றிவளைப்புக்கள், தேடுதல் இவை எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த உடன்பாட்டில் மேலும் வீதிகள்தோறும் மூலை முடக்குகளில் எமது புனித கோவில்களில், எமது கல்லூரிகளில், பாடசாலைகளில், பொது இடங்களில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவம் படிப்படியாக வெளியேற்றப்பட வேண்டும் என்ற விதிகளும் அதில் இருக்கிறது. இராணுவத்தை வெகுசனமையத்திலிருந்து வெளியேற்றி முகாம்களுக்குள் முடக்கும் விதிகள் அதில் இருக்கிறது. அது எமது மக்களுக்கு சாதகமானது.

அடுத்தது ஆயுதங்கள் ஏந்திக் கொண்டு மக்களை மிரட்டி, மக்களைச் சுரண்டி, மக்களைப் பயமுறுத்தி வாழ்ந்து வந்த ஆயுதக்குழுக்கள் அவர்களது ஆயுதங்கள் களையப்பட வேண்டும் என்பதும் அந்த விதிகளில் இருக்கிறது. அது இப்பொழுது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

அடுத்த முக்கியமான விடயமாக, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் எமது போராளிகள் பிரவேசிப்பதற்கான அனுமதியும் அந்த உடன்பாட்டில் இருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாக நாங்கள் நடமாட முடியாது. ஆனால் இந்த ஒப்பந்த விதிகளின்படி எமது போராளிகள் ஒப்பந்தம் கைச்சாத்தாகி முதல்மாதத்தில் ஐம்பது பேரும், அடுத்த மாதம் நூறுபேரும், மூன்றாவது மாதத்தில் சகல போராளிகளுமாக, சுதந்திரமாக எமது தாயக மண்ணில் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் நடமாடி அரசியல் வேலைகளை விஸ்தரிக்கும் வாய்ப்பு, அந்த சுதந்திரம் இந்த ஒப்பந்தத்தில் இருக்கிறது.

அடுத்தது முக்கியமாக வடக்கையும் கிழக்கையும், வடக்கையும் யாழ்குடா நாட்டையும் துண்டித்து நின்றபாதைகள் கண்டி-யாழ்ப்பாண பெருவீதி திறக்கப்படுகிறது,

இப்படியான வீதிகளைத்திறந்து ஓரங்கட்டி ஒதுக்கப்பட்டிருந்த யாழ். குடாநாட்டை வன்னிப்பெருநிலப்பரப்புடன் இணைத்து எமது மக்களை புவியியல் ரீதியாக ஒன்று சேர்க்கும் சில விதிகளும் இதில் இருக்கிறதென்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள்இதுவும் மிகவும்முக்கியமான அம்சம்.

எல்லாவற்றிற்கும் மேலாக ஒரு சர்வதேச கண்காணிப்புக்குழு முன்னொரு பொழுதும் இல்லாதபடி அமைக்கப்பட்டுள்ளது. ஏனென்று சொன்னால் போர்நிறுத்தங்கள் செய்யலாம். ஒப்பந்தங்கள் செய்யலாம். சிலசமயங்கள் இருவரில் ஒருவர் அதை மீறலாம் பின்னர் போர் வெடிக்கலாம் ஆனால் இந்த முறை அப்படிச்செய்ய முடியாது ஏனெனில் இது ஒருசர்வதேச கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்பின் கீழ். மேற்பார்வையின்கீழ் இந்தப்போர்நிறுத்தம் இருக்கும். ஆகவேஇதற்கொரு நிரந்தரமான, நிலையான, உறுதியான போர்நிறுத்தமாக இது அமைகிறது. சர்வதேச கண்காணிப்புடன் அதாவது சர்வதேச நாடுகளின் கண்காணிப்புடன் இந்தப்போர்நிறுத்தம் தொடரும். ஆகவே ஒரு சின்னஞ்சிறிய சச்சரவுடன்சின்னஞ்சிறிய மோதல்களுடன், தப்பபிப்பிராயங்களுடன் இந்தப்போர் நிறுத்தத்தைக்குலைக்க முடியாது: அமைதியைக் குலைக்க முடியாது. ஆகவே இந்தப்போர் நிறுத்தம் நிலைக்குமா? எவ்வளவு காலத்திற்கு இந்தப்போர் நிறுத்தம்? மீண்டும் சண்டை தொடங்குமா? என்ற சந்தேகங்கள் உங்களுக்கு இருக்கத் தேவையில்லை ஏனென்று சொன்னால் இருதரப்புக்கும் ஒரு அமைதியான சூழ்நிலை தேவையாக இருக்கிறது. அவருக்கும் பொருளாதார நெருக்கடி எமக்கும் பொருளாதார நெருக்கடி.

## எமது பிராந்தியத்தில் அமெ. நுழைந்துள்ளது

நாம் அமைதியாக வாழவிரும்புகிறோம்: சிங்கள தேசமும் அமைதியாக வாழ விரும்புகிறது. ஆகவே இப்படியான தொரு வரலாற்றுப் புற நிலையில் தான் இந்த அமைதி ஒருநிரந்தர நிலையை அடையும் அதற்கும் மேலாகசர்வதேச சூழலும் இப்படியான தொரு

(15ஆம் பக்கம் பார்க்க)

05. 04. 2002 வெள்ளிக்கிழமை



விடுதலைப் புலிகள் மக்களிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல; விடுதலைப்புலிகள் ஒரு மக்கள் இயக்கம். புலிகள் தான் மக்கள்; மக்கள் தான் புலிகள்.

ஈழநாதம்
வெள்ளிநாதம்

# தமிழ் மக்களின் பிரகடனம்

தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக யாரை ஏற்றுக்கொள்வது என்ற கேள்விக்கான விடையை பலரும் பலவாறாக கடந்த காலங்களில் கூறிவந்துதுள்ளார்கள்.

'ஏகப்பிரதிநிதி என எவரும் கிடையாது.'

'விடுதலைப் புலிகளை மட்டும் ஏக பிரதிநிதிகளாகக் கொள்ளமுடியாது'

'எல்லா தமிழ் அமைப்புகளையும் தமிழ்மக்களின் பிரதிநிதிகளாகவே கருதவேண்டும்.'

'விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலக்காதவரை அவர்களை தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது.

— இவையனைத்தும் தேசிய-சர்வதேசிய அரங்கில்கடந்தகாலங்களில்பல்வேறுகட்டங்களின் போதும்முன்வைக்கப்பட்டகருத்துக்களாகும்

தமிழரின் ஏக பிரதிநிதியை தீர்மானிக்கும் உரிமையை பலரும் தத்தமது அரசியல் சுயலாபங்களைக் கருத்திற்கொண்டு அவ்வப்போது தன்னிச்சையாக எடுத்துக்கொண்டு கூறிய கருத்துக்களே இவையாகும். இவர்களுக்கு இந்த உரிமையை தமிழினம் எந்தக் காலத்திலும் கையளிக்கவில்லை என்பதே உண்மையான விடயமாகும்.

தமது பிரதிநிதிகள் யார் எனத் தீர்மானிக்கும் சக்தி தமிழ் மக்களிடமே யுள்ளது. அரசோ, அரசியல் கட்சிகளோ, தனிக் குழுக்களோ, சர்வதேச நாடுகளோ அதற்கு எந்த விதத்திலும் உரித்துடையவர்களல்ல.

ஆனாலும் அடக்குமுறை, ஒடுக்குமுறை, சமூக பொருளாதார வாழ்வியல் அழுத்தங்கள், இராணுவ அச்சுறுத்தல்கள், மேலாதிக்க மிரட்டல்கள் எனப் பல்கோண நெருக்குதல்களின் மூலம் தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்கி. குரல்களை மௌனிக்கவைத்துவிட்டுத்தான் மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் பரப்பப்பட்டன.


எனினும் ஊரைக்கூட்டி, உலகைச் சேர்த்து ஒலமிட்டவர்கள் ஒடுங்கி ஒடத் தொடங்கியுள்ளார்கள். தமிழ் மக்கள் இப்படிக்கிளர்ந்தெழுந்து தங்களின் பிரதிநிதிகள், அதுவும் ஏகப்பிரதிநிதிகள் யார் என்பதை ஓங்கிப்பிரகடனம் செய்து தங்களையெல்லாம் ஓரங்கட்டி ஒதுக்கி விடுவார்கள் என எவருமே எதிர்பார்க்கவேயில்லை.

இந்த வரலாற்று திருப்பம் ஏதோ திடீரென நிகழ்ந்த ஒரு நிகழ்வேயல்ல... அளப்பரிய தியாகத்தின் மேல், ஒப்பற்ற வீரத்தை மூலதனமாக வைத்து, போராடி ஏற்படுத்திய திருப்பமேயாகும்.

வவுனியாவுக்கும்மன்னாருக்கும்இராணுவ ஆக்கிரமிப்பு பகுதிக்குள் அரசியல் பணிகளை மேற்கொள்ள சென்ற விடுதலைப் புலிகளை அங்கு பலகாலம் அடங்கி, ஒடுங்கி, நடுங்கி வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் இராணுவ கெடுபிடிகளையும் மீறி ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து ஆரத்தழுவி வரவேற்று தோளில் ஏற்றி சுமந்து சென்றார்கள் என்ற செய்தி அரச ஊடகங்களிலேயே கூறப்படும் அளவுக்கு ஒரு வரலாற்று எழுச்சி சுவாலைவிட்டெரிய ஆரம்பித்துள்ளது.

இந்த மக்கள் எழுச்சி அவர்களின் ஏகபிரதிநிதிகள் யார் என்பதையும். அவர்களின் ஒரே தலைவர் யார் என்பதையும் சர்வதேசத்திற்கு ஓங்கிப் பிரகடனம் செய்துள்ளது.






# பாதுகாப்பு நிதி ஒதுக்கீடும் பலத்த சந்தேகங்களும்

போரை நிறுத்தி பாதுகாப்பு செலவினத்தைக் குறைத்து, அபிவிருத்தி பணிகளுக்கு அதிகளவு நிதியை ஒதுக்கி, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு, அவர்களின் வாழ்வை வளம்படுத்துவதே அரசின் நோக்கம். . இது தேர்தலின் முன்னான ஐக்கியதேசிய முன்னணி அரசின் தேர்தல் வாக்குறுதியாகும்.

ஆனால் ஐ தே. முன்னணி அரசின் முதலாவதுவரவு -செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவினத்திற்கான ஒதுக்கீட்டில் குறிப்பிடத்தக்க அளவு எவ்விதமாற்றமும் தென்படவில்லை.

கடந்த அரசாங்க நிர்வாகத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட இராணுவ தளபாடங்களுக்கான கடன் தொகையை செலுத்தவே இவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாக இதற்கு அரசு வட்டாரங்கள் நியாயம் கற்பித்துவருகின்றன.

ஆனால் இன்னொருபுறம் கடற்படை மேலும் நவீனப்படுத்தப்படவுள்ளதாகவும், அதற்கான புதிய பாரிய கடற்கலங்களையும், நவீன பீரங்கிகளையும் கொள்வனவு செய்யவுள்ளதாகவும் செய்திகள் வருகின்றன.

விமானப்படை மீள்கட்டமைப்பு செய்யப்படுவதற்கான திட்டங்கள் உருவாக்கப் பட்டுவருகின்றன.

புலனாய்வுக் கட்டமைப்பும் மீளமைப்புச் செய்யப்படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இராணுவ வளத்தை- வலிமையை வெளிநாட்டு அரசுகளின் ஆலோசனையுடன் கூடிய நெறிப்படுத்தலில்மேம்படுத்தநடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருவதாகவும் கூறப்படுகிறது.

இவையனைத்தும் சந்தோசமான சமாதானச் செய்திகளல்ல .. அமைதி விரும்பிகளுக்கு அச்ச மூட்டும் செய்திகளே. இந்த இராணுவ பல விஸ்தரிப்பானது எந்த எதிரி நாட்டின் அச்சுறுத்தலைத் தவிர்க்க என்றசந்தேகத்துடனான கேள்வியும் தவிர்க்க முடியாது எழவே செய்கிறது.

## பிறமுக அறிமுகம்



வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

பிரபலமான முன்னாள் சட்டத்தரணி, மிகப் பிரபலமான சிறிலங்காவின் முன்னாள் வெளியுறவு அமைச்சர், மிகமிகப்பிரபலமான சந்திரிகாவின் வெளியுறவுத்துறை ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆவார்.

சிறிலங்காவில், ஏன் கொழும்பில் மட்டுமே பிரபலமான ஒரு சட்டத்தரணியை, ஒரேநாளில் சர்வதேசத்திற்கும் அறிமுகமாக்கி வைத்த பெருமை சந்திரிகாவுக்கே உரியது. அவர் கதிர்காமருக்கு வழங்கிய வெளியுறவு அமைச்சர் பதவியே அவருக்கு சர்வதேச முகவரியை 'அமைச்சர்' என்றும் உள்ளூர் முகவரியை 'தமிழினத் துரோகி' எனவும் வேறுபடுத்திக் காட்ட வைத்தது.

தமிழ் தேச விரோத குழுக்கள் 'தலையாட்டி' உள்ளூரில் செய்து வந்த துரோகத்தன நடவடிக்கைகளை சர்வதேச அளவில் 'ஆட்காட்டி' விரிவுபடுத்திய கைங்கரியத்தைச் செய்து 'பதவி' எலும்புகளுக்காக வாலாட்டி நிற்பதில் இவருக்கு நிகர் இவரே...

'விடுதலைப் புலிகளை' பயங்கரவாதிகளாக்கி உலக அரங்கில் ஒரங்கட்டி ஒதுக்கிவிடுவதே அரசின் பிரதான இலக்கு என பயங்கரப் பிரகடனம் செய்ததுடன், அதற்காக ராஜதந்திர ரீதியிலான பிரச்சாரப்போரை நடத்தும் சர்வதேச தளத்திலான நடவடிக்கையை மேற்கொண்ட சிறிலங்கா அரசின் ராஜாங்கத் தளபதி என்றும் இவரை வர்ணிக்கலாம். ஆங்கிலத்தில் சிந்தித்து, சிங்களத்தில் சரளமாக உரையாடும் திறன்மிக்க கதிர்காமர் தவிர்க்கவிரும்புவது தமிழ் மொழியை, மறைக்கவிரும்புவது தமிழன் என்கிற தனது அடையாளத்தை... எனவே கதிர்காமரான இவர் தனது பெயரைக் கடிர்காமர் என்று மாற்றிக் கொண்டதில் ஆச்சரியமில்லை.

கால் சிங்களவரை விட 'சிங்களத்தன்மை' கொண்ட கறுப்பு ஆங்கிலேயரான இந்தப் பூர்வீகத் தமிழரிடம் தற்போது இல்லாதது தமிழுணர்வு. இதனால் இருந்தும் இல்லாதிருப்பது முதுகெலும்பு.

விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியில் சிலநாடுகள் தடை செய்ய வைத்ததில் இவரது பேரினவாதிகள் மீதான விசுவாசம் பெயர் பெற்ற ஒன்றாகும்.

மகாசங்கத்தினரே இவரை சிங்களதேசத்தின் மிகச்சிறந்த விசுவாசி எனப் போற்றுகிறார்கள். என்றால் இவரின் தமிழின எதிர்ப்பின் உக்கிரத்தன்மையை நீங்கள் சுலபமாகவே புரிந்து கொள்ளமுடியும். தற்போதைய வெளியுறவு அமைச்சர் 'டிரோன் பெர்னாண்டோ'வே ஒருமுறை இவரை, 'தமிழராக இருந்தும் புலிகளின் நடவடிக்கையை ஒடுக்க தியாக உணர்வுடன் பாடுபடுபவர்' என்று பாராட்டியுள்ளமை குறிப்பிடவேண்டியது. (இது டிரோன் பெர்னாண்டோவையும் இனம் காண உதவும்)

இந்த முன்னாள் வெளியுறவு அமைச்சர் தற்போது சந்திரிகாவின் வெளியுறவு ஆலோசகர். 15 ஆடம்பரக்கார்கள், 125 இராணுவக் கொமாண்டோக்களின் பாதுகாப்பு, 10 அமைச்சுப் பாதுகாப்புப் பிரிவினரின் துணைக்காவல், 17 வாகன சாரதிகள், 3 உதவியாளர்கள், இவர்கள் அனைவருக்குமான அரச செலவுகள் என தனது அரச எசமான விசுவாசத்திற்கு பல சலுகைகளை பெற்றுக் குவித்துள்ளார்.

இவரின் தற்போதைய தோல்வி-
புரிந்துணர்வு ஒப்பந்தம்
தற்போதைய- பயம்-
புலிகள்மீதான தடைநீக்கம்பற்றிய பேச்சு
தற்போதைய- பலம்
சந்திரிகாவின் காவடி..?
எதிர்கால நிலை- கேள்விக்குறி..!

# நறுக்கென....

## வரதரின் வார்த்தைகள் —1

எமது அணி இராணுவத்துடன் இணையப் போவது இல்லை ஆனாலும் அணியிலுள்ள தனிப்பட்டவர்கள் தமது சுய விருப்பின் பேரில் இராணுவத்தில் இணைய விரும்புகின்றனர் அதனை அணி தடுக்கமாட்டாது.' - இது முன்னாள்; இந்திய படையின் ஆக்கிரமிப்புக்காலத்து; வடக்கு-கிழக்கு மாகாணத்தின் முதலமைச்சராக இருந்தவர் எனக்கூறப்படும் வரதராசப் பெருமாளின் அண்மைக்காலப் பிரகடனமாகும்.

ஆக வரதர் தமது அணியில் தனிப்பட்டவர்கள் உள்ளார்கள் அவர்கள் அணியாக இல்லை... என்பதை ஒப்புக்கொண்டுள்ளார். அல்லது ஒரே கொள்கைப்பிடிப்புள்ள தனி மனிதர்களின் அணி தமது அணியல்ல என்பதை பகிரங்கப்படுத்தியுள்ளார்.

அது சரி... தனிமனிதர் என்றவகையில் வரதரின் நிலைப்பாடு தான் என்ன? இலங்கை இராணுவத்தில் இணைந்து கொள்வீர்களா...? மன்னிக்கவும் நீங்கள் ஏற்கனவே இந்திய இராணுவத்தில் ஒரங்கமாக இணைந்தல்லா ராஜஸ்தானில் ராஜ வாழ்வை அனுபவிக்கிறீர்கள்..!

## இதுவும்வரதரின் வார்த்தைகளே —2

'அரசும் புலிகளும் இந்தியாவில் பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்க வேண்டும்' - என இந்தப்பிரச்சினையில் இந்தியாவை இழுக்க முனையும் தவறாகும்' - இதுவும் வரதரின் அண்மைக்கால கருத்து வெளிப்பாடேயாகும்.

இந்தியாவுக்கு இந்தப்பிரச்சினையில் சம்பந்தமில்லை என கூறும் வரதர் பொ.ஐ. முன்னணி ஆட்சிக்காலத்தின் இந்தியா சம்பந்தப்படாத எந்தப் பேச்சுவார்த்தையும் வெற்றியளிக்காது என்ற தோரணையில் பேசியதை மறந்தே போய்விட்டார்.

இந்தியாவுக்கு இதில் சம்பந்தமில்லையென்றால் பேச்சுவார்த்தையின் ஒவ்வொரு நகர்வு குறித்தும் நோர்வே ஏன் டெல்லி அரசுக்கு விளக்கமளிக்க வேண்டும்?

ஆயுதக்கையளிப்பு என்ற நெருக்கடி வரதரை நல்லாக் குழப்பித்தான் விட்டது.

ஆமாம், அரசும் புலிகளும் இந்தியாவின் தென்மாநிலம் ஒன்றில்தானே பேச அனுமதி கோரினார்கள்... ராஜஸ்தானில் அல்லவே... பின்னர் வரதர் ஏன் பயப்படவேண்டும்? வரதருக்கே வெளிச்சம்!

## தோல்வியின் பின்னணியில்

சிறிலங்காவின் உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் ஜே.வி.பி.யினரை பலத்த ஏமாற்றத்திற்குள்ளாக்கிவிட்டதாம். பொதுசன ஐக்கிய முன்னணியின் 'கூடாத' கூட்டு இந்த படுதோல்விக்கு முக்கிய காரணம் என்ற விமர்சனமே கட்சிகள் கடுமையாக முன்வைக்கப்படுகிறதாம்.

சமாதான நடவடிக்கைகளை ஆதரிக்கும் நோர்வே, அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளை மேற்குலக ஆக்ரமிப்பாளர் என்று விமர்சித்துவரும் ஜே.வி.பி.யின் தலைவரும் லண்டன் வாசியுமான சோமவன்ச அமரசிங்க கூட திடீரென்று உள்ளூர் தலைமைக்கு பேச்சுவார்த்தை செயற்பாடுகளுக்கு எதிர்ப்புக் காட்டும் கடும்போக்கை கைவிடுமாறு அறிவுறுத்தல் செய்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

சாதுவா சோமவன்ச இந்த முடிவுக்கு வர சூழுத்தம் கொடுத்தது எது?

'பிரிட்டிஷ்' தான் என அவதானிகள் கூறுகிறார்கள். இல்லையேல் அவரையும் பிரிட்டனில் இருந்து நாடுகடத்தும் எண்ணம் அந்நாட்டு அரசுக்கு உண்டாம். (!?)

ஏகாதிபத்திய நாடுகள் என விமர்சித்துக் கொண்டு, அந்த நாடுகளில் தஞ்சமடைந்து வாழ்வோர் எப்படிப் புரட்சி வாதிகளாக இருக்க முடியும்?

சோமவன்ச இதற்கு என்னபதில் கூறப்போகிறார்.

## புரிந்துணர்வுப் பிரச்சினை

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னரும் வடக்கிலும் கிழக்கிலும் படையினரின் சில பிரிவினர் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் மகிழ்ச்சியையோ, நம்பிக்கையையோ தருவதாக இல்லை.

படையினரின் ஒருபிரிவினருக்கும் அரசுக்குமிடையே 'புரிந்துணர்வு இல்லா நிலை நிலவுவதே' இதற்கு காரணம் என்று கூறப்படுகிறது.


இராணுவம் அரசியல் மயமாக்கப்பட்டமை காரணமாக ஏற்பட்ட விளைவுகளே இதற்கு காரணமாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசின் சமாதான செயற்பாடுகளுக்கு இசைவாக செயற்பட இராணுவக் கட்டமைப்பில் மாற்றங்களை உடனடியாக ஏற்படுத்திக்கொள்ள ரணிலின் அரசுக்கும் ஜனாதிபதிக்குமிடையேயான சில பதவியேற்புக்கால இணக்கங்கள் தடையாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது எனவும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஆக, புரிந்துணர்வின்மை சகலமட்டங்களிலும் வெவ்வேறு வடிவங்களில் இருக்கவே செய்கிறது. இதுவே சகல குழப்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் காரணம்.

அதுவும் ஆயுதப் படையினருக்கும் அரசுக்கும் புரிந்துணர்வுக்குறைபாடு இருப்பதை விடவும் ஆபத்தானது எதுவுமில்லை.

○ துவிதன்



வடமராட்சியிலை யுத்த நிறுத்தம் அமுலிலை இருக்கிற இந்த நேரத்திலை கூட இந்த ஆமிக்காரர்கள் சனங்களை சும்மா இருக்கவிட மாட்டாங்கள் போல இருக்கு எங்கட மீனவர்களை மிரட்டுறதும், அவர்களை தொழில் செய்ய விடாது முட்டுக்கட்டை போடுறதும், மீண்டும் மீன்பிடிக்க நேரக்கட்டுப்பாடு கொண்டு வரப்படும் எனஎச் சரிப்பதும் அவ்வளவு நல்ல ஆரோக்கிய மான செயற்பாடு இல்லைப்பாருங்கோ...

எட இந்த யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்து மூன்றுமாசமாகப்போகுது இப்ப இவைக்கு என்ன திடீரென்றுபழைய குணம் வருகுது எண்டு யோசிக்கிறியளோ''

அது ஒண்டும்இல்லைப்பாருங்கோ இந்த யாழ்.கண்டிவீதி மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிட எல்லே நடவடிக்கை எடுத்து வருகினம். எட்டாம் திகதி திறந்து விட்டால் யாழ். குடாநாட்டுக்கு விடுதலைப்புலிகள் அரசியல் பணி செய்யவருவினம் எண்டுகதை அடிபட்டவுடன் இவ்வளவு நாளும் ஆக்கிரமிப்புக்குள்ள சிக்குப்பட்டு பயந்து ஒடுங்கி இருந்த எங்கடை சனத்துக்கு சந்தோசம் வந்து விட்டுது.

உடனை அவையள் புலிகளைவாழ்த்தியும், வரவேற்றும் வடமராட்சியிலை சுவரொட்டியளை ஒட்டி ஆரவாரம்செய்திருக்கினம்''

இது இந்த ஆமிக்காரங்களுக்கு பீதியை ஏற்படுத்திப் போட்டுது. அட இவ்வளவு காலமும் தங்கடை கட்டுப்பாட்டிலை இருந்து தாங்கள் சொன்னதுகளுக்கெல்லாம் சலாம் போட்டு இருந்த சனங்கள் இப்ப என்னெண்டால் தங்களையும் மதிக்காது நிமிர்ந்து எல்லே நடக்குதுகள். இனி என்ன என்ன எல்லாம் நடக்குமோ எண்டு தங்களுக்குள்ளேயே எண்ணி எண்ணி குமையத் தொடங்கிவிட்டினம். அந்தக் குழப்பத்தின் வெளிப்பாடு தான் இந்த மிரட்டல்கள் எண்டு விளங்குதுதானே. புலியள் என்ன வானத்திலை இருந்து குதிச்சவையோ? அவையளுக்கு சொந்தபந்தம் உறவு எல்லாம் இல்லை. எண்டே இவை நினைக்கினம். அதோட சனங்கள் என்ன தங்கட சுய நலத்திற்காகவே இவ்வளவு தியாகங்களையும் செய்துகொண்டு வருகினம்? ஏதோ புலிகளை சனங்கள் மறந்திட்டுதுகள். இனி புலிகள் வந்தாலும் சனங்கள் தங்களோடதான் இருப்பினம் எண்டுதான் இவையள் தப்புக்கணக்குப் போட்டிருக்கினம் போல

''இப்ப சனங்கள் பொங்கி எழுந்ததுடன ஒண்டும்செய்ய ஏலாமல் தங்கட ஆற்றாமையை இந்த அப்பாவிச் சனங்கள் மேலகாட்டப்பார்க்கினம் போலகிடக்கு.''

''என்னதான் இவைசெய்தாலும் புலிகளையும் மக்களையும் பிரிக்க முடியாதென்ற உண்மையை இவை இனியும் புரிந்துகொள்ளாமல் இருப்பதுதான் பரிதாபமான விஷயம் பாருங்கோ...''

# முறியப்போகும் பொருளாதாரத்திற்கு முட்டுக்கட்டை போட்டு நிறுத்துமா ரணிலின் அரசு...?

○ வா. லோகேஸ்வரன்

இலங்கை சுதந்திரமடைந்துபன்னிரண்டாவது பாராளுமன்றத்தில் புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசு பதவிஏற்றுள்ளநிலையில்மத்தியவங்கி ''கடந்த 53 வருடங்களில் இலங்கை மிக மோசமான பொருளாதாரப்பின்னடைவை தற்போது எதிர் நோக்கி உள்ளது'' என எச்சரித்துள்ளது. பதவி ஏற்ற புதிய அரசு மிகப்பெரும் சவால் ஒன்றை எதிர்கொள்ளவுள்ளது என்பதுஇதனால் தெளிவாகியுள்ளது. பிரதமர் உட்பட ஏனைய அமைச்சர்களும் பொருளாதாரத்தை கட்டி எழுப்பி நாட்டின் அபிவிருத்தியை இலக்காக நோக்கிக்கொண்டு செல்வதே எமது கொள்கை என அழுத்தம் திருத்தமாக பேச்சளவில் கூறிவருகின்றனர். இப்பொருளாதார அபிவிருத்தி செயற்பாடுஎன்பது மிகவும் இறுக்கமானதும் கடினமானதுமான ஒன்று என்பது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயமாகும். இலங்கைப்பொருளாதாரத்தில் பெரு வருமானம்களைஈட்டித்தரும் முயற்சிகளாக.

1 முதனிலைப்பொருள்ஏற்றுமதி;

11 கைத்தொழில் ஏற்றுமதி.

111 கனிப்பொருள் ஏற்றுமதி.

1 வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி;

என மத்திய வங்கியே பாகுபடுத்தி உள்ளது. இதில் விவசாய ஏற்றுமதி அடிக்கடி உலகசந்தையில் விலைத்தளம்பல்களிற்கு உட்பட்டு வருவாய்தளம்பலடைவதும் தேயிலைக்கு பதிலாக புதிய பானப்பயிர் வருகையும், இயற்கை றபருக்கு பதிலாக செயற்கைறபர்வருகை போன்ற காரணங்களினால் இவற்றின் ஏற்றுமதி வருவாய்கடந்த25 வருடங்களில் மிக மோசமாக வீழ்ச்சி அடைந்துள்ளது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் கைத்தொழில் ஏற்றுமதியில் சிறிலங்காவில் தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி உயர்வருமானம் பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இவ் ஏற்றுமதி வருவாயானது உயர்ந்தளவில்இறக்குமதி உள்ளீடுகளை பயன்படுத்துவதினால்தேறிய ஏற்றுமதி சம்பாதிப்பு குறைவாகவே உள்ளது. அத்துடன் அரசு உயர்ந்தளவில் மூலதனச்செலவீனத்தின்கீழ்கட்டமைப்புவசதிகளை வழங்கி, வெளிநாட்டு முதலீடுகளை உயர்ந்தளவில் அதிக சலுகை அடிப்படையில் முதலிடவைத்து இவ் ஆடைக் கைத் தொழிலிற்கு உதவி வருகின்றது. இதனால் இலாபம், வட்டி, பங்கிலாபம் என்னும் போர்வையில் செலாவணி வெளிப்பாய்ச்சல் உயர்வடைதல் பொருளாதாரத்திற்கு பாதாகமே ஆகும். எனினும் அரசு தனதுகைத்தொழில் கொள்கையைஇளைய சமுதாயத்தினருக்கான வேலைவாய்ப்பு என்பவற்றிக்காக இக்கைத்தொழில் விருத்தி நடவடிக்கையினை மேற்கொண்டு வந்துள்ளது. இதேவேளை கனிப்பொருட்களும் வகைப்படுத்தப்படாத ஏற்றுமதிகளும் மிகக்குறைந்த மட்டத்திலேயே உள்ளன.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கான வருவாயைஅதிகளவு சேகரிப்பதில் சுற்றுலாத்துறை மிக முக்கிய இடத்தினை வகிக்கின்றது. ஆனால் இதுவும் கடந்த காலங்களில் பெரு வீழ்ச்சிப்போக்கிலேயே உள்ளது. இதற்கு காரணம் கொழும்பு நகரில்காணப்படும் குழப்பமான நிலையும் கொழும்பு நகரில் நடைபெற்ற குண்டு வெடிப்புக்களும் ஆகும் கட்டுநாயக்க விமான நிலையத்தாக்குதல் வெளிநாட்டவர் வருகையை மிக மோசமாகப் பாதித்துள்ளது. இதுவும் இலங்கையின் வருமானத்தை மிக மோசமாகப்பின்னடைய வைத்துள்ளது.

இத்தகைய குறைந்த வருமானத்தைகொண்டு 20 மில்லியன் மக்கள் வாழும் இலங்கையில் பொருளாதார செயற்திட்டங்களை மேற்கொள்வது என்பது கடினமான நிலையில் அரச செலவினத்தில் முதலிடம் பெறுவது''பாதுகாப்பு செலவீனம்'' ஆகும் இது 1977 ஆம் ஆண்டின்பின் ஐ. தே. கட்சிஆட்சியில்இருந்த காலப் பகுதியில் இருந்து மிகவேகமாக விரைந்து அதிகரித்து செல்லும்நிலை காணப்படுகிறது. வடக்கு - கிழக்கில் நிகழும் யுத்தத்தினால் பெருமளவு நிதி இராணுவத்திற்கு செலவுசெய்வதை இட்டு உயர்பீடம் யாவும் கவலை கொண்டதாக தெரியவில்லை. இவ் உயர்வானசெலவீனமே இலங்கைப் பொருளாதாரத்தை அஸ்தமன நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது என்பதை யாருமே மறுப்பதற்கில்லை. இதனால் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கை மேற்கொள்ள நிதி இன்மையும் பொருளாதாரத்திட்டங்களை இடை நடுவே கைவிடவேண்டிய அபாய நிலையும் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இப்பாதுகாப்பு செலவீன அதிகரிப்பினால் ஏற்படப்போகும் எதிர் கால பொருளாதார அபாய நிலைக்கு அரசும் அரச ஆதரவாளர்களும், இனவாதிகளும், பௌத்தமகாசங்கத்தினரும் கவலை கொள்வதாகவோ அக்கறைப்படுபவர்களாகவோ தென்படவில்லை) மத்தியவங்கி, சர்வதேச நாணய நிதியம் (ஐ எம். எவ்.) போன்றவை எச்சரிகை செய்தும் இவர்களின் இனவாத போக்கும் கடும் போக்கு நிலையும் கவலை கொள்ள வைக்க வில்லை என்பதே உண்மை நிலையாகும்.

ஆனால் புதிய அரசு கடந்த ஆட்சியாளர்கள்பட்டபாட்டினையும் கெட்ட கேவலங்களையும் அறிந்து திருந்துமாப் போல் உள்ளது. இவர்களும் கதிரை ஏற முன்னர் பொ. ஐ மு. போன்று அளவுக்குமீறிய வாக்குறுதிகளை தேர்தலில் வெற்றிபெறுவதனை நோக்காக கொண்டு வளங்கினர். ஆனால் கதிரை ஏறியபின்அவ் வாக்குறுதிகளைகுறைத்துள்ளமையும் நோக்கத்தக்கதாகும். எது எப்படி இருப்பினும் அரசு 3ஆம்தரப்பு மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேசி ஓர் உறுதியான நிரந்தர அரசியல் தீர்விற்கு வந்தாலேபொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்என்பது தூக்குமேடையில் கிடைக்கும் ஞானவிளக்கம் போல அரசுக்கு கிடைத்திருப்பதாக தெரிகின்றன.

தமிழ் மக்களைப்பொறுத்தளவில் சடந்த காலங்களில் கடந்து வந்த பாதை மறப்பதற்கில்லை. அவர்கள் ஒவ்வொருவரது வாழ்வும், வரலாறும் கண்ணீரும் இரத்தமும் கலந்தவையாகும். கடந்த வாழ்வை உயிர் உள்ள வரை மறக்கமாட்டார்கள் விழிகளை மூடி குழிகளில் உறங்கும் இரத்த உறவுகளின் கனவை மறக்க மாட்டார்கள். உறுதியான தலைமைத்துவம் அவர்களிடம் இருப்பது நம்பிக்கையூட்டும் விடயமாகும். புதிய அரசு வழங்கும் வாக்குறுதிகள் எம் மக்களை பூரிப்படையவோ-நிம்மதிப் பெரு மூச்சு விடவோ- நியாயமானதை செய்யுமாஎன்பதே கேள்வி எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதுமான அரசியல் தீர்வையே மக்கள் எதிர்பார்க்கின்றனர் இதனை ஆட்சிபீடம் ஏறிய ரணிலின் அரசும் பேரினவாதப் போக்காளரும், பௌத்தமகா சங்கத்தினரும் நிறைவேற்ற முன்வருவார்களா?

2002 இன் முதல் காலாண்டுப் பகுதியான இவ்வேளையில் இலங்கை கடன் பொறிக்குள் அகப்பட்ட நிலையினையையே மத்திய வங்கி அரசிற்கு எச்சரித்துள்ளது அதாவது பொ. ஐ. முன்னணியினரான சந்திரிகா அரசு பெருமளவில் கடன் பெற்றமையானது இவ்வாண்டில் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தீர்ப்பனவு 2000 கோடி ரூபாவினை விட அதிகமானது. இத்தொகையை இவ்வாண்டில் செலுத்தின் மீண்டும் கடன்பெறவேண்டிய 'கடன் பொறி' நிலையை ஏற்படுத்தும். கடன் தொகையைச் செலுத்தின் பொருளாதார செயற்திட்டங்களுக்கும் மற்றும் சமூக நலத்திட்டங்களுக்கும் செலவிடப் பணம்இருக்கமாட்டாது. எனினும் கடனை செலுத்தாவிடின் இலங்கையின நிதித்துறையின் நம்பகத்தன்மையைபாதிக்கும். இது எதிர்கால... உதவிகளைப்பெறும நடவடிக்கைகளிற்கு அபாயமானதாக இருக்கும் என மத்திய வங்கியே தெரிவித்துள்ளது. மேலும் இலங்கைப் பொருளாதாரம் வளராமல் சுருங்கிக் கொண்டு செல்வதை கடந்த காலபுள்ளிவிபரங்களை எடுத்துக்காட்டுகின்றன. இது இலங்கைப் பொருளாதாரம் மற்றிலும் வீழ்ச்சியடைந்து போகக்கூடிய அபாய நிலையாக உள்ளது. இதற்கு முட்டுக் கொடுப்பதற்கான கருத்தாக புதிய பிரதிநிதி அமைச்சர் பொருளாதார சீர்திருத்தங்களை செயற்படுத்த தற்போது புதிய அரசு திட்டமிட்டு வருகின்றது என்ற கருத்தை முன்வைத்துள்ளார்.

எது எப்படி இருப்பினும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான உறுதியான நியாயமான அரசியல்

> பாதுகாப்பு செலவீன அதிகரிப்பினால்ஏற்படப்போகும்எதிர் கால பொருளாதாரஅபாயநிலைக்கு அரசும் அரச ஆதரவாளர்களும், இனவாதிகளும், பௌத்த மகாசங்கத்தினரும் கவலை கொள்வதாகவோ அக்கறைப் படுபவர்களாகவோ தென்பட வில்லை.

தீர்வு காணப்படவில்லையாயின் பொருளாதாரத்தை மேம்படுத்த எவ் அரசினாலும் முடியாது என்பதே இன்றைய யதார்த்தமாகும். உறுதியான அரசியல்தீர்வு காணப்பட்டாலே இராணுவ செலவீனம் குறைக்கப்பட்டு அபிவிருத்தி நோக்கி நிதி நகர்த்தப்படும். அத்துடன் பங்குச் சந்தை வளர்ச்சி ஏற்படுவதுடன், முதலீடுகள் உயர்த்தப்பட்டு உற்பத்தி அதிகரிக்கும், சுற்றுலா மற்றும் கைத் தொழில்கள் வளர்ச்சி பெறும். வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் சமூகநலசேவைகள் வளர்ச்சிபெற்று வாழ்க்கைத்தரம்உயர்வடையும். இதனாலேயே பொருளாதாரம் வளர்ச்சி பெற்று அபிவிருத்தி ஏற்படும் என்றும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப ஒரு உறுதியான அரசியல் தீர்வு முனவைக்கப்படாவிடின் முறியப் போகும் இலங்கைப் பொருளாதாரத்திற்கு எவராலும் முட்டுக் கட்டை கொடுத்து நிமிர்த்த இயலாது.



## மதவடி மயிலர்

செய்தி:-

சனாதிபதி செயலக ஊழியர்களை 40 சத வீதத்தால் குறைக்கமுடிவு

மயிலர்:-

கழுதை தேஞ்சு கட்டெறும்பான கதை பாருங்கோ
தன்னால தான் கெட்டதுக்கு அம்மணி ஆரைநோகப்போறாவாம்

செய்தி;-

மட்டு-வில் வாகனத்தை விட்டிறக்கி படையினர் சோதனை
இறங்கமறுத்த இளைஞன் கைது

மயிலர்:-

இரண்டுபேர் முட்டுப்பட்டால் மூன்றாம் நபர் குட்டுப்படுகிறது வழமைபாருங்கோ!
அம்மணியிவரை கட்சிக்காரர் போலகிடக்கு...

செய்தி:-

கொழும்புத்துறையில் பெண்ணின் எலும்புக்கூடு

மயிலர்:-

விதைத்த விதையை விடவேறொன்று முளைக்காதுபாருங்கோ
ஆத்தில போட்டதே குளத்தில வரும குழிதோண்டிப்புதைக்க கொழும்புத்துறை மட்டும்விதி விலககே

செய்தி:-

இராணுவ புலனாய்வுப் பிரிவை மறு சீரமைக்க பலகல்ல நடவடிக்கை

மயிலர்:-

நொந்து போன மாட்டுக்கு நாணயம் குத்தியென்ன நட்டந் தான் பாருங்கோ
வேறவழியில்லைத்தானே முயன்று பாக்கட்டுமன்

செய்தி:-

சமாதான முயற்சிகளில் இந்தியாவின் ஆலோசனையை பெற்று வருகிறோம்.
-சமாதான குழு பிரதிநிதி சொல்கெய்ம்-

மயிலர்:-

பக்கத்து விட்டுத் துன்பத்தில் பங்கெடுத்தால், நட்டமெண்டு தட்டிக்கழிச்சவை பாருங்கோ கோல் கெயுமுக்கு என்ன சொல்லப் போகினம் எண்டுபாப்பம்...!

# திரைப்படம்எடுப்பது;


# சில குறிப்புகள்....

''கீழைத் தேசத்திற்கான ஒரு திரைவடிவத்தை யாராவது தேடினால்அவர்அதனை சந்தேகத்திற்கிடமின்றி 'அகிராகுரோசோவாவின்' படங்களில் காணமுடியும்''

'அகிராகுரோசோவா' உலகின் மிகச் சிறந்த திரைப்பட இயக்குநர்களில் ஒருவர்.ஓவியர், திரைப்படவளாகர்த்தர், இயக்குநர் எனப் பரிமாணங்களைக் கொண்டவரான குரோசோவா தன் திரைப்படங்களினூடாக உலகைப் பிரமிக் வைத்தவர்

'செவன் சமுராய்' 'ரஷோமன்' 'காகேமுஷா' போன்ற பல ஜப்பானியர்கள்குரோசோவாவின் பெருமைக்கு அடையாளம் காட்டுவன...

திரைப்படம் தொடர்பான அவரின் கருத்துக்கள் சில இங்கே தரப்பட்டுள்ளன.



சினிமா என்றால் என்ன? இந்த கேள்விக்கு பதில் தருவது சுலபமன்று. வெகு காலத்திற்கு முன்னர் தனது பேரக் குழந்தையால் எழுதப்பட்டு தனது காலத்தில் மிக முக்கியமான உரைநடை பகுதிகளில் ஒன்றென ஜப்பானிய நாவலாசிரியர் ஷிகாநபோயா ஒருகட்டுரையை இலக்கியப் பத்திரிகையில் வெளியிட்டார். அதன் தலைப்பு 'எனது நாய்'. அதன் சாரம் பின் வருமாறு ''எனது நாய் ஒரு கரடியை ஒத்திருக்கிறது அது வளைக்கரடியின் தோற்றமும் கொண்டிருந்தது; அது ஒரு குள்ள நரியையும் ஒத்திருக்கிறது''. இக் கட்டுரை நாயின் விசேஷ குணாதிசயங்களை விலங்கினப் பிரிவின் அனைத்து மிருகங்களுடனும் ஒப்பிட்டிருந்தது. ஆனால் அக்கட்டுரை ''ஆனால் அது ஒரு நாயாக இருக்கிறபடியால் அது ஒரு நாயை மிக அதிகமாக ஒத்திருக்கிறது'' என்று முடிக்கப்பட்டிருந்தது. இக்கட்டுரையை படித்தபோது சிரித்து வெடித்தது எனக்கு நினைவிருக்கிறது. ஆனால் அது ஒரு முக்கியமான விஷயத்தை சொல்கிறது. சினிமா ஏராளமான கலைகளை ஒத்திருக்கிறது. சினிமாவில் இலக்கியப் பண்புகள் இருக்கிறதென்றால் அதில் நாடக குணங்களும் இருக்கின்றன. தத்துவ கோணம், ஓவியம், சிற்பம் மற்றும் சங்கீத குணங்களும் அதற்கு உண்டு. ஆனால் சினிமா இறுதியாக சினிமாதான்.

சினிமா அழகு என்று சொல்லத்தக்க ஒன்று இருக்கத்தான் செய்கிறது. அதை திரைப்படத்தில் மட்டுமே வெளிப்பாடு கொள்ளுமாறு செய்யமுடியும். மேலும் அதனுடைய இருப்புதான் ஒரு திரைப்படத்தை நெகிழவைக்கும் படைப்பாக்கும். அது சிறப்பாக வெளிப்பட்டிருப்பதை ஒருவர் பார்க்கும் பொழுது ஒரு அலாதியான ஆழ்ந்த உணர்வினை அனுபவிக்க முடியும். இந்த குணம்தான் மக்களை திரைப்படத்தை நோக்கி இழுக்கிறது என்றும்இந்த குணத்தை அடைய வேண்டிதான் திரைப்படகர்த்தா தனது படத்தை எடுக்கிறார் என்றும் நான் நம்புகின்றேன். வேறு வார்த்தைகளில் கூறினால் சினிமாவின் சாரம் இத்தகைய அழகில்தான் இருப்பதாக நான் நம்புகிறேன்.

ஒரு திரைப்படத்தை திட்டமிடும் பொழுது பலவிதமான எண்ணங்கள் அவை திரைப்படத்தில வருவன போன்று என் மனதில் தோன்றும். இவற்றிலிருந்து திடீரென ஒன்று முளைத்தெழும். இதை நான் பற்றிக்கொண்டு விரிவுபடுத்தத்துவங்குவேன். தயாரிப்பாளர் அல்லது சினிமாக் கம்பெனி கொடுத்த திட்டத்தை ஒருபோதும் ஏற்றதில்லை. ஒரு குறிப்பிட்ட விஷயத்தை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தெரிவிக்க வேண்டும் என்னும் எனது அவாவிலிருந்து மேலெழுப்பியவையே எனது படங்களாகும். எந்த ஒரு படத்தின் திட்டமும் ஏதோ ஒன்றை சொல்லவேண்டும் என்ற இந்த தேவையை வேராக கொண்டதாகும். இந்த வேரை போஷித்து ஒரு மரமாக வளர்ப்பது திரைக்கதையாகும். அந்த மரத்தில் மலர்களும் கனிகளும் தோன்றச் செய்வது டைரக்ஷன்?

இயக்குநரின் வேலை நடிகர்களுக்கு பயிற்சி கொடுப்பது. ஒளிப்பதிவு, ஒலிப்பதிவு. அரங்க நிர்மாணம். இசை, படத்தொகுப்பு, டப்பிங், ஒலிக் கலப்பு ஆகிய பல தரப்பட்ட பிரிவுகளையும் நிர்வகிப்பதே ஓர் இயக்குநரின் வேலையாகும். இவைகள் வெவ்வேறான பிரிவுகள் என்ற போதிலும் நான் அவற்றை தன்னிச்சையானவைகளாக கருதுவதில்லை. அவை அனைத்துமே டைரக்ஷன் என்னும் தலைப்பின் கீழ் ஒன்றோடொன்றுகரைவதை பார்க்கிறேன்.

ஒரு திரைப்பட இயக்குநர் ஏராளமான மனிதர்கள் தன்னைப் பின்பற்றி பணி செய்யுமாறு தூண்டவேண்டும். நான் ஒரு ராணுவக்காரன் இல்லை. ஆனால் நீங்கள் திரைப்பட யுனிட்டை ராணுவத்துடன் ஒப்பீட்டால் திரைக்கதை என்பது போர்க்கொடி, சைன்யத்தின் தலைவன் இயக்குநர் ஆகிறார். இதை அடிக்கடி நான் சொல்வதுண்டு. திரைப்பட தயாரிப்பு துவங்கிய கணத்திலிருந்து முடிகிற கணம்வரை என்ன நடக்கும் என்பதை யாராலும் சொல்ல முடியாது. இயக்குநர் எல்லாவற்றிற்கும் ஈடுகொடுத்து மற்றவர்களை தன் வழி நடத்திச்செல்கிற தலைமைப் பண்பினைக்கொண்டிருக்க வேண்டும்.

எடுக்கப்படவிருக்கும்திரைப்படத்தின்காட்சி வரிசைகள் ஏற்கனவே யோசிக்கப்பட்டிருந்தாலும் அதே வரிசையில் படமெடுப்பதென்பது சுவாரஸ்யமானதாக இல்லாமல் போகலாம். வியத்தகு விளைவினை உண்டு செய்கிறாற்போல் சில விஷயங்கள் எதிர்பாராது நடக்கலாம். அவற்றை சுருதி கெடாது படத்தினுள் சேர்க்க முடிந்தால்படத்தின் முழுமை மிகவும் அற்புதமாக இருக்கும். இது சூளையில் ஒரு பானைகூடப்படுவதைப்போன்றது. சாம்பலும் பிற தூகள்களும் பானைக்கான உருகி வரும் குழம்பில் விழுந்து நினைத்திராத ஆனால் அழகான தோற்றத்தை ஏற்படுத்தித் தரக்கூடும் இதே போன்று திட்டமிடாத சுவாரஸ்யமான விளைவுகள் இயக்குதலின் போது ஏற்படும் இவற்றை 'சூறை மாற்றங்கள்' என்று செல்வதுண்டு.

நல்ல நிரைக்கதையைவைத்துக்கொண்டுஒரு நல்ல இயக்குநர் சிறந்த படத்தை எடுக்க முடியும் அதே திரைக்கதையை வைத்துக்கொண்டு ஒரு சாதாரண இயக்குநர் சுமாரான படத்தை எடுக்க முடியும். ஆனால் மோசமான திரைக்கதையை வைத்துக்கொண்டு நல்ல டைரக்டராலும் ஒரு நல்ல படத்தை உருவாக்க முடியாது. மெய்யான திரைப்பட வெளிப்பாடினைப் பெற கமராவும் மைக்ரோபோனும் நீரையும் நெருப்பையும் கடக்க வேண்டும். இதுதான் ஒரு சரியான படத்தை உருவாக்குகிறது. திரைக்கதை இதை செய்வதற்கான திறனைக் கொண்டிருக்கவேண்டும்.

நல்ல திரைக்கதையை எழுத நீங்கள் உலகில் சிறந்த நாவல்கள். நாடகங்கள் ஆகியவற்றைப் படிக்க வேண்டும். அவை ஏன் மகத்தானவையாக உள்ளன என்பதைப் பற்றி எண்ணிப்பார்க்கவேண்டும். அவற்றைப் படிக்கும் பொழுது நீங்கள் அடையும் உணர்வு எங்கிருந்து வருகிறது? அதை உருவாக்க எழுத்தாளர் எந்தகைய ஆழமான உணர்வு கொண்டிருந்திருக்க வேண்டும். கதாபாத்திரங்களையும் நிகழ்ச்சிகளையும் படைக்க எத்தகைய துல்லியமான நிறமையை அவர் கொண்டிருக்க வேண்டும்? எல்லா விஷயங்களையும் முற்றாகப் புரிந்து கொள்கிற அளவிற்கு அவற்றைப் பயில வேண்டும். அத்தோடு சிறந்த படங்களையும் பார்க்க வேண்டும் சிறந்த திரைக்கதைகளையும் திரைப்பட இயக்குநர்களின் திரைப்பட கொள்கையையும் படிக்கவேண்டும். திரைப்பட இயக்குநர் ஆவதுதான் உங்கள் லட்சியம் என்றால் திரைக்கதை எழுதுவதில் நீங்கள் பாண்டித்தியம் பெறவேண்டும்.

''சிருஷ்டி என்பது ஞாபகம்'' என்று யார் கூறினார்கள் என்பது எனக்கு மறந்து விட்டது எனது அனுபவங்களும் இன்னும் பிறவும் எனது ஞாபகத்தில் தங்கி சிருஷ்டி நடைபெற உதவியுள்ளன: பூஜ்யத்திலிருந்து என்னால் எதையும் ஆரம்பிக்க முடியாது. சிறு வயதிலிருந்தே ஒரு நோட்புத்தகத்தில் எனதுவாசக அனுபவங்களைக் குறித்து வைப்பேன். ஏராள மாகக் குவிந்துபோன இவற்றை திரைக்கதை எழுதுமுன் நான் படிப்பது வழக்கம் எங்கேயோ இவை எனக்கு ஒரு வழி அமைத்துக் கொடுக்கின்றன. ஓரிருவரி வசனங்களுக்காகக் கூட இவற்றிலிருந்து நான் குறிப்புகள் எடுத்துக்கொண்டதுண்டு. எனவே நான் சொல்வதென்னவென்றால். படுக்கையில் படுத்துக்கொண்டு புத்தகத்தைப் படிக்காதீர்கள்.

1940 களில் இருவரின் துணையுடன் திரைக்கதை எழுதத் துவங்கினேன். அதுநாள்வரை நானே தனியாக எழுதினேன். அதனால்யாதொரு சங்கடமும் எனக்கு எழவில்லை. ஆனால் தனியாக அமர்ந்து எழுதும் பொழுது ஏற்படக்கூடிய அபாயம் என்னவெனில் உங்களது ஆய்வு ஒரு மனிதனைப் பற்றி ஒரு தலைப் பட்சமாக இருக்கக்கூடும். வேறு இரு மனிதர்களுடன் அமர்ந்து எழுதும் பொழுது அவனைப்பற்றி மூன்றுவிதமான கருத்துக்கள் எழுப்பப்பட்டு அவற்றில் நீங்கள் ஒத்துக் கொள்ளாதது குறித்து விவாதிக்கமுடியும். மேலும் இயக்குநர் தனக்கு சுலபமாக வரக்கூடிய பாணியில் கதாநாயகனையும் கதையையும் படைத்து விடுவார். இரண்டு பேருடன் சேர்ந்து எழுதும் பொழுது இந்த அபாயத்தையும் தடுக்கமுடியும்.


சிறந்த திரைக்கதைகள் வெகு குறைவான வியாக்கியானங்கள் கொண்டிருப்பதை நீங்கள் குறிப்பபாக கவனிக்கவேண்டும். விவரமான பகுதிகளுக்கு மேலும் வியாக்கியானம் தருவது ஆபத்தில் போய் முடியும். கதாபாத்திரத்தின் ஒரு குறிப்பிட்ட மனோநிலையை விளக்குவதுஎளிது. ஆனால் அதை நுட்பமான செயல்களுடனும் வசனங்களுடனும் விவரிப்பது கடினம். அதே சமயம் அது இயலாத ஒன்றல்ல. பெரும் நாடகங்கள் மட்டுமின்றி 'நன்கு வெந்த' துப்பறியும் நாவல் வாசிப்பும் இதனைப் பெருமளவு கற்றுக்கொடுக்கும்.

நடிகர்களின் ஒப்பனை அறையில் நான் ஒத்திகைகளைத் துவக்குகிறேன். முதலில் வசனங்களை திரும்பச் சொல்லுமாறு பணித்து விட்டு மெல்ல அசைவுகளை ஆரம்பிப்பேன். மேக்சப் உடை, அலங்காரம் ஆகியவற்றுடன் தான் இதைத் துவக்குவேன்; பின்னர் நாங்கள் இதை செட்டில் திரும்ப நடத்துவோம். ஒத்திகைகள் பூரணமாக செய்யப்படுவதால் படப்பிடிப்பு குறைந்த நேரத்தில் நடைபெற்று விடும். நடிகர்களை மட்டுமல்ல கமரா அசைவுகள், ஒளியமைப்பு எல்லாவற்றையும், எல்லாகாட்சிகளின் அனைத்து பகுதிகளையும் ஒத்திகை பார்க்கிறோம்.

ஒருநடிகன் கமராவைப் பற்றி தனது சுய உணர்வினை வெளிப்படுத்துவது மிகவும் மோசமானது. 'கமரா ஓடட்டும்' என்றவுடன் நடிகன் விதிர்த்து தனது பார்வைக் கோட்டினை மாற்றிக்கொண்டு செயற்கைத்தனத்தைக் கொண்டு வந்துவிடுகின்றன- இந்த சுய உணர்வினை காமிரா காட்டிக் கொடுத்துவிடும்: 'நான் எப்பொழுதும் சொல்வது இதுதான்' உனக்கு எதிரில் உள்ள நடிகனிடம் பேசு இது மேடையல்ல முன்னாலுள்ள ஓடியன்ஸிடம் பேச கமராவைப் பார்க்கத் தேவையில்லை. ஆனால் கமரா எங்கே இருக்கிறது என்பதைத் தெரிந்துகொண்டு விட்டால் நடிகன் தன்னையுமறியாது மூன்றில் ஒரு பங்கிலிருந்து பாதிவரை அதன் பக்கமாகதிரும்பி விடுகிறான். ஆனால் பல கமராக்கள் செயற்படும் போது அவனால் தன்னை எந்த கமராபடம் பிடிக்கிறது என்பதைக் கண்டு கொள்ள முடியாது.

படப்பிடிப்பின் போது இயக்குநரின் பார்வையில் சின்னஞ்சிறு விவரம் கூட தட்டுப்பட வேண்டும். ஆனால் இதற்கு அர்த்தம் செற்றை உற்றுப்பார்க்கவேண்டும் என்பதல்ல. கமராக்கள் சுழல்கிற பொழுதுநான்நடிகர்களைஎப்போதாவது தான் பார்ப்பேன். எனது பார்வையை வேறு எங்கோ நிலைக்க விட்டிருப்பேன். ஏதாவது தவறு நடைபெற்றால் இதன்மூலம் எனக்கு உடனே தெரிந்துவிடும். ஒன்றைக் கவனிப்பது என்றால் அதையே உற்று நோக்கிக்கொண்டிருக்கவேண்டுமென்பதல்ல. இடைக்காலத்தில் வாழ்ந்த நோ நாடகாசிரியரும் கொள்கைப் புனைவாளருமான ஸியாமி (Zeami) விலகிய பார்வையுடன் 'கவனித்தல்' என்று இதையே கூறினார் என நம்புகிறேன்.

தொடரும்...




# மழலைச் செல்வங்கள்; மலைக்கவைக்கும் உண்மைகள்

குழந்தைச் செல்வங்களே ஒரு நாட்டின் முதுகெலும்பாகும். வேகமாக மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப நாமும் குழந்தைகளை புத்தி சாதுரியமாக வளர்க்கவேண்டியதேவை யாவருக்கும் உரியதாகும்; சர்வதேச உளவியல் ஆய்வாளர்களும் வைத்திய நிபுணர்களும் குழந்தைகள் பற்றிய ஆய்வுகளை செய்து பல மலைக்கவைக்கும் உண்மைகளை இவ்வுலகுக்கு தந்துள்ளார்கள்.

குழந்தையின் மூளைவிருத்தியின் பெரும் பகுதி மூன்று வயதுப் பிராயத்தை அடைய முன்னர் நிகழ்கின்றது.

பெரியவர்கள் என்னநடக்கிறது என்பதை உணர முன்னரே சிசுவின் மூளைக்கலங்கள் விரைவாக பெருகுகின்றன: நியுரோன்களுக் கிடையிலான தொடர்புகளும் ஆரம்பமாகின் றன. ஆயுள்கால நடத்தை போக்குகளும் நிலைபெற்றுவிடுகின்றன.

குறுகிய 36 மாத காலத்துக்குள் குழந்தைகள் நினைக்க, பேச கற்பதற்கான உய்த்துணர்ந்து தமக்குள்ள ஆற்றல்களை விருத்தி செய்துகொண்டும், பெரியவர்களானதும் பின்பற்றவேண்டிய விழுமியங்கள், சமூக நடவடிக்கைகள் ஆகிய வற்றுக்கான அத்திவாரத்தை அமைத்துக் கொள்ளுகின்றன.

ஆரம்பவருடங்கள் ஓர் இளம் உயிரில் இத்தனை பெரிய மாற்றங்கள் ஏற்படுத்துவதனாலும், அம்மாற்றங்கள் நீண்ட காலம் நிலைப்பன என்பதனாலும் பிள்ளையின் உரிமைகளை உறுதிப்படுத்தும் பணி வாழ்கையின் தொடக்கத்திலிருந்தே ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

பிள்ளையின் வாழ்க்கையில் தலையிடுவதற்கு மிகப்பொருத்தமான பருவம் பிறப்பில் இருந்து மூன்றுவயது வரையான காலமாகும். அந்தப்பருவத்தை விரையம் செய்யக் கூடாது;

குழந்தை பிறந்த முதற்கணம், மாதங்கள் வருடங்கள் ஆகியவற்றின் போது, அக்குழந்தையை தொடுதல், அசைத்தல் ஆகிய ஒவ்வொரு செயலும் அதன் மூளையில் பெரும் மின்சார இரசாயன அதிர்வுகளாக மாற்றம் பெறுகின்றன.

இவ்வேளைகளில் மில்லியன் கணக்கான கலங்கள் ஒன்றுக்கு ஒன்று தொடர்பு ஏற்படுத்தத்தக்க கோடிக்கணக்கான உணர்வுசார் அந்தங்கங்களை கொண்ட இணைய பின்னல் ஆக்கங்களை உருவாக்குகின்றன.

இந்தக்குழந்தைப்பருவத்தில்தான் போதுமான போசாக்கு, நல்லாரோக்கியம், சுத்தமானநீர் ஆகிய புற அம்சங்களைப்போலபெற்றோர், குடும்ப உறுப்பினர், ஏனைய பெரியவர்களுடான அனுபவங்கள், அணுகுமுறைகள் என்பனவும் குழந்தையின் மூளை வளர்ச்சியில் பெரும்பங்கை ஆற்றுகின்றன.

இந்தப் பருவத்தில் ஏற்படும் மூளை வளர்ச்சியே பின்னர் பாடசாலையில் முன்னணியில் திகழவும், விடலைப்பருவம் முதிர் பருவம் ஆகியவற்றின் குணாதிசயங்களை நிர்ணயிக்கவும் உதவுகின்றன.

குழந்தைகளை தூக்கிவைத்து கொஞ்சி மகிழும வேளைகளில் அவை ஆக்கவளம் பெறுகின்றன. பிற்காலத்தில் வாழ்க்கையில் ஏற்படுத்தக்கூடிய அழுத்தங்களை தாங்கும் வல்லமையை சிறு பிராயத்தில் பெறும் அன்பான பராமரிப்பு குழந்தைகளுக்கு வழங்குகின்றது.

இப்பருவத்தில் மூளையில் ஏற்படுகின்ற நெகிழ்ச்சியானது அதாவது பிள்ளைகளுக்கு அவசியமான பராமரிப்பு கிடைக்காவிட்டால் அல்லது பட்டினி, இம்சை, புறக்கணிப்பு ஆகிய துன்பங்களை பிள்ளைகள் அனுபவித்தால் மூளைவிருத்தி குன்றிவிடலாம்.

■ ■ ■

**குழந்தைப் பருவத்தில் ஏற்படும் மூளை வளர்ச்சியே பின்னர் பாடசாலையில் முன்னணியில் திகழவும், விடலைப்பருவம் முதிர்பருவம் ஆகியவற்றில் குணாதிசயங்களை நிர்ணயிக்கவும் உதவுகின்றன.**

■ ■ ■

குழந்தை கருவில் இருக்கும் போதும், பிறந்தமாதங்கள், வருடங்கள் போதும்சம்பவிப்பன அதன் ஆயுள்க் காலம்வரை நிலைபெறலாம். சிறுபிராயத்தில்பெற்றோர், பாலர்பாடசாலை ஆசிரியர்கள், பராமரிப்பாளர்கள் ஆகியோர் குழந்தையை எவ்வாறு பராமரிக்கின்றார்கள் என்பதைப் பொறுத்தே அக்குழந்தையின் உணர்வாந்த் விவேகம் உருவாகின்றது:

சிறுவர்கள் பாடசாலையில் கல்வி பயிலும் காலத்திலும் பிற்பாடு பொது வாழ்வில் ஈடுபடும் காலத்திலும் பிள்ளையின் குணாதிசயங்கள் அதாவது திடசித்தம், விடுப்புணர்வு, கருத்துப்படிவம், தன்னடக்கம் ஒட்டுணர்வு, தொடர்பாகவும், ஒத்துழைக்கவுமான விருப்பு ஆகியவற்றை நிர்ணயிப்பன குழந்தைப்பருவ பராமரிப்பே. பிள்ளைகள் வளர வளர ஆரோக்கியம், மேம்பாடு ஆகியவற்றில் திருத்தமடையவும், புதியனவற்றை கற்கவும் தமக்குள்ள கிலோசங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை மாற்றிக்கொள்ளவும், வல்லமை உடையவர்கள் என்பது உண்மையே. ஆயினும் ஆரம்பம் சரியாக அமையாவிட்டால் முதற்கோணல் முற்றிலும் கோணல் என்பது போல அவர்கள் தம் முழுமையான வளர்ச்சியோ திறமையோ அடைதல் அரிது:

ஒரு குழந்தை முகத்தை தன்கைகளால் மறைத்து வைத்திருக்கும் தன் தாய் அக்கைகளை எப்பொழுது எடுப்பாள் என்று ஆவலோடு பார்த்திருப்பதையும் முகம் தெரிந்ததும் மகிழ்ச்சியால் ஆர்பரிப்பதையும் அவதானித்து இருப்பீர்கள். திரும்பத் திரும்ப நடைபெறும் இச்சிறிய விளையாட்டின்போது ஒரு ஆச்சரியமான ஒரு விடையம் நிகழ்கின்றது. குழந்தையின் வளரும் மூளையில் உள்ள

ஆயிரக்கணக்கான கலங்கள் ஒரு சில வினாடிகளில் உள் உணர்வை புலப்படுத்திவிடுகின்றன. மூளையின் சிலகலங்கள் முடக்கி விடப்படுகின்றன: மூளைக்கலங்களில் ஏற்கனவே நிலைபெற்று இருக்கும் தொடர்புகள் வலுப்படுத்தப்படுகின்றன. புதிய தொடர்புகள்ஏற்படுகின்றன.

■

தொகுப்பு- செந்தமிழ்க்கீரன்

ஆதாரம்;- உலகச் சிறுவர் 2000

யுனிசெவ் நிறுவன

வெளியீடு:




''மகிழ்ச்சியான குழந்தை, தேசத்தின் பெருமை'' என்ற வசனம் வார்த்தைகளில் நிற்கிறதே தவிர இன்னமும் வாழ்க்கைக்கு வரவில்லை. நடைமுறைக்கும் வரவில்லை.

''குழந்தைக்கு வேண்டாம் தொழிலாளி அந்தஸ்து'' என்ற மனிதாபிமான வாசகங்கள் அமுலாக்கம் பெறாத அலங்கார வார்தைகளாக மட்டுமே நின்றுவிட்டன.

சிறுவர்கள் மீதான எசமானர்களின் தாக்குதல்கள் பற்றிய அண்மைக்கால பத்திரிகைச் செய்திகள் இதனை உறுதி செய்துள்ளன.

''சிறுவர்கள்குறைந்தபட்சவயதெல்லைவரை உழைப்பில் சேர்த்துக்கொள்ளப்படக்கூடாது'' என்ற ஐ நா. வின் சிறுவர் பிரகடனம், சுமார் நாற்பது வருடங்களின் பின்னரும் தன் இலட்சியங்களை முழுமையாக நிறைவேற்றியதாக தெரியவில்லை.

அபாயகரமான தொழில்கள் அனைத்திலும் பல கோடிக் குழந்தைகள் அடிமைகளாக உலகம் முழுவதும் - மனத்தளவில் மடிந்துபோன பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அறிவுத் தேடலின் மூலம் தேசத்தைத் தாங்கி நிற்கும் கற்றூண்களாகத் திகழவேண்டிய மாணவர்கள் குடும்பவறுமை காரணமாக பாதியிலேயே பள்ளிப் படிப்பை நிறுத்தித் தொழில் செய்யவேண்டிய பரிதாப நிலை இங்கும் வேரூன்றத் தொடங்கியுள்ளது.

''சிறுவர்களுக்குத் தேவைப்படும் அனைத்தையும் பெற்றுக்கொடுகக வேண்டிய கடப்பாடு மனித இனத்தைச் சார்ந்துள்ளது'' எனப் பிரகடனம் கூறுகிறது.

ஆனால் யதார்த்த நிலைமை மாறுபட்டதாக உள்ளது. வறுமையில் வாடும் பெற்றோர்களின் துயர் துடைக்கக் கடினமான தொழில்களைத் தாங்கும்சுமை தாங்கிகளாக குழந்தைகள் தம்மை மாற்றிக்கொண்டுள்ளனர்.

பெரும் சுமையைத் தாங்க நிர்ப்பந்திக்கப்படும் இக்குழந்தைகள், தமது வயதிற்கேற்பதுடுக்குத்தனங்களையும், மகிழ்ச்சியையும் முற்றிலும் தொலைத்துவிட்டு விருப்பு வெறுப்புடன் ஊமைக் குயில்களாக மௌனித்து நிற்கின்றனர்.

சிறிலங்கா அரசின் யுத்தம், இதுவரை காலம் இருந்து வந்த பொருண்மியத்தடை, மற்றும் பலஆக்கிரமிப்புக்களின் மறைமுக விளைவுகளில் இதுவும் ஒன்றாகும்.

வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் கைகோர்த்துத் தாண்டவமாடும் குடும்பங்கள் - அடகு வைப்பதற்கு வேறொன்றும் இல்லாத நிலையில்-தமது குழந்தைகளின் உழைப்பை அடகுவைக்கத் தொடங்கியுள்ளது.

குழந்தைகளின் உழைப்பை சுரண்டுவதுடன் அவர்களின் உடல் மன வளர்ச்சியைப் பாழ்படுத்தும் விஷ அம்புகள் சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலிருந்தும் எய்யப்படுகின்றன.

கட்டளையிட்ட வேலைகளையெல்லாம் கேள்வியின்றி - கர்ம சிரத்தையுடன் நிறைவேற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குவறுமை இவர்களை விலங்கிட்டு வைத்துள்ளது.

சிறுவர்கள் விடயத்தில் பெற்றோர்கள் அதிகஅக்கறை காட்டுவதென்பதும் அரிதாகிக்கொண்டே போகின்றது. குழந்தைத் தொழிலாளர்களை முற்றிலுமாக விடுவிப்பதென்பது எமது தேசத்தின் விடுதலையின் பின்பே அது சாத்தியமானதாகும்.

அதுவரையில்; தமது உரிமைகளை வென்றெடுப்பதற்குத் தொழிற்சங்கப்பலமோ, போதிய உடல்வலுவோ இல்லாத இந்தக் குழந்தைத் தொழிலாளர்களின் நலன்களைக் கண்காணிக்கவென தனியான நிர்வாக அலகொன்றை உருவாக்குவதன் மூலம் சருகாகிவரும் இவ் இளந்தளிர்களுக்கு நீர்வார்க்க முடியும்.

ஆதரவற்றவர்களுக்கு நேசக்கரம் நீட்டி வரவேற்கும் ''செஞ்சோலைகள்'' 'சிறுவர் இல்லங்கள்'' உள்ள இந்த தமிழீழமண்ணில் இந்தக் குயில்களின் குரல்கள் மட்டும் ஊமையாகிவிடக்கூடாது.

■ - க. ஜெயசீலன்



# க(வி)தைக் கலசம்

## பொறுமை

அவன் கட்டிலிலிருந்து எழுந்து அமர்ந்தான். காயங்களின் எரிவு குறைந்திருந்தது. அந்த அக்கா புன் சிரிப்போடு வந்து அவனுக்கு மருந்து கட்டி ஊசி போட்டாள்.

அவனுக்கு மனத்தில் ஏதோ நெருடியது:

''அக்கா என்னைமன்னிக்கோணும்''

''ஏன்?'' அக்கா புருவத்தை உயர்த்தியபடி கேட்டாள்.

''இல்லை நான் காயப்பட்டு வரேக்க வேதனையில உங்கள நல்லாப் பேசிப்போட்டன்''.

''அட அதுக்கே அப்படியென்டா நான் இப்ப எத்தின பேருக்கு மன்னிப்புக்குடுத்திருக்க வேணும்''

அக்கா சிரித்தபடி அடுத்த போராளியை கவனிக்க நடந்தாள்.

பொறுமை
பொதிந்திருக்கும் செயல்
அழகாய் நிறைவேறும்
இல்லையெனில்
அரை குறையாகி
ஆபத்தைத்தேடித்தரும்

■

## விழிப்பு

''அவை இப்ப எங்களுக்கு அடிக்கிறேல்ல''

''எல்லாச் சாப்பாடும் தருகினை''

''வடிவா குளிக்க விடுகின''

''படிக்க புத்தகம் கிடைக்குது''

அவர்கள் தங்களுக்குள் பகிர்ந்து சந்தோசப் பட்டார்கள்.

''காது சேக்காமல் போனதையும், நகங்கள் பிடுங்கப்பட்டதையும், குறிகள் சுதறப்பட்டதையும் மறந்திட்டியளோ''

ஒருவன் கூறினான்:

''இப்ப இதுகள் இல்லத்தானே''

அவர்கள் கூறினார்கள்.

''நீங்கள் அப்ப இருந்த சிறையிலதான் இப்பவும் இருக்கிறியள் எண்டத மறந்திடாதீங்கோ''

அவன் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினான். மற்றவர்களை மூடிய மாயை கலைந்து விழிப்பு வந்தது.

வரலாற்றை
வடிவாகப் பார்க்க வேண்டும்
அற்ப சுகங்களுக்காய்
அடிப்படையை
மறந்திடாது
விழித்திருப்பதே
வரலாற்றுக் கடமை

■

- பொலிகையூரான்



## சிறுகதை

# வாத்தியாரும் ஒரு சைக்கிளும் சில கனவுகளும்



ஹரன்சிவா

வன்னியிலை இருக்கிற சனங்கள் என்ன இரும்புகளையே தின்னுதுகள் சாமான் விட்ட நாள்துடக்கம் சைக்கிள் சைக்கிளாய் தான் போய்க்கொண்டிருக்கும் எண்டு வவுனியா பொயின்ரில நிக்கிற ஆமிக்காறன் கேக்கிறான்'' என்றபடி நாகராசர் படலையைத் திறந்துகொண்டு வளவுக்குள் வர ,ராசலிங்கம் வீட்டு முற்றத்து மாநாடு ஆரம்பமானது.

அன்றுதான் வவுனியாவால் வந்த நாகராசர் அங்கத்தே புதினங்களை 'உச்சுக்' கொட்டியவாறு அவிழ்த்துவிடத் தொடங்கினார். ''அங்கையிருக்கிற சைக்கிள் யாவாரக் கடையளெல்லாம் வெளிச்சுப்போய்க்கிடக்கு, இனி கொழும்பில இருந்து வந்தாத்தான் சாமான்'' என்று, சுருட்டை வாயின் ஒரு ஓரத்தில் வைத்தபடி கண்ணில் வியப்புத்தெரிய கூறிக்கொண்டிருந்தார்.

இந்த இடத்தில் இடைமறித்த பாலசிங்கத்தார் மூச்செறிந்தவாறே உரத்த குரலில்... ''அவங்களுக்களெங்க இந்த சயிக்கிளின்ர அருமை விளங்கப்போகுது. எங்கட சனத்தின்ர முதுகெலும்பே அதுதானே. சைக்கிள் சில்லு உருண்டாத்தான் எங்கட வாழ்க்கை உருளும் எண்ட நிலையிலைதானே வன்னிச்சனமிருக்கு: எங்கட காச கொள்ளையடிச்சு சுவசவாகனத்தில திரியிறவனுக்கு உது விளங்குமோ.'' ''அதவிடு தம்பி சைக்கிள் வருகுது வருகுது எண்டிறா, நானும் ஒரு சயிக்கிள் வாங்குவமெண்டு அலைஞ்சுதிரியிறன், அட கண்ணிலை காணேலாமக்கிடக்கு. அண்டைக்கு லொறீயிலை வந்து விலப்படுகிதெண்டு கோயிலடியிலை கதைச்சாங்கள் அங்க ஓடினன் அதுக்குள்ள எல்லாம் விலப்பட்டுப்போச்சாம்'' எனதனது அந்தரமான ஆதங்கத்தை வெளியிட்டார் அவர்.

''நீங்கள் உதைச்சொல்லுறியள் நானுமெல்ல அந்த லொறீலை சைக்கிள் வாங்கப்போன்னான் லொறியாலை இறக்கஇறக்க விலைப்படுகுது. ஒண்டை இறக்கினாங்கள் அதிலநெளிவு வளைவு ஏதேன் இருக்கோ எண்டு தட்டித்தடவி சுத்திப் பார்த்துக்கொண்டிருந்தன் அதுக்கிடேல இன்னொருத்தன் பில்போடுவிச்சுப்போட்டான் இப்படியிருக்கு இஞ்சை சயிக்கிள் யாவாரம்'' என்றான் அங்காலிருந்த சிவா.

''உப்பிடியெண்டா எல்லா லொறீலையும் சைக்கிளை கொண்டுவரலாம்தானே'' என்றார் பாலசிங்கத்தார். ''அதில ஒரு சிக்கல் இருக்கண்ணை'' என எக்கனோமிக்கல் ரீதியாய் விளக்கமளிக்க முற்பட்டான் சிவா ''அதென்னெண்டா அண்ணை ஒரு லொறீலை முழுச்சைக்கிளா ஏற்றிறதெண்டா 30சைக்கிள்தான் ஏத்தலாம். ஆனா அதை பாட்ஸா கொண்டாறதெண்டா 60 சைக்கிளுக்குரிய சாமான் கொண்டரலாம் இதாலை லொறிகாரர்: எப்பிடியும் கூடச்சாமான் கொண்டரத்தானே பாப்பாங்கள் அதுதான் சிக்கல்'' என்றான் அதோடை அவன் நிக்கேல்லை பாலசிங்கத்தாரின் சைக்கிள் வாங்கிற அந்தரத்துக்கு ஆப்புவைக் குமாப்போல எச்சரிக்கை யொண்டையும் விடுத்தான்.

''முந்தியொருக்கா சயிக்கிள் கொம்பனியொண்டின்ர ஸ்ரோர் ஒன்று எரிஞ்சதெல்லே. அப்ப சேதமான சைக்கிளையெல்லாம் தட்டி நிமித்தி றீகொண்டிசன் செய்துபோட்டு அந்தரப்பர்ற வன்னிச்சனத்துக்கு ஏற்றி அனுப்பிறாங்கள். அதப்போல வவுனியாவில இருக்கிற பழம் சைக்கிள்களையும் றீகொண்டிசன்செய்து புதுசு எண்டு ஏமாற்றி விக்கிற கும்பல்களும் மும்மரமாயிருக்கு இப்படியான சைக்கிள் வாங்கினவங்கள் பார், போக் உடைச்சிட்டு அதுவளைஞ்சிட்டு இதுவளைஞ்சிட்டுது எண்டு தலேலை கைவச்சுக்கொண்டிருக்கிறதா எனக்கு தகவல் கிடைச்சிருக்கு'' என்று தான்பெரியதொரு விசயத்தை புலனாய்வு செய்து கண்டுபிடித்துவிட்ட தான தோரணையில் ஸ்ரைலாக நின்றான்.

இப்படியே எல்லாரும் ஆளுக்காள் சைக்கிள்பற்றியே கதைத்துக்கொண்டிருக்க அந்தக்கதைகளை உள்வாங்கியவராக அந்த வளவுக்குள்ளேயே முன்வீட்டின் திண்ணையில் சாய்ந்தவாறு அமர்ந்திருந்த பெஞ்சனியர் சுப்பிரமணியம் வாத்தியார், முற்றத்தில் ஓங்கி வளர்ந்திருந்த பொன்னொச்சி மரத்தின்கீழ் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்: மரத்தின் நிழலைதவிர அந்த இடம் வெறுமையாகவே இருந்தது. அவர்மனதை ஏதோவொரு பாரம் அழுத்தியது. 'சா..' இப்படிச்செய்திட்டானே... இண்டைக்கு எவ்வளவு காலமாய் அதைநானும் என்னை அதுவும் கட்டிக்காத்துவந்தம்... நினைக்கையில் கண்கள் பனித்தன. சிந்தனை நான்கு தசாப்தங்களையும் அதற்கப்பாலும் சில வருடங்களையும் தாண்டி சென்றுகொண்டிருந்தது.

வழமையாக நடைபெறும் அரசியல் அரட்டைகளில் என்றால் வாத்தியார் 1958 இலதான் தொடங்குவார். அந்தக்காலத்தில் எண்டு துடங்கி பொன்னம்பலம், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, செல்வநாயகம்,குமாரசூரியர் எண்டும் பெரேரா பண்டா. டட்லி... எண்டும், உள்ள அரசியல் வாதிகளின் பெயரெல்லாம் சொல்லி நீட்டிமுழங்கி தேசியத் தலைவரிலை முடிப்பார். இண்டைக்கும் அவரின் சிந்தனேல்ல வந்ததும் 1958 தான். ஆனா அது வழமையானது போலல்ல வித்தியாசமானது.

58 இல் ஆரம்பம் அகதிகளாய் அவலநிலை எண்டது. முழு ஈழத்தமிழருக்கும் ஏற்பட்ட திருப்புமுனை இதவிட வாத்தியாரின் சொந்தவாழ்விலும் இவ்வாண்டு ஒரு திருப்பு முனையாகத்தான் அமைந்தது ஓ... அவருக்கு அந்த ஆண்டுதான் கலியாணம் நடந்தது:

ஏழ்மைக்குடும்பத்தில் வாழ்ந்து, தானே உழைத்து திரும்பத்திரும்ப சோதினை எழுதிவாத்தியாரான அவருக்கு மனைவி மாத்திரமன்றி ஒரு சைக்கிள் கூட துணையாய் கிடைத்ததும் அதே 58 இல் தான்.

அந்தநேரம் பவுண் கூட 59 ரூபாதான் விற்றது. ஆன ஒறிச்சினல் றலிச்சைக்கிள் 414 ரூபா. றலிச்சைக்கிள் வைச்சிருந்தா அந்த நாளேல மாப்பிளைக்கு தனி மரியாதை. சிறுகச் சிறுக சேர்த்த பணத்திலிருந்து வாத்தியார் தனது வாழ்வின் முக்கிய இலக்குகளில் ஒன்றை நிறைவேற்றும் பொருட்டு றலிசைக்கிள் வாங்கினார், மனிசன் அதோட விடேல்ல மேலும் 100 ரூபா செலவழித்து றிபிலெக்ரர் கல்லு, காண்டாமிருகச்சிலை எண்டு சோடனை சாமான்களை. கூட ஒறிச்சினல் றலிகொம்பனி சாமானாகவே பூட்டி அழகுபடுத்தினார். அவருக்கு மனிசி ஒரு கண்மாதிரி எண்டால் சைக்கிள் மற்றக்கண். அவரது மனிசி போலவே சைக்கிளும் அவருக்கு வாழ்க்கையில் பேருதவியாய்தானிருந்தது.

அந்த நாளேல வாத்தியார் வேலையெண்டுறது ஒரு சிக்கலான தொழில்தான். பெடியளை திருத்துறத்துக்காக கம்பத்தூக்கி அடிச்சிட்டா, சில துடுக்கான பெடியள் வாத்தியாற்றை சைக்கிள்ளதான் கைவைப்பாங்கள். ரயறுக்கு ஊசி ஏத்திறது, சீற்றை பிளேட்டால வெட்டிறது... எண்டு ஏதாவது பிரச்சினை கொடுப்பாங்கள். தொழிலையும் ஒழுங்கா செய்யவேணும், அதிலையும் தவறக்கூடாது... சைக்கிளையும் பாதுகாக்க வேணும். எண்டாலும் வாத்தியாருக்கு அதில பெரும் கஷ்ரமேற்படேல்ல. பள்ளிக்கூடத்தில தன்ர வகுப்பறைக்கு முன்னாலை தன்ர கண்படவே சைக்கிளை நிப்பாட்டுவார். இது குறித்து சக ஆசிரியர்கள் பகிடிவிடுகின்றபோதும் தலைமை வாத்தியார் அவரது குணமறிந்தோ என்னவோ ஒண்டும் சொல்லுறேல்ல.

அவருக்கு அடுத்தடுத்துப் பிறந்த 6 பிள்ளைகளுக்குக் கூட அந்தச்சைக்கிள ஒரு கார்போலதான் உதவியது. சாரதி எப்பவும் வாத்தியார்தான். முன் பின் என எந்தப்பிள்ளையும் ஏறலாம். ஓடேலுமெண்டா ஓடுவார் இல்லாட்டி உருட்டிக்கொண்டு போயாவது சேர்ப்பார்.

வாத்தியாருக்கு படிச்ச மனிசனெண்ட வகையிலும் சமூகசேவகன் என்ற முறையிலும் ஊருக்குள்ள நல்லமதிப்பு. எத்தனை பிரச்சினையெண்டாலும் இந்த சைக்கிளில் சென்றே தீர்த்துவைப்பார். சம்பந்தம் பொருத்துதல், காணிதீர்த்தல், வேலைவாய்ப்பு, கச்சேரி, கல்விக்கந்தோர் விசயம், வாசியசாலை பிரச்சினை, கோயில் பிரச்சினை ஆகியவற்றிலிருந்து செத்தவீடு செய்தல் ஈறாக எல்லா விடயங்களையும் சிரமேற்கொண்டு சரியாக செய்துமுடிப்பார்.

பணவசதி படித்த சிலர் காரை கொண்டுவந்து ''ஏறுங்கோவாத்தியார் இதில போய் விசயத்தை முடிச்சுக்கொண்டு வருவம்'' எண்டு சொல்லுவர். ஆனா அவரோ நான் மெல்ல மெல்ல இதில போறன் நீங்கள் குறித்த நேரத்துக்கு அங்கை வந்து சேருங்கோ என்று நாகரீகமான முறையில் மறுத்துவிடுவார். ஏனோ அவருகக்கு அந்தச்சைக்கிளில் போனாத்தான் ராசி. அவ்வாறே அவர்போகும் எந்தக்காரியமும் தோல்வியடையாது.

இதுமட்டுமன்றி எத்தனையோ ஊரடங்குச்சட்ட வேளையிலான சமூகசேவை நோக்குடனான திரிகைகளில் கூட இந்தச்சைக்கிள் வாத்தியாருடனும் தனித்தும் பங்குபற்றியிருககிறது. இந்தியன் ஆமிக்காலத்தில நடந்த சம்பவம் ஒன்றில், வாத்தியாரிட்டை படிச்சு பின்னர் போராளியான ஒருத்தன் ஒரு அவசர தேவைக்காக வாத்தியார் வீட்டுக்கு வந்தான். தேவையினவசியமுணர்ந்த வாத்தியாற்றமகனொருத்தன் வாத்தியாருக்கு தெரியாமலே சைக்கிளகுடுத்து விட்டுட்டான். அவன் போய் கொஞ்ச நேரத்தில சைக்கிள இன்னொருந்தன் மீளகொண்டு வந்தான். அவனிட்ட, ஏன்? சைக்கிள் தேவைப்படேல்லையே எண்டு கேட்க அங்கால அவங்கட நடமாட்டம் அதிகமாயிருக்காம் முட்டுப்பட வேண்டி வந்தா சைக்கிள் புக்கையாப்போயிடும், வாத்தியாரைப்பற்றி எனக்கு தெரியும் அந்தாள் இதில உயிரையேவைச்சிருக்கு தான் எப்பிடியும்வேறுவிதமா போய் சேர்ந்திருவன் இதைக்கொண்டு போய் கவனமாய் குடு என்டு அந்த நேரமே பழசாய்போன அந்தசைக்கிளை கவனப்படுத்தி அனுப்பினான் அந்தப்போராளி.

இவ்வளவு ஏன் 1995ல் இடம்பெற்ற வரலாற்று வலிகாமம இடப்பெயர்வு அதன் தொடர்ச்சியான வன்னிக்கான இடப்பெயர்வு என்பவற்றில் கூடவாத்தியார் குடும்ப அத்தியாவசிய பொருட்களை சுமந்தவாறு பங்கு பற்றியது. வன்னிவந்து கூடகாடு, மேடு. வயல், வரம்பு, வாய்க்கால், மழை வெள்ளம், புழுதி யென எல்லா இடமும் ஓடி ஓடி உழைத்தது றிம்முகளில் ஒட்டை விழுந்தது, பாரின் நப்பர்கூட பார்க்க முடியாதளவுதேய்ந்துவிட்டது வாத்தியாருடன் சேர்ந்தே முதுமையடைந்தது. வாத்தியாரும்சோர்வடைந்து விட்டார். அவரது சைக்கிள் ஓட்டமும் குறுகிப்போனது.


இந்த நிலையில்தான் திடீரென வாத்தியார் உசாரானார். அவரது சைக்கிள் புதுப்பொலிவு பெறும் நிலைக்கு வந்தது. ஓயாதஅலைகளினூடே படைநகர்த்தி புலிச்சேனை ஆனையிறவை கைப்பற்றியதாக செய்திபரவியது. அதுமட்டுமல்லாது புலிகளால் மீட்கப்படும் ஊர்கள் நகரங்கள் நாளுக்கு நாள் அறிவிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. ஒவ்வொரு ஊர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட அறிவிக்கப்பட வாத்தியாருடன் ஊர்செல்ல ஆயத்தமானது அந்த வண்டி.

அதனது சொந்த விற்பனை விலையைவிட பலமடங்கு செலவில் உதிரிப்பாகங்கள் வாங்கிப்பூட்டப்பட்டு புதுப்பொலிவாக்கப்பட்டது. வெற்றி வீரனாய் யாழ்செல்ல திட்டமிடப்பட்டது. எண்பது வயதைத தாண்டிவிட்ட வாத்தியார் சைக்கிளைத் திருத்தினார் அடிக்கடி காற்று அமத்திப்பார்த்தார். சில்லு பக்கிள் இருக்கிறதா என அடிக்கடி ஆட்டிப்பார்த்தார். மீட்கப்படும் இடங்களின் பெயர்தனது சொந்தஊருக்கு கிட்ட கிட்ட போக, பொன்னொச்சி மரத்தின்கீழ், படலைக்கு எதிர்ப்புறமாக வழமையாக விடப்படும் சைக்கிளை படலையை நோக்கி திருப்பிவிட ஆரம்பித்தார். போகும் வழியில் தாகம் தீர்க்க தண்ணீர்கொண்டுபோக தண்ணீர்கானும் வாங்கி வைத்தார். 2றாத்தல் பாண் 1கிலோ வாழைப்பழம், இந்த தண்ணீர்கான் குளிசை டப்பா இவ்வளவும் காணும் எப்பிடியும் நிண்டு நிண்டெண்டாலும் போய்ச்சேர்ந்திடுவன் என்று அடிக்கடி கூறத்தொடங்கினார்.

''போகலாம்'' என அறிவிக்கப்படும் திகதி அறிவிக்கும் காலத்தை எதிர்பார்த்து தினமும் வானொலிச்செய்திகளில் கவனம் செலுத்தலானார். இப்பிடித்தான் ஒருநாள் சந்தியில் நிண்ட வேப்பமரத்துக்கு கீழ சைக்கிளை விட்டுப்பூட்ட அடுத்திருந்த தேத்தண்ணி கடையில்செய்தி ஆரம்பஇசை போனது. செய்தியைக்கேட்பம் எண்டு வேகமாய் போனவர் செய்தி தொடங்க எதேச்சையாய் திரும்பிப்பார்த்தார் வாத்தியாரின் தலையில் இடி இறங்கியது. கையில திறப்பு வைச்சிருக்கிறார். சைக்கிளை காணேல்லை வாத்தியாருக்கு மண்டைக்குள் என்னென்னவோ எல்லாம் செய்தது மயக்கம் வருமாப்போல் இருந்தது. அப்போது செய்தியில் ''மனிதாபிமான ரீதியில், சிறிலங்கா படையினரை மீட்க இந்தியப்படையினர் தயாராகி வருகின்றனர்'' என அசரீரி போல் செய்தி கேட்டுக்கொண்டிருந்தது...

மயக்கம் தெளிந்த வாத்தியார் குழம்பிப்போனார். வாத்தியாருக்கு இழப்பெண்டது புதிதில்லை. அவரது பிள்ளைகள் கூட, காணாமல்போனோர் பட்டியல், மாவீரர்பட்டியல், போராளிபட்டியல்... எண்டு தமிழர்கள் அங்கம் வகிக்கிற எல்லாப்பட்டியலும் ஒவ்வொருத்தர் இருக்கிறார்கள் எண்டாலும் எல்லாத்தையும் விட இந்த இழப்பு அவருக்கு மிகவும் தாக்கமானதாய்தான் இருந்தது. சந்தியில் நிண்ட சிலபேர் பழம்சைக்கிள்தானே அதுபோனால் போகட்டும் வேற ஒண்ட வேண்ட வேண்டியதுதான் என ஆறுதல் கூறினர். ஆனால், அவைக்கு அதின்ர வரலாறு தெரியாது அதின்ரை அருமை எனக்குத்தான் தெரியும்'' என்று உணர்ந்தவர் ஏதோ ஓர் நம்பிக்கை துளிர்விட காவல்துறை அலுவலகம் நோக்கிச்சென்றார். தனது முறைப்பாட்டை பதிவு செய்தார். அத்துடன் வீடு வந்துவிட்டார்.

காவல்துறை பலமாதான் இருக்கு அவங்கள் எத்தனையோ பல குற்றச்செயல்களை எல்லாம் பிடிச்சிருக்கிறாங்கள். அதோட நாங்களும் விழிப்பாயும், பலமாயும் இருந்தாஎப்பிடியும் கள்ளனை இணங்காணலாம் ஏன் நாங்கள் கூட உசார இருந்தா பிடிச்சுக்குடுக்கலாம். சிலவேளை, ஆதாரத்தோட பிடிக்கிறதொண்ட கால அவகாசம் தேவைப்படலாம். ஆன எங்களுக்கானது எப்பிடியும் எங்களுக்கு கிடைச்சுத்தான்தீரும். எண்டு அவருக்குள் இருந்து ஓர்குரல் ஓங்கி ஒலித்துக்கொண்டிருந்தது. பொன்னுச்சி மரநிழலில் ஏதோமங்கலாய்தெரிவது போல் இருந்தது. திடுக்கிட்டு நிமிர்ந்தவர் துண்டை உதறி தனது தோழில்போட்டுக் கொண்டு நடக்கத்தொடங்கினார்....



## அரியண்ட நாட்கள்

இருள் சூழ்ந்த வாழ்வினுள்
எனக்கான இருப்பைத் தொலைத்த நிலையில்,
அத்து மீறிப் புகுந்து கொண்டுள்ள
அராஜகத்தின சின்னங்களால்
அன்றாடம் நான் மிகவும்
அவதிப்படுகின்றேன்.

இருளோடு ஒன்றிய கொடிய ஐந்துக்கள் சில
தங்கள் விசம் படிந்த
விகாரப் பற்களைக் காட்டியபடி..
என்னில் உள்ள
எஞ்சிய துணிவினையும்
எடுத்துறிஞ்ச முயல்கின்றன.

நானோ
வாழ வேண்டிய வயதினில்
வாழ ஆசைப்படும் சாதாரண வொருமனிதன்.

எனக்கான வாழ்வொழுங்கில்
எனதில்லத்துணையுடன்,
எந்தனது வாரிசுகளுடன்
எந்நாளும் இப்புவியில்
அச்சமற்று வாழ வேண்டுமென
ஆசைப்படுபவன்;

சுதந்திரமற்ற ஒவ்வொரு பொழுதுகளிலும்
பற்றிப்பிடிக்கும் பயத்தோடு,
அடையாள அட்டைதனைக் காண்பித்து,
உடலைத்தடவும் ஓர்மக்கரங்களின்
உபத்திரவங்களைச் சகித்தபடி...;
எப்போது ஒழிந்து போகும்
இந்த அரியண்ட நாட்கள்?

இருளும்;
பல்லிடுக்கில் விசம் முற்றிய உயிர்கொல்லிகளும்
என்னை விட்டுத் தொலையும் நாள்
இனியாவது
எழுந்து வர மாட்டாதா?

- அலெக்ஸ்பரந்தாமன்

## சமாதானம்

துப்பாக்கி முனையில்
சமாதானப்புறா
தற்காலிகமாக அமர்ந்துள்ளது.
மானிட உயிர்கள்
சந்தோசப் பூங்காற்றை
சுவாசிக்கின்றன.
அன்று போன நிகழ்வை சுமந்து
இன்றைய நிகழ்வை எண்ணி மகிழ்ந்து
நாளைய நிகழ்வை மகிழ்வோடு
எதிர் பார்க்கும் மனித உள்ளம்.
துப்பாக்கிக்கு ஓய் வென்பதால்
உயிர் தின்னும் பசி மரணத்துக்கு
குறைந்து விட்டது.
காலத்தின் வரவை எண்ணி
காத்திருக்கின்றன
சமாதானப் புறாவும்
அனல் கக்கும் துப்பாக்கியும்,
உங்கள் இருவரின வாழ்வும்
நெருப்பும் நீருமா அல்லது
நிரந்தர உறவா என்பதை
புரிவதற்காக காத்திருப்புக்கள்
நீடிக்கின்றன.

இ. செல்வறதி (லோஜி)

## விளையாட்டு

# விளையாட்டு என்பது விளையாட்டான விடயமல்ல

**புதிராயன்**

மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்த, வாழ்க்கைக்கு மிகவும்அவசியமான, மனிதனுக்குள் இயல்பாய்க் குடியிருக்கின்ற அவனோடு கூடவே பிறந்த குணங்களில் ஒன்றாகவே விளையாட்டு விளங்குகின்றது.

மனிதனோடு கூடவே பிறந்த இந்த விளையாட்டிற்கு தோற்றமென்று எந்தச் சம்பவங்களையும் உறுதியாகக் கூறமுடியாது. ஆயினும் கிரேக்கத்தில் வாழ்ந்த மக்களால்; கிரேக்கத்தின் கடவுளுக்கு எடுக்கப்பட்ட விழாவே நவீன விளையாட்டின் மூலமாக அமைகின்றது. இதுவே இன்று நான்குவருடங்களுக்கு ஒரு முறை நடைபெறும் ''ஒலிம்பிக்'' ஆகும். உலகின் பல பாகங்களிலும் விளையாடப்படும் விளையாட்டுக்களை உள்வாங்கிய மாபெரும் விளையாட்டு விழாவாக; விளையாட்டு வீரர்களை இனம் கண்டு ஊக்குவிக்கும் களமாகத் திகழ்கின்றது இவ்ஒலிம்பிக்.

விளையாட்டு பொழுதுபோக்கானது, விளையாடுவதால் நேரம்விரயமாகும்என்று எண்ணுபவர்கள் எம்மில் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஒலிம்பிக் சாதனைகளின் உச்சமாகக் கருதப்படும் அதன் உள்ளார்ந்த நோக்கம் பற்றி அறிந்திருந்தால் அவ்வாறு எண்ண மாட்டார்கள் என்றே கருதுகின்றேன். ''அதிவேகம், அதியுயர்வு, அதிவலிமை'' என்கின்ற வாசகத்தைத்தனதாக்கிக் கொண்டு; அதற்காக ஒரு குழுவையும் அமைத்துச்செயற்பட்டு வருகின்றது. அதுமட்டுமா? சிறந்த வீரர்களுக்குப் பதக்கங்கள், விருதுகள், பரிசில்களை வழங்கி விளையாட்டு வீரர்கள் தோன்றவும், வளரவும் உறுதுணையாய் நிற்கின்றது.

இன்றைய உலகம் வேகமாக இயங்கிக் கொண்டு இருக்கின்றது. அதற்கேற்ப நாமும் இயங்க வேண்டும். போட்டிகள் நிறைந்தஇவ் உலகில் நாமும் போட்டி போட வேண்டியவர்களாகவே இருக்கின்றோம், அவ்வாறே இருக்கவும் வேண்டும் இங்கே உரமேறிய உடலும், உறுதியான மனமும் இல்லாதவர்களால் வேகமான முறையில் உலகின் ஓட்டத்தோடு போட்டி போட்டுக்கொண்டு செல்வதென்பது சாத்தியக் குறைவானதே:

விளையாட்டு அல்லது உடற்பயிற்சி இதில் ஏதாவது ஒன்றைத்தெரிந்தெடுத்து, அவற்றுக்கு குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்கி அல்லது கிடைக்கின்ற நேரத்தினை அவற்றுக்கும் பயன்படுத்துவதனூடாக உங்களுக்கு ஏற்படுகின்ற,ஏற்படக்கூடிய பல சிக்கல்களிலிருந்து விடுபடலாம் அழுத்தங்கள் நீங்கிய இயல்பான வாழ்வைப்பெற்றுக்கொள்ளலாம்.

> விளையாட்டு அல்லது உடற்பயிற்சி இதில் ஏதாவது ஒன்றைத் தெரிந்தெடுத்து, அவற்றுக்கும் குறிப்பிட்ட நேரத்தினை ஒதுக்கி அல்லது கிடைக்கின்ற நேரத்தினை அவற்றுக்கும் பயன்படுத்துவதனூடாக உங்களுக்கு ஏற்படுகின்ற ஏற்படக்கூடிய பல சிக்கல்களிலிருந்து விடுபடலாம். அழுத்தங்கள் நீக்கிய இயல்பான வாழ்வைப்பெற்றுக்கொள்ளலாம்.

இன்று எத்தனையோ விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்றன. இனிவரும் காலங்களிலும் பல விளையாட்டுக்கள் உதயமாகக்கூடும் ஒவ்வொருவரும் தமக்கு ஏற்ற. விருப்பமான, தமது திறமைகளை வெளிக்கொணரக்கூடிய விளையாட்டுக்கள், உடற்பயிற்சிகளைத்தெரிவு செய்து உங்களது அன்றாட வாழ்வின் இயக்கத்தில் அவற்றுக்கும் ஓரிடம் கொடுப்பதனூடாகச் சலனமற்ற வாழ்வின் தன்மைகளைப்புரிந்து கொள்ள முடியும். இங்கு வயது வித்தியாசமோ, பால் வேறுபாடோ அவசியமற்றது;

வலிமையற்றும், பருத்தும் இருக்கின்ற உடலுக்கு உறுதியைக்கொடுப்பதுடன், இரத்தத்தைச் சுத்திகரித்து சீரான உடல் இயக்கத்தை மேம்படுத்தும் ஆற்றல்களைக்கொண்டு விளங்குகின்றது: நோய்களைத்தடுக்கும் வீரியத்தை உடலுக்கு அளித்து நீண்ட வாழ்நாளை மனிதனுக்குக் கொடுப்பதாகவும் இனம் காணப்பட்டுள்ளது. அதுமட்டுமா? வெற்றி தோல்விகளை சமமாக ஏற்றுக்கொள்ளவும், ஒருமித்துச்செயற்படும் குழு மனப்பான்மையை வளர்க்கவும் வல்லது.

நாம் வாழ்கின்ற பிரதேசமோ பல வகையான மன அழுத்தங்களைஏற்படுத்தி, மனித வாழ்வைச்சீரழிக்கின்ற நிலையையும், பல வகையான பாதிப்புக்களையும் ஏற்படுத்தக் கூடியதே, மற்றும் மதுப்பாவனை, புகைத்தல். போன்ற தீய பழக்கங்களின் பால் ஈர்க்கப்பட்டு வாழ்வில் சீரழிந்து போகும் அபாய நிலையும் நாளாந்தம் அதிகரித்துக்கொண்டிருப்பது கண்கூடு. இவ்அழுத்தங்கள், பழக்கங்களிலிருந்து மனிதனை விடுவிக்கக்கூடிய மிகச் சிறந்த நிவாரணி விளையாட்டுக்களாகும்.

அழுத்தங்களைத் தாங்கி வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும் ஓய்வு அவசியமானது. ''ஓய்வு'' என்பதை நீங்கள் எவ்வாறு கருதுகின்றீர்கள்? வயிறுமுட்டச்சாப்பிட்டு, நீட்டி நிமிர்ந்து படுப்பதையெல்லாம் சிறந்த ஓய்வென்று கூறுவதற்கில்லை. ஒருவர் தான் வழமையாகச் செய்கின்ற அல்லது நீண்ட நேரமாகச் செய்கின்ற வேலையை நிறுத்தி விட்டு அதனோடு தொடர்பில்லாத வேறு வேலைகளில் அல்லது செயல்களில் ஈடுபடுவதைத்தான் சிறந்த ஓய்வென்று கூறமுடியும் எனவே விளையாட்டு சிறந்த ஓய்வுக்கான கருவியாகும்.

விளையாட்டின் ஊடாக எத்தனையோ சாதனைகளைப் படைத்து பல சாதனையாளர்கள் உலக அரங்கிலே பரிணமிக்கின்றபோது நாம் இன்றும் மாபிள் உருட்டுவதில் காலத்தைக் கழிப்பது வேதனைக்குரியதே;

எமது தமிழ்ப் பெண்கள் விளையாட்டில் ஈடுபடுவது மிக மிகக்குறைவாகவேயுள்ளது. விளையாடுபவர்களும் குறிப்பிட்ட காலத்தின் பின்னர் அவற்றை நிறுத்திவிடுகின்றனர். 1904ஆம் ஆண்டிலே நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியிலேதான் முதன்முதலாகப் பெண்கள் கலந்துகொண்டனர். உலகிலுள்ள பெண்கள் விளையாட்டுக்களில் எத்தனையோ சாதனைகளைப் படைத்துவிட்டார்கள். ஆனால் ஒரு நூற்றாண்டு காலம் கழிந்துவிட்ட பின்பும் கூட எமது பிரதேசத்தில் வாழ்கின்ற பெண்கள் சாதாரணமாக விளையாடுவதும் அரிது, உடற்பயிற்சிகளில் ஈடுபடுவதும் மிக மிகக்குறைவாகவே உள்ளது.

உடல் வலிமையுள்ளவர்களால் மட்டுந்தான் விளையாட முடியும். எனக்கும் விளையாட்டுக்கும் வெகுதூரம் என்று எண்ணுபவர்களே உங்களிடம் ஒரு கேள்வி? உடல் ஊனத்தோடு வாழ்கின்றவர்களுக்காகவும் உலகில் விளையாட்டுப்போட்டிகள் நடத்தப்படுகின்றதே அது எதற்காக? விளையாட்டு, மனிதனாகப் பிறந்த ஒவ்வொருத்தருக்கும் எவ்வளவு முக்கியமானது என்பதை இது புலப்படுத்துகிறது அல்லவா.

## சங்கப்பலகை

### கூப்பிக் கிடக்காத குடி

பாதைதிறக்கட்டும்
படைநிலைகள் தளரட்டும்
வேதனைகள் விட்டு விலகட்டும்
பூதகியின்
பல்லுடைந்து போகில்
பால்சுரந்து எம்வாயும்
வெல்லச் சுவையாகி விடும்

பெப்சி, செவனப்பும்
பொட்டல்லோ, பன்ராவும்
கப்சிப் பெனவாயைக் கட்டாது
சப்புகின்ற
கண்டொஸ், சுவிங்கமதைக்
கண்டாலும்; விடுதலைக்கே
''வின்டோ'' தனைத்திறந்து விடு

வீட்டிற் கிடக்கமனம்
விரும்புவதும்; சிறகரிந்து
கூட்டிற் கிடப்பதுவும் குறியல்ல
ஆட்டுக்கால்
சூப்பில் வாய்நனைத்துச்
சுழலோம்; நாங்கள் கை
கூப்பிக் கிடக்காத குடி.

பூவாய்ச் சிலிர்த்தவனம்
பொசுங்கிப்; பகைவீட்டின்
தாவாரம் போயினிமேற் தங்காது
மாகாண
சபையில் மயக்கமுற்றுச்
சமாதானம் பாடுகின்ற
இசையில் வசமாகா இனம்

பத்தேழ் ஆயிரமாய்
படுத்துறங்கும் மாவீர
வித்துக்கள் ஈகம் வீணாமோ?
சத்தியமாய்
கொடுத்த விலைக்கீடாய்
கொள்வோம்; இல்லையெனில்
மிடுக்குடனே மீண்டும் முளை

வில்லெடுத்தோம் நேற்று
வீசுறது பூங்காற்று
நல்வழியில் காற்று நடக்கட்டும்
பெல்லிவிடும்
எண்ணத்தில் இன்னும்
இருப்பரெனில் போர்முகத்தின்
கன்னத்தில் வீழுமடா கை



**கோணசுவத் தேசிகர்**

# இன்னொருபோர்முகம்



அங்கு கிணறு ஒன்று வெட்டப்பட்டுபொழியப்பட்டகருங் கற்களைப் பொருத்தி கற்சிதமாக கட்டுக்கட்டப்பட்டுள்ளது. அதனருகில் சிறு கேணியும் வெட்டப்பட்டுள்ளது. சில கருங்கற்தூண்களும் காணப்படுகின்றன. ''இதுதான்சீதை இருந்தஇடம். இக்கேணியிலதான் சீதை குளித்தவா என்று ஒரு ஐதிகம் உள்ளது'' எனத் தெரிவித்தார்கள். ஆச்சரியத்துடன் அந்த அதிசய இடத்தைப்பார்த்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தவர்கள் தங்கள் முகாமொன்றை வந்தடைகின்றனர்.

அதற்குமுன் ஆமிக்காரர்கள் எப்படியோ மோப்பம் பிடித்து வந்துபோயிருக்கின்றாங்கள்இவர்கள்வைத்திருந்த பாத்திரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டிருந்தன. கைவிடப்பட்ட முகாமென நினைத்து கண்ணிவெடி வைக்காமல் சென்றிருக்கின்றார்கள். அதனை உறுதிப்படுத்தியவர்களுக்கு ஒரு மண்பானையொன்று சேதமிலலாது கிடக்கின்றது. அத்துடன்அவர்கள் முன்னர் ஒழித்துவைத்திருந்த அரிசியும் பருப்பும் பத்திரமாக இருக்கின்றது. இவர்கள் அப்பானையை வைத்தே அவ்வளவு பேருக்கும் சமைக்கவேண்டும்; உடனே தவம் செயலில் இறங்குகின்றான். அப்பானையில் மூன்று தரம் சோறு சமைத்து ஒவ்வொன்றையும் ஒவ்வொருமுறையும் நிலத்தில் பக்குவமாக இடப்பட்டிருந்த ''பொலித்தீன்'' மேல்கொட்டுகின்றான். பின்னர் பருப்புக்கறியும் வைத்து சோற்றை சுவைத்துச்சாப்பிடுகின்றான். பின்னர் ஏற்கனவே பார்த்திருந்த ''ரெக்கி''ப்படிதாக்குதலுக்குப் 12பேர் புறப்படுகின்றனர். மிகுதி 13 பேரும் முகாமில் தங்குகின்றனர்.

அதிகாலை 4 00 மணிக்கு குறிக்கப்பட்ட இடத்தில்நிலையெடுத்தவர்கள் எதிரியின் வருகைக்காக காத்திருக்கின்றனர். அன்று மாலைவரை தங்களை உருமறைத்த அவ்வவ் இடங்களிலேயே ஆடாமல் அசையாமல் பதுங்கியிருக்கின்றனர். அன்று எதிரி வரவில்லை. என்ன காரணமோதெரியாது. இவர்களில் ஒருவன் மயங்கிவிட்டான் மீண்டும் மறுநாளும் அவ்வாறே காத்திருக்கின்றனர். மறுநாள் மதியம் போல்07 இராணுவத்தினர் தமக்கு விரிக்கப்பட்டிருக்கும் மரணவலைபற்றி அறியாது வரிசையாக வந்துகொண்டிருக்கின்றனர்; அப்பொழுது பார்த்து இவர்களை பக்கமாக முந்திக்கொண்டு ''பீல்ட் மோட்டார்'' சைக்கிளில் இரண்டு எஸ். எவ். இராணுவத்தினர்வருகின்றனர். அவர்களை விட்டு பின்னால் வருபவர்களைத்தாக்கினால்இவர்கள் திருப்பித்தாக்கினால் எம்மவரில் இறப்போ காயமோ வரலாம். காயமடைந்தவர்களைக் காவிக்கொண்டு இவ்வளவு தூரமும் பின்வாங்குவது என்பது கற்பனைக்கெட்டாத கடினங்களைப் பரிசளிக்கும். உடனே தேவண்ணை முடிவை மாற்றி முன்னால் வரும் எஸ். எவ்: இருவருக்கும் அடிக்கின்றார். அவர்களில் ஒருவன் அவ்விடத்திலேயே விழ மற்றவன் காயத்துடன் அருகிருந்த காட்டுக்குள் பாய்ந்துவிட்டான். பின்னால் வந்த ஏழ்வரும் துப்பாக்கிப்பிரயோகம் செய்த வண்ணம் பின்வாங்கிவிட்டனர். இவர்களில் ஒருவன் ஓடிச்சென்று இறந்த இராணுவத்தினரின் ரி-56-2 ரைபிளையும் ரவைத்தாங்கியையும் எடுத்துக்கொண்டு விரைவாக ஓடிவருகின்றான்.

உடனேயே இவர்கள் மயங்கியிருந்த தங்கள் சகாவையும் தூக்கிக்கொண்டு பின்வாங்குகின்றனர். இன்னும் சில மணிகளில் அப்பிரதேசம் சுற்றிவளைக்கப்பட்டு சல்லடைபோட்டு அவர்களால் தேடப்படும் ஒவ்வொரு எதிரியையும் கொல்வதற்கு எவ்வளவு கடினப்பட வேண்டியிருக்கின்றது.

இவர்கள் முகாம் திரும்ப இவர்களுக்கு சொர்ணமண்ணையிடமிருந்து செய்தி வந்திருந்தது. எல்லோரையும் தன்னைவந்து சந்திக்கும்படி. உடனேயே அவர்கள் தேவையான ஆயுதங்களுடன் புறப்பட்டுவிட்டனர். அருண் தான்முதல்கடந்து வந்த பாதைகளை மீண்டும் நினைத்துப்பார்க்கின்றான். இம்முறையும் நல்லகாலம் இருந்தால் தப்பலாம் என எண்ணிக்கொள்கின்றான். இவர்கள் மூன்றுநாள் பயணத்தின் பின்னர் சொர்ணமண்ணையை சந்திக்கின்றனர்.

இப்பொழுது சொர்ணமண்ணை றெஜிதலைமையில்அறுவர் கொண்ட குழுவை அமைத்து அதில் வீடியோக் கமராவுடன் கதிரவனையும் இணைத்து மீண்டும் அருணை அவன் வந்த வேலையை வெற்றிகரமாகச்செய்து முடிக்கும்படி வாழ்த்தியனுப்புகின்றார். தேவையான இன்னோரின்ன உதவிகளைச்செய்யும்படி குணமண்ணையைப்பணிக்கின்றார்.

இப்போது அவர்கள் தங்கியிருக்கும் காடு, சிறுகுன்றுஒன்றின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. 500 மீற்றர் தூர விஸ்தீரணம்தான் வரும். அதனைச்சுற்றிவரசிறு பற்றைகளைக் கொண்ட வெட்டைப் பிரதேசம் அமைந்துள்ளது. இவர்களை வந்து சந்திப்பது எனக்கூறியிருந்த வழிகாட்டி இரண்டு நாளாகியும் இன்னும் வரவில்லை. நாங்களாகவே முயற்சித்துப் பார்ப்போம் சுயமாக வேவு எடுக்க எண்ணினர். அதற்கமைய வரைபடத்தை எடுத்துப்பார்த்து தாங்கள் போகவேண்டிய திசை கடக்கவேண்டிய கிராமங்கள் ஆறுகள் போன்றவற்றைக் கவனித்தனர். ஆறுபேரும் தங்களுக்குத்தேவையான ஆயுதங்கள் ஏனைய உபகரணங்கள் உணவுப்பொருட்கள் என்பவற்றுடன் புறப்படுகின்றனர். இப்பொழுது சிங்களக்கிராமம் ஒன்றை வந்தடைந்தவர்கள் பற்றை ஒன்றினுள் இரண்டு நாட்கள் பதுங்கியிருக்கின்றனர். மக்களின் கண்ணில் தாம் தென்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமென்பதால் திரும்பிவருகின்றனர். அருணுடன் மூவராக வேறு பாதையொன்றினூடாகசெல்லமுடிவெடுத்துமீண்டும் புறப்படுகின்றனர். வழியில் ஒரு முஸ்லீம் கிராமம் குறுக்கிட்டதால் அருகிலிருந்த இன்னுமொரு காட்டினுள் சென்று மறுநாள் பகல் மறைந்து கொள்கின்றனர். அக்காட்டினுள்ளும் விறகுதறிக்க வரும்மக்களின் நடமாட்டம் அதிகமாக இருக்கின்றது. அங்கிருந்த பெரிய ஆலமரமொன்றின் மேல் ஏறிமறைந்து கொள்கின்றனர். அவர்களில் ஒருவன் கூறுகின்றான் ''பாவிகள் போற இடம் பள்ளமும் புட்டியுமாய் இருக்குமாம்'' மற்றவன் சொல்கின்றான்''

மீண்டும் தங்கள் இருப்பிடத்திற்குச்செல்வதற்காக இருட்டும்வரை காத்திருக்க வேண்டியிருப்பதால் ஒருவர்மாறி ஒருவர் காவல்விட்டு மரத்திலேயே தூங்கத்தொடங்கிவிட்டனர். மதியம் திடீரென வானம் கறுத்து மழைபெய்யத் தொடங்கிவிட்டது. சோவென பேரிரச்சலுடன் பெய்யும் மழையில் நனைந்தவண்ணமே இருக்கின்றனர். குளிரினால் உடல் விறைத்துவிட்டது. ஒருவன் சொல்கின்றான் ''கழுதைக்கேன்ரா நாயின்ர வேலை?'' ''ஏன்ரா என்ன சொல்லுற?'' ''பேசாம பூத்திரஸ்காலி வரும்வரை இருந்திருக்கலாம் இப்ப பார் நனைஞ்ச கோழிமாதிரி நடுங்கிக்கொண்டிருக்கிறம்'' ஏதோ

○ தூயவன்

பொழுதுபோகவேண்டும் என்பதற்காக கதைத்துக்கொண்டிருந்தார்கள் பூத்திரஸ்காலி என்பது அவர்கள் வழிகாட்டிக்கு வைத்திருந்த சங்கேத பாஷை ''எங்களில் நாங்கள்வைத்த அதீத நம்பிக்கையால் இப்ப மாட்டிக்கிட்டு முழுசிறம்'' சொல்ல வாயெடுத்த அருண் பேசாமல் இருந்துவிடுகின்றான் மழை காரணமாக வேளைக்கு இருட்டிவிட்டது. ஆனால் மழை கொஞ்சமும் விடுந்தரமாட்டேன் என்கிறது. இனியென்ன செய்கிறது நாங்கள் போவோம் என ஒருவர் பின் ஒருவராக 10 மீற்றர் இடைவெளி விட்டு மழையில் நனைந்தபடியேசெல்கின்றனர்.

இப்போது இவர்கள் மரக்கறித் தோட்டமொன்றைக் கடக்கின்றனர். பச்சைக் காய்கறிகளைக் கண்டவுடன் அவர்களுக்கு அவற்றைக் கறிவைத்துச்சாப்பிட வேண்டும் எனும் ஆவல் பிறக்கின்றது. உடனேயே தங்களிடம் மேலதிகமாக வைத்திருந்த சறத்தை விரித்துப்போட்டு அவற்றில் அகப்பட்டவற்றையெல்லாம் பிடுங்கிப் போடுகின்றனர். இன்னொருவன் ''தோட்டத்தில் களவெடுக்கிற அளவுக்கு முன்னேறியிருக்கிறம் பரவாயில்லை'' எனவும் காட்டுமுகாம்களில் பச்சைக்காய்கறிகள் போராளிகளால் கோழியிறச்சியிலும் மேலாக விரும்பி உண்ணப்படுவதையும் எண்ணிக்கொள்கின்றான்.

மீண்டும் அவர்கள் திசையறி கருவியின் உதவியுடன் நடந்துகொண்டிருக்கின்றனர். திடீரென அருண் பெரிய பள்ளமொன்றினுள் வீழ்ந்துவிட நிரம்பியிருந்த வெள்ளத்தினுள் மூழ்கின்றான். உடனே கைகாலைப் போட்டு அடிக்க ஒரு கரையைப் பிடித்தவண்ணம் கூ கூ எனக்கத்துகின்றான். கும்மிருட்டும் மழையிரைச்சலும் மற்றவர்களுக்குக் கேட்காமல் செய்துவிடுகின்றது. அவர்கள் இவனருகில் வந்து கைகொடுத்துத் தூக்கிவிடுகின்றனர் ''இது பண்டிக்கு வைத்திருக்கும் பொறிக்கிடங்கு'' ஒருவன் சொல்கின்றான்.

இன்று பகல் முழுவதும் சாப்பிடாததால் உருவான பசிமயக்கம் கணுக்காலளவு ஓடும் வெள்ளத்தில் நடக்கும்போது எடுக்கவேண்டிய அதிக கவனம் இவர்கள் போய்ச்சேரவேண்டிய தூரத்தை அதிகரித்துக் காட்டுகின்றது. தாமிருக்கும் சிறு காட்டை வந்தடைந்துவிட்டனர். ஆனால் காட்டுவெள்ளம் இடுப்பளவையும் தாண்டிப்பாய்கிறது. முன்னால் இருக்கும் மரங்களைப் பிடிச்சுப்பிடிச்சுத்தான் நடக்கவேண்டியிருக்கின்றது வெள்ளத்தில் மிதந்துவரும் காட்டுத் தடிகளும் குச்சிகளும் தன்னில் முட்டும்போதுதான் பாம்புகளின் எண்ணம் வருகின்றது. தாங்கள் இம்முறை ஏ.எஸ் வி. கொண்டுவரமறந்துவிட்டது நினைவிற்கு வருகிறது. எப்படியும்இருப்பிடம்போய்ச்சேர்ந்துவிடவேண்டும் என்ற எண்ணத்தால் இவர்கள் முடுக்கிவிடப்பட்ட ரோபோக்களாக அசைந்தவண்ணம் உள்ளனர். இரவு 11.30 மணியளவில் தம்மறைவிடம் வருகின்றனர். பெரிய சோகம் என்னவென்றால் இவர்களிடம் இருப்பதுஇரண்டு ரென்ற்தான். அதனைக்கொண்டு உருவாக்கும் கூடாரத்தினுள் மூவர் கூட ஒழுங்காக நீட்டி நிமிர்ந்து படுக்கமுடியாது; வழமையாகத்தரையைப்படுக்கையாகவும் வானத்தைப் போர்வையாகவும் பாவிப்பவர்களை அவை இரண்டும் கைவிட்டுவிட்டன. இருந்த பிஸ்கட்டுக்களை சாப்பிட்டு பசியாறியவர்கள் சாய்ந்தும் இருந்தும் என ஒருவர்மேல் ஒருவராக அள்ளிப்போட்ட பனங்கிழங்குகள் மாதிரி நித்திரையுடன் சங்கமிக்கின்றனர். ஒரேநேரத்தில் ஒருவரென விழித்திருக்கின்றனர். மழை பேரிரச்சலுடன் பெய்தவண்ணமே உள்ளது.

தொடரும்

# இரண்டு விடயங்கள்

## தலை · சோப் · நுரை?

அமிலங்களை அழித்து உப்புக்களை உண்டாக்கும் சுண்ணாம்புக்காரம் போன்ற இரசாயனக் கூட்டுப்பொருள் சோப்பிலுள்ளதால நுரைத்தெழுகின்றன. நுரைத்தெழுவதற்கு இயற்கையான காரணம நீர்க்குமிழ்கள்தான. நாம் தலையில் சோப்பைத்தடவியதும், தலைமயிர்களுக்கிடையேயுள்ள காறறு இடைவெளிகள் நுரையை நிரப்புவதற்கான பணியை இலகுவாக்குகின்றன. காற்றுடன் கலந்ததாக அதிக நுரையேற்பட இடமளிக்கிறது.

அதே நேரம் உங்கள் உடலில் சோப்பைத்தடவும்போது அதிக நுரை ஏற்படுவதில்லை குறைந்தளவு நுரையே ஏற்படுகின்றன. அதற்கும் அதுவே காரணம் முகச்சவரம் செய்யும்போது தாடைப்பகுதியில் ஷேவிங் கிறீமைப் பூசுகிறோம் தலைமயிரைப்போலவே பிரஷும்சிலிர்த்தெழுந்து அதிக நுரையை ஏற்படுத்துகிறது. பிரஷின் இடைவெளிகளில் கலந்திருக்கும் காற்றுடன் கலப்பதால் அதற்கும் அவ்வாறு நேர்கிறது. வெறும் கைகளால் அப்படி ஏற்படாது.

அதேபோலத்தான் பல்துலக்குவதற்குவெறும் விரலால் பற்பசையைத் தேய்த்தால் நுரை ஏற்படாது அதை பிரஷுடன் கலந்து பல் துலக்கும்போது பிரஷ் மயிர்கள் சிலிர்த்தெழுந்து அதிக நுரையை ஏற்படுத்துகின்றன.

## பெருவிரல், ஒருதகவல்

மற்றைய விரல்களைவிடப்பெருவிரல் வித்தியாசமாக இருப்பதேன்?

மற்றைய நான்கு விரல்கள் ஒவ்வொன்றும் மூன்று எலும்புகளைக் கொண்டதாக இருக்கையில் பெருவிரல கட்டையாகவும், தடித்ததாகவும் இரு எலும்புகளுடன் அமைந்திருக்கிறது.

கைகளுக்கு எவ்வகையில் அது முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது?

கைகளுக்கு அது மிக முக்கிய விரலாகவும் அது இல்லையேல் நாம் எதனையும், எப்பொருளையும பற்றிப்பிடித்துக்கொள்ள முடியாதுபோய்விடும். மற்றைய விரல்களின் அசைவுகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாகவும், மனித கைகளின சாமர்த்தியமான தொழிற்பாடுகளுக்கெல்லாம் தலைமைக்கருவாகவும் இது விளங்குகிறது; மனிதனின் அறிவு, திறமை, மதிநுட்பங்களோடிணைந்ததாக கருவிகள், ஆயுதங்களின் பாவனைகளுக்கும் அவனைச் சிறந்த மேதாவியாகவும் உருவாக்க உதவுகிறது.

18ஆம் நூற்றாண்டின் இமானுவேல் கான்ற் என்ற தத்துவாசிரியர் பெருவிரல்-மனிதகைகளிலுள்ள மூளையின் வியத்தகு பகுதியென வர்ணித்தார்.

எமது உடலின் எப்பாகத்திலுமற்ற இணைப்பு ஒவ்வொரு பெருவிரலும் கொண்டிருக்கிறது.

குதிரையின் கடிவாளத்தைப்போன்ற மிக முக்கியமான பகுதி. இந்த இணைப்பு பெருவிரலை முன்னுக்கும் பினனுக்கும் இருபக்கங்களுக்கும் அசைக்க உதவுவது.

விபத்தொன்றில் பெருவிரலை இழக்கநேர்ந்தால்?

ஒரு அனுபவம் வாய்ந்த அறுவைசிகிச்சை நிபுணர் அதற்குப்பதிலாக நரம்புகள், தசைகளை எலும்புடன பிணைக்கும் தசைநார், இரத்தக் குழாய் போன்றன பொருந்தக்கூடியதாக அவனது ஆட்காட்டி விரலையே இடமாற்றம் செய்துவிட முடியும்.

○ ஜெனன்




# பேராசையால் வந்த விளைவு

அந்தக் குரங்கால் சிவராசா வீட்டுக்காரருக்கு பெரிய தொல்லை. வீட்டில் அந்தக் குரங்கு எதையும் வைக்கவிடுவதில்லை. முற்றத்தில் கச்சானை காயப்போட்டால் வந்து தின்று விடும். கொடியில் உடுப்புகளை தோய்த்து காயப்போட்டால் வந்து கிழித்து விளையாடும்.

அந்தக் குரங்கை வீட்டுக்கு வராதபடி செய்ய சிவராசா யோசனை செய்தார். ஒரு நாயை வாங்கி காவலுக்கு விடவேணுமென்று முடிவெடுத்தார். உடனே வெளியூர் போய் ஒரு நாயுடன் வந்தார். நல்லபெரிய நாய். நீளமாய் வால் சுருண்டிருந்தது நாய்க்கு. நாயைப் பார்த்து சிவராசாவே பயந்து போனார். இனி குரங்கு வீட்டுக்கு வந்து தொந்தரவுகள் செய்யமாட்டாது என மகிழ்ந்தார்.

நாய் முற்றத்திலேயே படுத்திருந்தது. குரங்கு வந்தது. நாயைக் குரங்கு பார்த்தது. நாயும் குரங்கைப் பார்த்தது. நாய் குரைத்துக்கொண்டு குரங்கைத் துரத்தியது. குரங்கு 'ஈ...' என்று கண்களை உருட்டியது. குரங்கினது பெரிய பற்களும் சிவப்பு நிற முரசும் நாய்க்கு அச்சத்தை ஏற்படுத்தியது. குரங்கு ஒருமுறை நாய் மேல் பாய்ந்தது! நாய் பயந்து போய் வீட்டு வாசலில் நின்று குரைத்தது!

நாய் குரைக்கும் சத்தம் கேட்டதும் சிவராசா ஓடி வந்தார். குரங்கை நாய் துரத்துகிறது என்று நினைத்தார். வெளியில் வந்த போதுதான் சிவராசாவுக்கு நிலைமை விளங்கியது.

குரங்கு சிவராசாவைக் கண்டதும், கொடியில் காய்ந்த அவரின் சாரம் ஒன்றை எடுத்துக்கொண்டு ஓடியது. நாயாலும் அந்தக்குரங்கை அடக்க முடியாத நிலையை நினைத்துக்கவலைப்பட்டார்.

குரங்கை எப்படியாவது பிடிக்கவேணும் என மற்றொரு திட்டம் போட்டார். சிவராசாவின் திட்டம் ஒரு தந்திரம்.

தண்ணி எடுத்து வைக்கும் பெரிய குடமொன்றை எடுத்தார். குடத்துக்குள் கொஞ்சக்கடலையை வறுத்துப்போட்டார். குடத்துக்குள் கடலை நல்ல வாசமாய் இருந்தது.

சிவராசா குடத்தை அப்படியே முற்றத்தில் வெட்டித்தாட்டார். நிலமட்டத்தோடு குடம் இருந்தது. குடத்தில் வாயிலிருந்து கடலையின் வாசம் வந்துகொண்டிருந்தது.

குரங்கு வந்தது. குரங்குக்கு கடலை வாசம் மூக்கிலடித்தது. கடலையை தேடித் திரிந்த குரங்கு குடத்தை கண்டுபிடித்துவிட்டது.

குரங்கு பானையை மணந்துபார்த்தது, முகத்தைத் திருப்பி சுற்றுமுற்றும் பார்த்தது. எவரையும் குரங்கு காணவில்லை. குடத்துக்குள் குரங்கு கையை விட்டது. பானையின் அடிவரை கைபோனது. கடலையை நிறைய அள்ளியபடி கையை வெளியே எடுத்தது- குடத்தின் வாய் சிறியதென்பதால், கையை பொத்தியபடி வெளியே இழுக்க குரங்கால் முடியவில்லை.

குரங்கு கையை வெளியே எடுக்க முழுப் பலத்தையும் பயன்படுத்தி இழுத்துப் பார்த்தது. கை வெளியில் வரவில்லை. 'ஈ...ஈ...' குரங்கு அழுதழுது கையை வெளியே எடுப்பதற்கு குடத்துடன் போராடியபடி இருந்தது. கையிலுள்ள கடலையை விட்டால்தானே கை குடத்தின் வாயிலிருந்து வெளியே வரும்?

சிவராசா வந்தார். குரங்கு பிடிபட்டதை நினைத்து பெருமகிழ்ச்சி கொண்டார். பெரிய தடி எடுத்து குரங்குக்கு ஐந்தாறு தடவைகள் ஓங்கி அடித்தார். குரங்கு அடிகளின் வேதனையால் கடலையை கையிலிருந்துவிட்டதும், கை குடத்திலிருந்து வெளியே வந்தது சிவராசாவைப்பார்த்துப்பார்த்துகுரங்குபயத்துடன் ஓடியது.

கடலையைபேராசையுடன்கைநிறைய அள்ளிக்கொண்டதால்தானே அந்தக் குரங்கு பிடிபட்டது.

\- பிரஷகி

# அறிந்திரு....

உலகெங்கும் இரவும், பகலும் சமமாக இருக்கும் நாட்கள் செப்டம்பா மாதம் 23ஆம் திகதியும், மார்ச்மாதம் 21ஆம் திகதியும ஆகும்.

பிராணிகளில் இனிப்புச்சுவையை உணரும் தன்மை நாய், எலி, பன்றிகளுக்கு மட்டும் உண்டு-பூனை, கோழி என்பவற்றுக்கு இனிப்புச்சுவை தெரியாது.

உலகம் தோன்றியதிலிருந்து இன்று வரை எந்தப்பரிணாம வளர்ச்சியையும் அடையாத ஒரே உயிரினம் கரப்பான் பூச்சி.

ஆண் கொசுக்கள் தங்களின் உணர்வுக் கொம்புகளால் பெண்கொசுக்களை அடையாளம் கண்டு கொள்கின்றன.

ஆபிரிக்க வீபர் பறவைகள் கூடுகட்டும் போது இறுக்கமான முடிச்சுக்களை போட்டுக்கட்டுகின்றன. நிடி பூகஸ் பறவைகள் குஞ்சு பொரிக்கும் முன் ஒரு சில நாட்களுக்கு முனபாகவே முட்டைக்குள ஒலியை எழுப்புகின்றன.

தொகுப்பு:- புரட்சிதாசன்

புதிர் -3இல் பரிசு பெற்றவர் விபரம் அடுத்த இளையநாதத்தில்

## புதிர் —4


1) ராஜாவின் நண்பன் ஒரு கணக்குக் கேட்டான. 5 என்ற எண்ணை 10 முறை தான் பயன்படுத்தலாம். வேறு எந்த எண்ணையும் பயன்படுத்தக்கூடாது. 5 என்ற எண்ணைப் பெருக்கலாம், கூட்டலாம், கழிக்கலாம். வகுக்கலாம். ஆனால் விடை 100 வர வேண்டும்.

2) சக்தியின் வயது அவன் மாமாவின் வயதில் 5 இல் ஒரு பங்கு ஆகும். மாமாவின் வயதை 2, 4, 6, 8 ஆகியவற்றால் வகுத்தால் ஒன்று மீதம் வரும். ஆனால் 5ஐக் கொண்டு வகுத்தால் மீதம் வராது. அப்படி என்றால் சக்தியின் வயது என்ன?


## புதிர் —3இன் விடைகள்

(1) $9 + 9 = 18$
திருப்பிப் போட்டால் $= 81$
$\frac{81}{9} = 9$


2) என் வயது இப்போது 24 என்றால் நான்கு வருடம் கழித்து என் வயது 28 ஆக இருக்கும். (24+4) அதை மூன்றால் பெருக்கினால் $28 \times 3 = 84$. நான்கு வருடத்திற்கு முன் என் வயது $24 - 4 = 20$ மூன்றால் பெருக்கினால் $20 \times 3 = 60$ இரண்டிற்குமுள்ள வித்தியாசம் $84 - 60 = 24$



இந்த எண் வியூகத்தின் வழியே நுழைந்து எந்த விதத் தடையுமின்றி மறு வழியே வெளியேறுங்கள்.




இவற்றில் இரண்டு முடிச்சுக்கள் மட்டும் ஒரே மாதிரியானவை - அவை எவை?



இந்தப்படத்தில் எத்தனை மனித முகங்கள் உள்ளன?

# யாழ். கண்டி வீதி பேசினால்...

○ நிலாந்தன்

நானிப்பொழுது ஒரு நெடுஞ்சாலை மட்டும் அல்லஇலங்கைத்தீவில் சமாதானத்துக்கான முதலடிகள் எடுத்து வைக்கப்படும் ஒரு சமாதானச்சாலையும்கூட. இலங்கைத்தீவிலேயே இப்பொழுது அதிகம் கதைக்கப்படும் ஒரு சாலை நான்.

ஈழப்போரில் அதிகம் குருதி சிந்தப்பட்ட சாலையும் நானே.

ஏன் எனக்கு இத்துணை கவர்ச்சி? காரணம் இதுதான நான் யாழ். குடாநாடடை தீவின் பிறபாகங்களுடன் இணைக்குபஒரே நெடுஞ்சாலையாக இருப்பதுதான்.

யாழ்ப்பாணத்தைப் பிடிக்கும் எந்த ஒரு அந்நியரும்அந்த வெற்றியை தக்கவைத்துக்கொள்வதென்றால்என்னையும் பிடித்தாக வேண்டும். அதாவது யாழ்ப்பாணத்தின் மீதான வெற்றி எனப்படுவது என்னையும் பிடித்தால்தான் இறுதியானதாயும் உறுதியானதாயும் அமையும்.

என்பதினாலேயே நானெப்பொழுதும் யுத்தத்திற் சிக்கினேன்?என்னை வழிமறித்து எப்பொழுதும் சோதனைச்சாவடிகளும் முட்கம்பியரண்களும் இருக்கும்.

எத்தனை படையெடுப்புக்களிற்குச் சாட்சிநான்?

எத்தனை ஆயிரம் உயிர்கள்எனக்காகக் கொடுக்கப்பட்டன?

எத்தனை லட்சம் வேட்டுக்கள் எனக்காகத் தீர்க்கப்பட்டது?

எவ்வளவு குருதி எனக்காகச்சிந்தப்பட்டது?
பாருங்கள்...எனது மேனிமுழுதும் ராங்கிகளின் இரும்புப்பற்கள் பட்ட அடையாளங்களை.

ஆனால் எந்த ஒரு அந்நியரும் யுத்தகாலத்தில் என்னை முழுதும் தமது பிடிக்குள் வைத்திருந்ததேயில்லை.

வெள்ளையர், இந்தியர், சிங்களவர் என்று படைகொண்டு வந்த அந்நியர் எல்லாருக்கும் பிடிபட மறுத்து நழுவிச்செல்லும் ஒரு புதிராகவே நானென்றும் இருந்தேன்.

எனது இது வரைகால இருப்பில் என்னால் மறக்க முடியாதவிசயங்கள் இரண்டு. முதலாவதுயாழ்ப்பாணத்து இடப்பெயர்வு, மற்றது ஜயசிக்குறு இரண்டுமே என்னைப் பைத்தியக்காரி போலாக்கின:

முதலாவது யாழ்ப்பாணத்து இடப்பெயர்வு. அது ஒரு கொடுமையான அனுபவம். எனது வாழ்நாளிலேயே நான பார்த்திராக பயங்கரமான ஒரு ஊர்வலம் அது. முன்னெப்பொழுதும் அத்தனை சனங்கள் என்னைக்கடந்து போனதில்லை. அத்தனை வாகனங்கள் என்மீதுஊர்ந்து போனதில்லை.

அன்றைக்கு அந்த மழையிரவில் எனது சனங்கள் அழுதழுது ஊர்ந்து போன காட்சியை இலங்கைத்தீவில் மட்டுமல்ல பூமியிலேயே வேறெந்தத் தெருவும் கண்டிருக்காது.

பிள்ளைகளைப்பெற்றும் மலடியாய்போன ஒருமுதியதாயைப் போல தனித்திருந்தேன் நான். பிறகு ஆறு மாதங்கள் கழித்து சனங்கள் திரும்பி வந்தார்கள். ஆனால் ஆறுதலில்லை

செம்மணியில் கிருஷாந்தி கதறிய போது எனக்கும் கேட்டது. அவளைக் குறையுயிராக அவர்கள் புதைத்த போது நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவளது தாயை சகோதரனை அயலவரை... இப்படிப்பலரை அவர்கள் அந்த ஊரிவெளியில் புதைத்த போது நான் பார்த்துக் கொண்டிருந்தேன்; ஒரு கையாலாகாத சாட்சியாக.

போன சனங்களில் ஒரு பகுதியினர் இன்னும் வீடு திரும்பவில்லை. இனியெப்பொழுது அவர்கள் திரும்பி வருவார்களோ தெரியாது. ஆனால் அவர்களெல்லாரும் திரும்பி வரும் நாள்தான் எனது வாழ்வின் மிக மகிழ்ச்சியான நாளாயிருக்கும்.

மற்றது ஜெயசிக்குறு.

யாழ்ப்பாணத்தில் நானெனது சனங்களை இழந்தேன். வன்னியிலோ எனது காடுகளையும் சனங்களையுமிழந்தேன். எனது இரு மருங்கிலும் குடை பிடித்து நின்ற பெருவிருட்சங்களைத் தறித்துக்கொண்டு முன்னேறியது ஜெயசிக்குறு. ஜெனரல் ரத்வத்த தளபதிகள் புடைசூழ எனது மார்பின் மீது நின்று போஸ் கொடுத்தார்.

எனது மிருகங்கள் என்னைவிட்டு ஓடிப்போயின.

எனது பறவைகள் என்னைப் பிரிந்து பறந்துபோயின: ஆனால் எனது பிள்ளைகள் எனது ரகசிய வழிகளூடாக வந்து வெடிமருந்துகளை விதைத்துவிட்டுப்போனார்கள்.

ஜெயசிக்குறுகாலம் எனது வாழ்நாளிலேயே மிகப்பயங்கரமான ஒரு காலம்.

யாழ்ப்பாணத்துக்கான வசதியான ஒரு விநியோக வழியைத்திறப்பதுதான் ரத்வத்தவின் பிரதான இலக்கு.

ஜெயசிக்குறுவை இன்னொரு விதமாகச் சொன்னால் ஒப்பறேஷன் கண்டிவீதி எனலாம்.

நான் வன்னிப் பெருநிலத்தைப் பிளந்துகொண்டு போகிறவள் என்றாலும் எனது முக்கியத்துவம் நான் முன்சொன்னபடி குடாநாட்டை தீவின் பிறபாகங்களுடன் தொடுப்பதுதான். நொச்சிமோட்டைக்குப் பிறகு எனது வழியில் பெரிதாக ஆறுகள் ஏதும் குறுக்கிடுவதில்லை.

கனகராயன் ஆற்றுக்கு சமாந்தரமாகப் போகிறவள் நான். மழை நாட்களில் வன்னிப் பெருநிலத்தில் எந்த ஒரு காட்டாறும் என்னை அறுத்தோடுவதில்லை இதுவும் எனது கவர்ச்சிகளில் ஒன்று. இப்படிபல காரணங்களிற்காக என்னைப்பிடிக்க ரத்வத்த படையெடுத்து வந்தார்.

இதிலொன்றை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஜெயசிக்குறு. யாழ்ப்பாணத்துக்கு பாதை திறக்கும் அதேசமயம் வன்னியை எனது அச்சில் வைத்து இரண்டாகப் பிளந்துவிடுவதையும் இறுதி இலக்காகக்கொண்டிருந்தது. ஆனால் என்னைப்பிடிப்பது என்பது முழு அளவில் வன்னியைப்பிடிப்பது அல்ல என்று நடைமுறையில் நிருபிக்கப்பட்டது.

ஏனென்றால், யாழ்ப்பாணத்துக்கான விநியோகவழி என்பது தான் எனது முக்கியத்துவம். வன்னி வாழ்வின் அசைவியக்கத்தைப்பொறுத்தவரை எனது பாத்திரம் ஒப்பீட்டளவில் சிறியதே. வன்னி வாழ்வின் அசைவியக்கத்தைத் தீர்மானிக்கும் கிறவல் சாலைகள் என்னில் வந்து மிதந்தாலும் கூட வன்னிக்கிராமங்கள், பட்டினங்களின் அசைவியக்கத்தை நான் அதிகம் தீர்மானிப்பவள் அல்ல.

உண்மையில் எனது முக்கியத்துவம் யாழ்ப்பாணம் சார்பாகத்தான்.

எனவே என்னைப் பிடிப்பதன் மூலம் வன்னிவாழ்வின் அசைவியக்கத்தை அவர்கள் நினைத்தமாதிரி சிதைத்துவிட முடியவில்லை. இதனால் ஜெயசிக்குறு இடையில் இறுகிப்போய் நின்றுவிட்டது.

பிறகு ஓயாத அலைகள் மூன்று எழுந்து ஜெயசிக்குறுவின் வெற்றிகளை அள்ளிக்கொண்டு போனது.

தோற்றோடிய சிப்பாய்களுக்கும் ராங்கிகளுக்கும் சாட்சியாயிருந்தேன் நான்.

ஆனையிறவில் நூற்றாண்டுகளாய் வெல்லக்கடினமாயிருந்த கோட்டை தகர்ந்தபோது தோற்றோடிய கெமுனு குமாரர்களுக்கும் உப்புக்காற்றால் படபடத்த வெற்றிக் கொடிக்கும் சாட்சியாயிருந்தேன் நான்,

வன்னியில் என்னைப் பிடிக்கப் புறப்பட்டு வன்னியிலும் யாழ்ப்பாணத்திலுமாக என்னை இழந்தார் ரத்வத்த.

இழக்கப்பட்டு பிசாசுகளிடம் கையளிக்கப்பட்ட பட்டினங்களில் நான் தனித்துக்கிடந்தேன் மீட்கப்பட்டு சனங்கள் வீடுதிரும்பிய பட்டினங்களில் நான் பொலிந்து கிடந்தேன்.

இப்பொழுது காட்சி மாறி விட்டது.

யுத்தத்தின் காரணமாய் யுத்தத்தின் சாட்சியாய் இருந்தவள் நான் இப்பொழுது சமாதானத்தின் ஆரம்ப வழியாக மாறியிருக்கிறேன். இனி நொச்சிக்கு வரும் ஹெலிகொப்ரர்கள் என் மீது தாழப்பறந்து வந்து தரையிறங்கிச் செல்லும் இத்தருணத்தில் எனக்கொரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

அதுஇந்தியாவின் பேரரசனாயிருந்த அக்பரும் நகைச்சுவைமேதை பீர்பலும் முதலில் சந்தித்தது பற்றிய கதை.

ஒருமுறை அக்பர் வேட்டைக்குப் போன இடத்தில் வழியைத் தவற விட்டுவிட்டார். காட்டில் வழிதடுமாறிக்கொண்டிருந்த அவரும் மெய்க்காவலரும் இடையில் ஓரிடத்தில் பீர்பலைக் கண்டார்கள். அக்பரின் மெய்க்காவலன் பீர்பலிடம் கேட்டான்.

''இந்தப் பாதை எங்கே போகும்?''

பீர்பல் அமைதியாகச் சொன்னார். ''பாதை எங்கேயும் போகாது நீங்கள்தான் அதில் போகவேண்டும்'' மெய்க்காவலனுக்குக் கோபம் வந்து விட்டது. ''ஓய் பாதை கேட்பது யார் என்று தெரிகிறதா?... அவர்தான் பேரரசர் அக்பர்...'' என்றான்.

பீர்பல் இம்முறையும் அமைதியாகச்சொன்னார்''பேரரசனாயிருந்தாலும் கூட பாதை எங்கேயும் போகாது அவர்தான் போகிற இடத்திற்குப் போகவேண்டும்.''...

இப்பொழுது என்னுடைய கதையும் அப்படித்தான். பீர்பல் சொன்னதுபோலநானுமொரு பாதைதான்; தானாக எங்கேயும் போக முடியாத பாதை. நீங்கள்தான் போக வேண்டும். எங்கு வேண்டுமானாலும் போகலாம்.

யாழ்ப்பாணத்துக்கும் போகலாம் வன்னிக்கும் போகலாம் கண்டிக்கும் போகலாம் கொழும்புக்கும் போகலாம்யுத்தத்திற்கும் போகலாம் சமாதானத்திற்கும் போகலாம்;

■

# கருத்துக்களின் தோற்றம்

கருத்துக்கள் எப்படித் தோன்றுகின்றன? இக்கேள்வி பல காலங்களிலும் பலராலும் கேட்கப்பட்டது. அதன் விடைகளான வெளிப்பாடே கருத்துக்களின் தோற்றத்தைப் பற்றிய அவ்வப்போது எழுந்த கருத்துக்கள். அவை அறிவுக்குப் பொருத்தமாகவும் விஞ்ஞான ஆய்வுக்குட்பட்டதாகவும் இல்லை. சமுதாய விஞ்ஞானம் வளர்ந்தபின் சரியான வரையறுப்பு நமக்குக் கிடைத்தது.

மரத்திலிருந்து பழம் உதிர்வதுபோல் கருத்துக்கள் எங்கிருந்தும் உதிர்வதில்லை. நிலத்திலிருந்து ஊற்றுப் பெருக்கெடுப்பது போல் ஏற்கனவே மூளையில் புதைந்து கிடந்து பின் அவைகள் ஊற்றுப்போல் சுரந்து வெளி வருவதோ இல்லை. கனலைச் சாம்பல் மூடியிருப்பது போல் கருத்துக்களை அறியாமை மூடியிருக்கவும் இல்லை. அறியாமை அகலவும் வானத்துத் தாரகைகள் போல் அவை தோன்றவுமில்லை.

கருத்துக்களின் தோற்றத்தின் வரலாறுதான் என்ன? மக்கள் இதனைத் தெளிவாக உணர்ந்து கொண்டால்தான் அவர்கள் வரலாற்று முறையில் -விஞ்ஞான முறையில்- சரியான அணுகுமுறைகளைக் கைக் கொள்ள முடியும்.

சமுதாயம் இடையீடின்றி வளர்ந்து கொண்டிருக்கிறது. மாறிக்கொண்டிருக்கிறது. இயற்கையும் சமுதாய மாறுதலுக்கு உட்பட்டது. மாறி வரும் சமுதாய வாழ்வே மனித சிந்தனையை உணர்வை- வரையறுக்கிறது.

மனிதனின் போராட்டம் இயற்கையோடு தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கிறது. சமுதாய முரண்பாடுகளின் கூர்மை அவனைப் போராட்ட களத்தில் கொண்டு வந்து நிறுத்துகிறது. அதில் அவன் தற்காலிகத் தோல்விகளையும் இறுதியில் வெற்றியையும் அனைத்துக் கொள்ளுகிறான். அதன் விளைவாக அவன் நிறைந்த அனுபவங்களைப் பெறுகிறான்.

அவைகளே சிந்தனைச் சிதறல்களாக- கருத்துக்களாக- மலர்கின்றன. மனிதனைச்சூழ்ந்துள்ள- புறநிலை உலகத்தின் எண்ணற்ற தோற்றப்பாடுகள் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் ஊடுருவிக் கொண்டு மூளையில் பட்டு எதிரொலிக்கின்றன. அவ்வெதிரொலிகளே கருத்துக்கள் என்கிறது சமுதாய விஞ்ஞானம். புறநிலைச் சூழ்நிலைகள் இன்றி கருத்துகசள் தோன்ற முடியாது. புறநிலைச் சூழல்களோ மாறிக் கொண்டேயிருக்கின்றன,

த. ச. இராசமணி

கடந்த காலத் தலைமுறையின் அனுபவ உணர்வுகளோடு இணைந்து கருத்துக்கள் வளர்கின்றன. செழுமைப்படுகின்றன. மென்மேலும் தெளிவுபடுகின்றன.

கருத்துக்கள் தனிமனிதனின் ஞான உதயமன்று. ஆவேச வெறியுமன்று மக்களின் கூட்டு முயற்சியின் வடிவமே அது. அனைத்துச் சிந்தனைகளும் கருத்துக்களும் சமுதாயம் தழுவிய உழைப்பினால் உருவானவையே,

நன்றி: விபவி.




அகிலன்

ஒரு மனிதன் தனது வாழ்வின் முடிவான மரணத்தை முன்கூட்டியே உணர்ந்து விட்ட போது அவன் தன் வாழ்வின் மிகக்கொடுமையான கணங்களை அனுபவிக்கின்றான். இக்கூற்றை உளவியலாளர்கள் தம் ஆய்வுகளினூடே கண்டறிந்திருக்கிறார்கள். எமது போராளிகளால் எவ்வாறு இக்கொடுமையான கணங்களை வெற்றிகொள்ளமுடிகிறது? சில சமயங்களில் அக்கணங்கள் மாறிமாறி நீட்சி பெற்றுச்செல்லும் போதும் தளராது தமது இலக்கை வெற்றிகொள்ளும் மன ஓர்மம் எவ்வாறு அவர்களுள் குடியேறியது? அதிர்ச்சி தரும் அந்த இரகசியத்தை கரும்புலி மேஜர் அறிவுக்குமரன் எழுதியிருக்கிற குறிப்புகளினூடே உணர்ந்துகொள்ளமுனையலாம்.

எந்தக்கரும்புலி வீரனும் தங்கள் படையணியில் உள்ள ஏனையவர்களுக்குமுன்தான், தான் முதலில் இலக்கு நோக்கிச்செல்ல ஆசை கொள்வான். தம்மை அழிப்பதற்காக எல்லோரும் போட்டியிடுவர். ஏனெனில் மற்றக் கரும்புலித்தோழர்களின் இழப்பைக் கூட எங்களால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

''அதிகமான போராளிகள் வீரச்சாவடையாமல் குறைந்த இழப்புடன் எமது மண்ணை விடியவைக்க எங்களால் முடிந்தால் மலரும் எம் நாட்டை எங்கள் தலைவரோடு சேர்ந்து காணும் சந்தர்ப்பம் பல போராளிகளுக்குக்கிடைக்கும் என்று நினைத்து நினைத்து சந்தோசமடைவோம்.

தங்களுக்குரிய இலக்கை பூரணமாக அழித்துவிட்டு நடக்கமுடியாத விழுப்புண்ணோடு மற்றத் தோழர்களின் உயிரைக்காக்கும் தாகத்தோடு மயக்கநிலையிலும் முகத்தில் சலனமின்றி தம்மை சுட்டுவிட்டு தப்பும்படி முனகிக்கிடந்த அந்த இறுதிக் கணங்களையும், தோழர்களையும் நினைத்துப்பார்க்கிறேன்.


இப்படித்தான் ஒரு நடவடிக்கைக்காக தெரிவு செய்யப்பட்டு சென்றோம். எமக்கு அதிஷ்டம் இல்லைப்போலும் அந்த இலக்கு வேறு எங்கோ நகர்த்தப்பட்டுவிட்டது எதிரியின் நெஞ்சுக்கூட்டுக்குள் நாங்கள்நின்றோம். அதனுள்ளேயேவேறு இலக்கு நோக்கிநகர்ந்தோம். அப்போது எதிரியின் 'கொக்கோக்கோலா' பாணத்தை எமக்கு எல்லாம் எடுத்துத் தந்துவிட்டு கட்டியணைத்து முத்தமிட்டு நடந்தான் எம் தோழன். பகல்களம் சரமாரியாக நடந்து கொண்டிருந்தது, திடீரென அந்த இலக்கு அண்மித்ததும் சுற்றுமுற்றும் எங்களைப் பார்த்தவன் மச்சான் எல்லாரும் கவர் எடுங்கோடா 'என்று கத்தியபடி வேகமாய் எதிரியை நோக்கி ஓடியவனை காணவே இல்லை. எங்களில் தனது வெடிகுண்டின் சிறு துகள் கூட பட்டுவிடக்கூடாது என்று தனது வாழ்வின் இறுதிக் கணத்திலும் அக்கறை கொண்டிருந்தவனின் சிறு தசைத்துண்டுகள் என்னில் ஒட்டிக் கொண்டது''

கரும்புலிகள் தமது நோக்கத்தை அடைவதற்காக எப்படியும் இருந்துவிட்டுப் போகும் கல்நெஞ்சங்கள் அல்ல என்பதற்கு அறிவுக்குமரனின் குறிப்பேட்டில் இருந்த இன்னொரு சாட்சி

''அது எமது எல்லைகளுக்கு அப்பாற்பட்ட பிரதேசம். அங்குதான் தனது இலக்கிற்காய் நீண்டகாலமாக காத்திருந்தான் ஒரு தோழன். வேறொரு இனப் பெண் தன்னைக் காதலிப்பது அவனுக்கு அப்போது தான் தெரியும். அவளைக் காதலித்தால் தனது நடவடிக்கைக்கு சாதகமாக இருக்கும் என்பதும் அவனுக்குத் தெரியும். என்றாலும் தன்னால் ஒரு பெண்ணின் வாழ்வு பாழ்பட்டுப் போகக்கூடாது என்று நினைத்து அதை நிராகரித்து தனது இலக்கோடு சேர்ந்து வெடித்துப் போனான் என் தோழன் ஒருவன்;''

இவ்வாறு மற்றவர்களுக்காகத் தம்மை அர்ப்பணிக்கத் துணியும் கரும்புலிகள் தமது உயிர்மீதும் எத்தனை பெரிய நேசிப்பை கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிவுக்குமரன் எழுதுகிறான்:

''எங்கள் தோழர்கள் தமது இலக்கிற்காய் எதிரியின் மண்ணில் அலைந்து திரியும் வேளைகளில் திடீரென எதிரியால் இனங்காணப்பட்டு எதுவும் செய்யமுடியாது தம் உயிரை வீணே அழிக்கும் நிர்ப்பந்தம் ஏற்படும் போது எவ்வளவு வேதனை அடைந்திருப்பான் என்பதை நினைக்கும் போது நெஞ்சு புல்லரிக்கிறது இப்படித்தான் எதிர்பாராத விதமாக எதிரியிடம் பிடிபட்ட எமது தோழனொருவன் மயக்கம் தெளிந்த போது எதிரியின் மருத்துவமனையில் தான் வைக்கப்பட்டிருப்பதை அறிந்தான். அந்தக்கணமே தன்னை படுத்தியிருந்த கட்டிலில் உயிர் போகும்வரை தனது தலையை மோதி வீரச்சாவடைந்தான் எம் தோழன் ஒருவன். தான் வீணே உயிர்விட நேர்ந்ததை எண்ணி அந்த வீரன் தன் வாழ்வின் கடைசித்துளியில் எவ்வளவோ வேதனை அடைந்திருப்பான். என்றாலும் அவன் வெளிப்படுத்திய தன்மான உணர்வையும், உறுதியையும் நினைத்துக்கூட பார்க்கமுடியாது.''



## விடைதேடும் வினாக்கள்

இன்றைய நாட்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டவரலாற்றில் அன்றாடம் முக்கிய திருப்பங்களை சந்திக்கும் நாட்களாகவே விடிகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு ஒருபுறம் பேரினவாத சக்திகள் கடுமையான எதிர்ப்புகளை காட்டிவரும் வேளையில், அதே உடன்படிக்கையின் கட்டங்கட்டமான நகர்வுகள் புதிய புதிய செய்திகளை அன்றாடம் கொண்டுவந்த வண்ணமே உள்ளன.

நம்பிக்கைகளும், அவநம்பிக்கைகளும், சந்தோஷங்களும் சந்தேகங்களும் சமாந்தரமாக அருகருகே நீண்டு செல்லும் ரயில் பாதைகள் போன்று தமிழ்மக்களின் உணர்வுகளில் கோடிட்டுச் செல்கின்றன.

இந்த அமைதி எமது மக்களின் உரிமைகளைப் பெற்றுத்தரும் ஆதார சுருதியாக அமையுமா? எமது மக்களின் வாழ்வில் சுதந்திர விடியலைக் கொண்டு வருமா? சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு விலக்கப்பட்டு, எமது மக்களின் அச்சமற்ற இயல்பு வாழ்வு அவர்களின் பாரம்பரிய வாழ்நிலத்தில் மீண்டும் துளிர் விடத் தொடங்குமா?- இவைபோன்ற ஆயிரம் வினாக்களுக்கான விடைகளை தேடும் விழிகள் இன்றைய விடியல் பொழுதுகளில் விழிப்புக் கொண்டுதிசைதோறும் ஊடுருவுகின்றன.

எமது மக்களையும், மண்ணையும் பீதியூட்டி அதிரவைத்து 'அழிப்பு' நடவடிக்கைகளை மேற்கொண்ட அலுமினியப் பறவைகளின் வெறித்தனமான இரைச்சல் சமாதான கீதமாக இயல்பு மாற்றம் அடைந்து விட்டது ஆச்சரியமாக மட்டுமல்ல அதிர்ச்சியாகவும் இருக்கிறது-

இந்தமாற்றம் அவ்வளவு விரைவாக சாத்தியமானதற்கான காரணம் தான் என்ன? வெறும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மட்டும் தானா? அல்லது இதனை விட வேறும் அழுத்தமான காரணிகள் உள்ளனவா?

கேள்விகளை எழுப்பும் மனித மனங்களே பதில்களையும் ஊகித்து, பகுப்பாய்வு செய்து உறுதிப்படுத்த வேண்டியவைகளாக உள்ளன.

வரலாற்று அனுபவங்களின் தாக்கங்களும், அவை கற்பித்த பாடங்களும் மனதை எச்சரிக்கை செய்த வண்ணமேயுள்ளன.

நல்லதே நடக்கவேண்டும் என நம்பிக்கையை வளர்க்க முயலும் அதே மனம் நல்லது நடக்குமா? என்ற கேள்வியையும் எழுப்பத்தவறவில்லை.

ஆனாலும் கூட இன்றைய நாட்கள் முக்கியத்துவம் மிக்கவையாகவே உள்ளன.

பொங்கு தமிழ் எங்கும் பொங்கிப் பிரவகிப்பதும், மக்கள் உணர்வெழுச்சி கொண்டவர்களாக அதில் கலந்து கொண்டு அடங்கிக் கிடந்த தமது ஆத்ம உணர்வை சகல அடக்குமுறைகளையும் புறந்தள்ளி வெளிப்படுத்தும் பேராற்றல் கொண்டவர்களாகி அச்சம் தவிர்த்து தம் 'சுயத்தை' வெளிப்படுத்திவருவதும் பேரினவாதிகளை கிலிகொள்ள வைத்துள்ளது?

'சாதுமிரண்டால் காடு கொள்ளாது' என்ற முதுமொழியின் ஜீவன் தன்னை எமது மக்களூடாக இனம் காட்டி வருகிறது;

உண்மையில் இது வரலாற்று திருப்பு முனைக் கால கட்டமேயாகும். தாங்கள் யார்? தங்களின் வாழ்நிலம் எது? தங்களின் தலைமைத்துவம் எப்படியான பேராற்றல் கொண்டது? என்பதை அழுத்தம் திருத்தமாக எமது மக்கள் பகிரங்கமாகவே பிரகடனம் செய்து வருகிறார்கள்;

இந்த நிலையிலாவது பேரினவாதிகள் தமது வரலாற்றுத் தவறுகளை உணர்ந்து திருந்துவார்களா?

இதுவே இக்கால கட்டத்தில முக்கிய வினாவாகி நிற்கிறது.

○ தூரன்

## தமிழ் ஓவிய மரபு

சங்க காலத்திலேயேதமிழர்கள் ஓவியக்கலையில் சிறந்திருந்தனர். இதற்கு சங்க இலக்கியம் முழுவதும் சான்றுகள் உள்ளன. வார்த்தைகளின் உதவியின்றி பார்வை மொழி மூலமாகவே உணர்ச்சிகளைத் தெரிவிப்பதில் வல்லவர்கள் தமிழர்கள்.

ஒருபெண்ணைவர்ணிக்கும் போது மாங்கனி முகம் என வர்ணிப்பது உண்டு. அதை ஒரு சித்திரமாக வரைந்து பார்த்தால் எப்படி இருக்கும் என்பதை மகாபலிபுரம் சிற்பி கோ. திருஞானத்திடம்தான் கேட்க வேண்டும்.

மனிதனின் உடம்பு கழுத்திலிருந்து இடை வரை உள்ள பகுதி ஒரு காளையின் முகத்தைப்போல் அமைந்திருக்கின்றது என்று பேசுகின்றன தமிழனின் சிற்பநூல்கள்.

பெண்ணின விழியைக்கயல் விழி என்று சொல்வதுண்டு. மீன போன்ற கண்கள் என்பதை சிற்பி திருஞானம்வரைந்து காட்டுகின்ற பொழுது தான் புரிந்து கொள்ள முடிகின்றது.

பெண்ணின் இடையை உடுக்கை இடை என்று சொல்வதுண்டு. ஒரு சூலத்தைப்போல இருக்கிறது என்றும் சொல்வதுண்டு.

உருவங்களை 'அருவம்', 'உருவம்', 'அருவுருவம்' என்று விவரிப்பதுண்டு. மனித உடம்பைப்போலவே உள்ள உருவத்திற்கு உதாரணம்நடராசர் சிலை.

இதனை 'உருவம்', என்று சொல்வதுண்டு. கண்ணுக்குப் புலப்படாத, ஆனால் குறியீட்டால் உணர்த்தப்படும் பொருள் ஒன்றை 'அருவம்' என்றுசெல்லாவதுண்டு. இதற்கு உதாரணம் லிங்கம்.

இரண்டும் கலந்த 'லிங்கோ' திருமேனியை அருவுருவம் என்று செல்லாவதுண்டு.

தமிழர்களின் மரபான சிற்பங்களை எடுத்துக்கொண்டால் அவை அபிநயமொழியைச்சார்ந்து இயங்குவது மரபு.

உருவச்செயல் முறைகளை மூன்றுவகையாகப்பிரித்தனர்.

முழு ஓவியம் - சித்திரம்

புடை ஓவியம்- சித்தார்த்தம்.

பட ஓவியம் - சித்திரா பாசம்.

உருவங்கள் செய்யப்படும் கலை சாதனங்களைப்பற்றி பிங்கள நிகண்டு கீழ்க்கண்டவாறு பேசுகிறது.

கல்லும் உலோகமும், செங்கல்லும், மரமும், மண்ணும், சதையும், தந்தமும், வண்ணமும்கண்ட சருக்கரையும்மெழுகும் இன்றிவை பத்தும்சிற்பத் தொழிலுக்கு உறுப்பாகும்.

ஒவ்வோர் உருவம் செதுக்கும் போதும் அதற்கென்று தனித் தனியானதாள அளவுகள் உண்டு. இந்த அளவுகளை மிக நுட்பமாக உருவாக்கியுள்ளனர். ஓர் அணு எவ்வளவு சிறியதாக இருக்குமோ அதன் அடிப்படையில் இருந்து அளவுகளை உருவாக்கியுள்ளனர்.

இந்திரன்

உதாரணமாக எட்டு 'பரமாணு' அளவுகள் ஒரு 'தோர்த்து' ஆகும். இதேபோல எட்டு தோர்த்துகள் கொண்டது ஒரு 'மயிர் நுனி' அகலமாகும்.

சோழர் கால சிற்பங்கள் இந்தச் சிற்ப அளவுகளைக் கொண்டுஉருவானவை தான்.

இத்தகைய செழிப்பான தமிழ்ஓவிய மரபுஉள்ள நமது மண்ணில் தான் தங்களுக்கென்று தனியான ஓவிய மரபு இருக்கின்றதா என்று கேள்வி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள் நமது தமிழர்கள்.

இதுதான் சோகம். ■

அமைதி நிலைக்கு எங்களைத் தள்ளிக்கொண்டிருக்கிறது. தென்னாசியாவில் யுத்த மேகங்கள் சூழ்ந்துகொண்டிருக்கின்றன. உங்களுக்குத்தெரியும அமெரிக்க வல்லரசு எமது பிராந்தியத்திற்குள நுழைந்திருக்கிறது. ஆப்கானிஸ்தானில் போர் தொடங்கி இன்னும் முடியவில்லை. அது பாகிஸ்தான் வரை விஸ்தரிக்கப்படலாம் அல்லது ஈராக்மீது யுத்தம் தொடங்கலாம். பலஸ்தீனப்பிரச்சினை கொந்தளிப்பை அடைந்துகொண்டிருக்கிறது.

காஷ்மீர் நெருக்கடி சிக்கலாகிவருகிறது. இப்படியாக ஒரு பயங்கரமான சூழ்நிலைகள் இருக்கிறவேளையில் நாங்கள் சமாதானத்தை வேண்டி நிற்பது சர்வதேச உலகத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் உங்களுக்குச்சொல்லவிரும்புகிறேன்.

இனி, அடுத்த கேள்வி சமாதானப்பேச்சு எங்கே நடைபெறும்? எப்பொழுதுநடைபெறும்? எதைப்பற்றி இவர்கள் பேசபபோகின்றனர்? என்ற பூராயங்களைகேட்க நீங்கள் விரும்புகிறீர்கள் நாங்கள் சொல்லியிருக்கிறோம் என்னவென்று சொன்னால் முதல் இந்தப் போர்நிறுத்தத்தில் இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைவிதிகள் படிப்படியாக நிறைவேற்றப்படவேண்டும். எல்லாவிதமான தடைகளும் நீக்கப்பட வேண்டும். அதற்கான ஒரு காலஅட்டவணை இருக்கின்றது ஆகமிஞ்சிப்போனால்மூன்று மாதம். ஒரு மாதம் போய்விட்டது இன்னமும் இரண்டு மாதங்கள் இருக்கின்றன. இந்தஇரண்டு மாத காலத்தில் எஞ்சிய தடைகள் எல்லாம் நீக்கப்பட்டு வட-கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - தமிழீழத் தேசத்தில் அமைதி நிலையும் நிரந்தரமான சமாதான சூழ்நிலையும் இயல்பு நிலையும் முதலில் தோன்ற வேண்டும். அதற்குப் பிறகு விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம் செய்யப்பட வேண்டும். அதற்குப் பிறகுதான் நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்போம் பேச்சுவார்த்தைக்கான திகதியைக் கூறிப்போம். இது நாங்கள் தெட்டத் தெளிவாக நோர்வே அரசிடமும் நோர்வே அரசு மூலமாக ரணில் விக்கிரமசிங்கவிற்கும் தெளிவாகசொல்லியிருக்கிறோம். இதற்கு அவசரப்படவேண்டிய அவசியமில்லை.

முதலில் எமது மக்களின் பொருளாதார வாழ்வு மேம்பட வேண்டும். எமது மக்கள் நிம்மதியாகவும், அமைதியாகவும் வாழவேண்டும். அமைதி நிலை நிரந்தரமாக நிலையானதாக இருக்கவேண்டும். சர்வதேச கண்காணிப்புக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் தனது குழுக்களை அமைத்து கண்காணிப்பு வேலையைச் செய்யவேண்டும். அதற்கப்புறம் எமது இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டால் பேச்சுக்களில் பங்குபற்ற நாம் தயாராக இருக்கிறோம்.

சரி, பேச்சுக்களை எங்கு நடத்துவது? நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இந்த பாலசிங்கம் ஒரு அறிக்கைவிட்டார் என்று. என்னவென்று சொன்னால் தென்னிந்தியாவிலுள்ள ஒரு தலைநகரத்தில் இந்தப் பேச்சுக்களை வைக்கவேண்டுமென்று.

## இந்தியாவை ஒதுக்க புலிகள் விரும்பவில்லை

இவருக்கு ஏன் தேவையில்லாத வேலை? யாரைக்கேட்டு இவற்றையெல்லாம் செய்கிறார்? சரி, நாங்கள் ஒரு கோரிக்கை விடுத்தோம். நான் இதனை தனியாகச் செய்வதில்லை- நாங்கள் எல்லாவற்றையும் தலைவருடன் கலந்தாலோசித்துத்தான் கூறுகிறோம். அதற்கு இரண்டு காரணங்கள். ஒன்று, தென்னிந்தியாவில் பேச்சுக்களை நடத்தினால் வன்னிக்கு ஹெலிகொப்டரிலோ அல்லது கடல் விமானத்திலோ வந்திறங்கி தலைவரோடு கதைத்துவிட்டு பின்னர் பேச்சுக்களைத் தொடரலாம். நாங்கள் ஒரு அளவிற்குத்தான் ஓடலாம், ஏதாவது சிக்கல்வந்தால் தலைவருடன் பேசவேண்டும். அடுத்தது எனக்கு கிட்ணிப் பிரச்சினை அதில் ஏதாவது பிரச்சினை வந்ததென்றால் சென்னையில்போய் ஒரு மெடிக்கல் செக்கப்போட்டு வரலாம். ஆனால் இதற்காக மாத்திரம் நாங்கள் இந்தியாவிடம் கேட்கவில்லை. இந்தியாவை எமது தேசியப் பிரச்சினையில் பங்களிக்கவேண்டும், அவர்களுக்கும் ஒரு இடம் கொடுக்கவேண்டும். அவர்களுக்கும் ஒரு இடைவெளி கொடுக்க வேண்டும் என்ற யோசனையும் அதில் உள்ளடங்கி இருக்கிறது. நாங்கள் இந்தியாவை ஒரேயடியாகப் புறந்தள்ளவிரும்பவில்லை. இந்தியா என்ன சொன்னாலும் இந்தப் பிரதேசத்தின் வல்லரசு இப்பொழுது ஒரு நெருக்கடியான நிலையில் இருக்கிறது. அந்த நேரத்தில் நாங்கள் நோர்வேயுடனும் அமெரிக்காவுடனும் கைகோர்த்து நின்று இந்தியாவை உதாசீனம் செய்யவிரும்பவில்லை. பரந்துபட்ட இந்திய மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவும் மதிப்பும் இருக்கத்தான் செய்கிறது.

தமிழ் நாட்டில் சில அரசியல் கட்சிகளும் அங்குள்ள சில பிராமணியப் பத்திரிகைகளும் மட்டும் விடுதலைப்புலிகளை எதிர்த்துக்கொண்டு நிற்கிறார்கள் அன்று தொடக்கம் இன்று வரையும் அவர்கள் ஒரு காழ்ப்புணர்வுடன், வெறுப்புணர்வுடன், புலிகளுக்கெதிராக பிரச்சாரம் செய்து வருகிறார்கள். உங்களுக்குத் தெரியும். பல வருடங்களுக்கு முன்பு ஒரு துயரமான சம்பவம் நிகழ்ந்தது ஒரு இந்திய அரசியல் தலைவர் கொல்லப்பட்டார், இது ஒரு தனி மனித கொலைச் சம்பவமல்ல அன்றி இது ஒரு பழி வாங்கும் நடவடிக்கையுமல்ல, தமிழரின் தேசியப் பிரச்சினையில் அன்றைய இந்திய அரசின் அநீதியான வன்முறையான இராணுவத்தலையீட்டினால் வந்த விளைவே அது. இந்த வரலாற்று நிகழ்வின் அரசியல் இராணுவ பரிமாணங்களை மூடி மறைத்து இதனை ஒரு கொலைச் சம்பவமாகப் பார்ப்பது தவறு இதனை இந்திய அரசியல் வாதிகளும் இந்தியப் பத்திரிகையாளரும் உணர்ந்து கொள்ள வேண்டுமென நான் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்திக் கூறுகிறேன் நாம் இந்தியாவுடன் நல்லுறவை வளர்த்துக் கொள்ள விரும்புகிறோம் நாம் இந்தியாவின் நேச சக்தியாக இருக்கவே விரும்புகிறோம் நாம் இந்திய மக்களை நேசிக்கிறோம் ஈழத்தமிழரின் இனப்பிரச்சினையில் இந்தியா ஒதுக்கப்படுவதையோ ஓரங்கட்டப்படுவதையோ நாம் விரும்பவில்லை இந்தியாவின் பங்களிப்பையே நாம் விரும்புகிறோம். ஆனால் இந்தியா எமது கோரிக்கையை நிராகரித்து எமது நேசக்கரத்தை நிராகரித்து எமது நட்புறவை ஏற்றுக் கொள்ள மறுத்தால் இன்னொரு காலம் நாங்கள் சொல்லுவோம் நாங்கள் உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் தந்தோம் ஒரு இடைவெளி தந்தோம் நேசமாக அன்புடன் கரங்களை நீட்டினோம் ஆனால் நீங்கள் உதாசீனம் செய்தீர்கள் இனி மேற் கொண்டு எங்கள் பிரச்சினையில் வன்முறை மூலமாகவோ வேறு வழிகளிலோ நீங்கள் தலையிட முடியாது. அதற்கான தார்மீக அடிப்படை உங்களிடமில்லை என்பதனை நாங்கள் வலியுறுத்திச் சொல்லுவோம். இது ஒரு முக்கியமான விடயம் எமது பிரச்சினை உள்நாட்டுப்பிரச்சினை அல்ல வன்னிக்குள் அல்லது யாழ்ப்பாணத்துக்குள் ஓரங்கட்டப்பட்ட பிரச்சினை அல்ல. இன்று ஒருசர்வதேசப்பிரச்சினையாக உலக வல்லரசுகளினதும் பிரதேச வல்லரசுகளினதும் கவனத்தை, அக்கறையை, தலையீட்டை கொண்டுள்ள ஒரு சிக்கலான உலகப்பிரச்சினை சர்வதேச நெருக்கடி ஆகவே நாங்கள் குறுகிய நோக்குடன் காய்களை நகர்த்தவில்லை சகல சர்வதேச பரிமாணங்களையும் கணக்கிலெடுத்து அவற்றின் தாற்பரியங்களை உணர்ந்து சர்வதேச உறவுகளை ஆழமாகப் பரிசீலனை செய்து ஒவ்வொரு காய்களையும் நகர்த்திக் கொண்டிருக்கிறோம் ஆகவே இந்தியா சம்பந்தமான எமது நிலைப்பாடு சரியானது தெளிவானது என்று தான் சொல்லுவேன்.

சரி இப்பொழுது அரசாங்கம் எமது மக்கள் மீதான தடைகளை நீக்கி ஒரு இயல்பு நிலையைத் தோற்றுவித்து எமது இயக்கம் மீதான தடையை நீக்கி எமது இயக்கத்தை பேச்சு வார்த்தைக்கு அழைத்தால் எது பற்றிப் பேசுவது? சரி இது முக்கியமான விடயம் நாங்கள் எதைப்பற்றிப் பேசப் போறம் என்று சொன்னால் ஒரு இடைக்கால நிர்வாக அரசைப் பற்றிப் பேசப்போகிறோம். ஏன் இடைக்கால நிர்வாக அரசு; ஒரு நிரந்தர தீர்வைப் பற்றிப் பேசி இந்தப் பிரச்சினையை ஒரேயடியாகத் தீர்த்து விட முடியாதா என்று கேட்கப்படும். ஐம்பது வருடங்களாக எமது பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வு காண்பதற்கு முயற்சித்தோம் முடியவில்லை ஏன் சிங்கள தேசம் எமது அடிப்படைப் பிரச்சினைகளை இன்னும் ஏற்றுக்கொள்ளத்தயாராக இல்லை சந்திரிகாவும் சரி ரணிலும் சரி மற்றைய சகல சிங்கள தலைவர்களும் சரி தமிழர்களின் அடிப்படையான பிரச்சினைகளை ஏற்று ஒரு நிரந்தரமான தீர்வை முன் வைக்கத்தயாராக இல்லை.

## இடைக்கால அரசை கோருவது ஏன்?

ஆகவே தான் நிரந்தரத் தீர்வை நோக்கி இப்பொழுது பேச்சுவார்த்தைகளை தொடங்கி பேச்சுவார்த்தைகள் குழம்பி அது இறுதிப் போராக மாறுவதை நாம் விரும்பவில்லை.

ஆகவேதான் ஓர் இடைக்காலத் தீர்வை, இடைக்கால கட்டமைப்பை, இடைக்கால அரசை நாங்கள் கேட்க விரும்புகிறோம். அவர்களும் அதை தருவதற்கு ஆயத்தமாக இருக்கிறார்கள்.

ஆனால் எப்படியான கட்டமைப்பு? எப்படியான அதிகாரங்கள் அதிலிருக்கும்? விடுதலைப் புலிகளுக்கு எத்தகைய முக்கியத்துவம் இடம் அதில் கொடுக்கப்படும் என்பது பற்றி இனித்தான் பேச வேண்டும்.

அனேகமாகவட-கிழக்கில் உருவாக்கப்படப் போகும் இடைக்கால நிர்வாக அரசில் புலிகளிடம் முழு அதிகாரங்களும் முக்கிய அதிகாரப் பரவலாக்கலும் கொடுக்கப்படும் என எமக்கு வாக்குறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆனால். இதைப் பற்றி இன்னும் விரிவாகப் பேசப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் தமிழர் தாயகம் கொண்டு வரப்படபோகிறது.

இதில் நிர்வாக அதிகாரம் பற்றிய பேச்சுக்கள் தான் நாங்கள் நடத்தப்போகிறோம். ஆகவே இப்பொழுதுதான் இதுதான் இப்படிப்பட்ட அதிகாரங்கள் தான் இந்த நிர்வாக அரசில் இருக்கும். இதில் எங்களுக்கு எவ்வளவு பங்கிருக்கும்? முஸ்லிம் மக்களுக்கு எத்தகைய பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும்? கிழக்கிலுள்ள சிங்கள மக்களுக்கு எத்தகைய பிரதிநிதித்துவம் கொடுக்கப்படும்? என்ற விபரங்களை நாங்கள் இங்கு விபரமாகச்சொல்ல முடியாது. ஏனென்று சொன்னால் இதைப்பற்றித்தான்நாங்கள் பேசப் போகின்றோம்.

இந்த இடைக்கால நிர்வாக அரசு தோற்றப்படுவதற்கு ஒரு பிரதான காரணமிருக்கிறது. ஏனென்று சொன்னால் இந்த அமைதி ஒப்பந்தத்தை இந்த சமாதான சூழலில் இன்னுமொரு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்கு மேல் நீடிக்கப்படுவதை நாங்களும் விரும்புகிறோம் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கமும் விரும்புகிறது.

இதை நீடிப்பது என்று சொன்னால் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும். அந்த நிர்வாகக் கட்டமைப்பில் சிவில் நிர்வாகம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நாம் இந்த அமைதியான சூழ்நிலையைத் தொடர்ந்து பேண முடியும்.

இந்த இடைக்கால அரசு அமைக்கப்பட்டு வட-கிழக்கின் நிர்வாகம் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டால் உலக நாடுவட-கிழக்கில்ஏகப்பட்ட பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு பெருமளவு உதவி வழங்க தயாராக இருக்கின்றன. இது எமக்கு நேரடியாகச் சொல்லப்படுகின்றது.

வடக்கு-கிழக்கில் அதாவது தமிழர் தாயகம் போரினால் சிதைந்துபோய் கிடக்கிறது. சகல கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டிருக்கிறது. வளங்கள் சூறையாடப்பட்டிருக்கின்றன எமது பொருளாதார வாழ்வு சின்னாபின்னமாக்கப்பட்டிருக்கிறது. இவற்றை மீள புனரமைத்து திருத்திகட்டியெழுப்ப எமக்கு ஏகப்பட்ட நிதி உதவி தேவை. இந்த நிதியுதவியைச் செய்வதற்கு உலகத்திலுள்ள முன்னேறிய நாடுகள் முன்வந்திருக்கின்றன.

ஆகவே இப்படியான சூழலில் சமாதானத்தை நீடித்து, சமாதான சூழலை தொடர்ந்து கடைப்பிடித்து, இடைக்கால நிர்வாக அரசைப் பொறுப்பேற்று இந்த நிதி உதவியைப் பெற்று எமது மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்த நாம் முடிவு செய்திருக்கிறோம் ஆகவே நீங்கள் நினைக்காதீர்கள் நீண்ட காலத்திற்கு நீடிக்காதென்று.

சரி இடைக்கால அரசு இன்னும் மூன்று நாலு மாதத்தில் வரும். புலிகள் இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் சென்று அரசியல் கட்டமைப்புக்களை போட்டு தங்களுடைய அதிகாரங்களை அரசியல் விரிவாக்கத்தை செய்வார்கள். நிர்வாக ஆட்சிப்பொறுப்பை ஏற்பார்கள். அதற்குபிறகு பொருளாதார அபிவிருத்திதிட்டங்கள் என்ற ரீதியில் தமிழீழம் முழுக்க புனர்நிர்மாணம் செய்வதற்கான வேலைகளை பொறுப்பேற்பார்கள். அதற்கான கட்டமைப்புக்களை உருவாக்குவோம்.

இப்படியான சூழ்நிலையில் இப்படி நாங்கள் இடைக்கால நிர்வாக ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கும் போதுதான் நிரந்தர தீர்வு பற்றி நாங்கள் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்திருக்கிறோம்.

நிரந்தர தீர்வு பற்றி என்ன பேசுவது என்று கேட்கலாம் நீங்கள் ஆழமாக விடயங்களை கேட்கிறதற்காக வந்திருக்கலாம்.

நிரந்தர தீர்வுகள் பற்றிப்பேசுவதற்கு நாங்கள் சொல்வோம் என்னவென்றால் முதல் தமிழீழ மக்களின் அடிப்படைகளை சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்வோம்.

அடிப்படைகள் என்றால் என்ன? இவை தான் அடிப்படை. அதாவது தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் இருக்கிறது வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தாயகப்பிரதேசம் இருக்கிறது. தமிழீழ மக்கள் ஒரு சிறுபான்மை மக்கள் கூட்டம் அல்ல ஒருசிறுபான்மை இனம் அல்ல தமிழீழ மக்கள் ஒரு தேசிய கட்டமைப்பைக்கொண்ட ஒரு மக்கள் சமுதாயம் இதுதான் முக்கியமான விடயம் ஏனென்று சொன்னால் சிறுபான்மை மக்களுக்கு ஏதோ அற்பசொற்ப சலுகைகளைக் கொடுத்துவிடலாம் என்று சிங்களவர்கள் இவ்வளவு காலமும் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் சிறுபான்மை இன மக்கள் அல்ல நாங்கள் எமக்கென்று ஒரு மொழி எமக்கென்று வரலாற்றுப் பிரதேசம் எமக்கென்று பொருளாதாரவாழ்வு எமக்கென்று கலாச்சாரம் இப்படியான பல்வேறு அம்சங்கள் கொண்ட ஒரு தேசிய இனமாக தேசிய கட்டமைப்பைக் கொண்ட மக்களாக வாழ்ந்துகொண்டு வந்தபடியால் எமது பிரச்சினையை வித்தியாசமான முறையில் அணுகவேண்டும்.

அடுத்ததாக எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும்.

சரி இந்த சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? எல்லா பேரெழுச்சிகளில் பொங்குதமிழ் எழுச்சிகளில் சுயநிர்ணய உரிமைப்பற்றி பேசுகிறோம். அது என்ன?

அது இதுதான் என்னவென்று சொன்னால் எங்களுடைய மக்கள்தான்தங்களுடைய அரசியல் தலைவிதியையும் பொருளாதார வாழ்வையும் நிர்ணயிக்க வேண்டும்.

மற்றவர்கள் வந்து எங்கள் மீது ஒரு அரசியல் தீர்வைத்திணிக்க முடியாது சுயநிர்ணய உரிமையின அடிப்படை இதுதான்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

ஆகவே எங்களுடைய மக்கள் சில சமயங்களில் ஏதோ ஒரு சுயாட்சியை ஏற்றுக்கொள்ளலாம் தானே. அதே வேளையில் பிரிந்துசென்று தனி அரசு அமைப்பதையும் விரும்பலாம் ஏற்கெனவே அப்படியான தொரு தீர்மானம் ஒன்றை 1977ஆம்ஆண்டு எமது மக்கள் முன் வைத்தார்கள். தீர்மானித்தார்கள் தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு மனுக்கொடுத்தார்கள்.

ஆகவே சுயநிர்ணய உரிமைஎன்பது தனியாட்சி உரிமை என்ற அர்த்தத்தையும் கொடுக்கும் அதேவேளை எமது மக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய ஒரு தீர்வை முன்வைத்தால் அதைஎமது மக்கள் பரிசீலனை செய்து அங்கீகரிக்கவும் கூடும்.

ஆனால் சுயநிர்ணய உரிமை என்பது ஒரு அடிப்படையான அரசியல் உரிமை அந்த உரிமையை முதலில் சிங்கள தேசம் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இந்த சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில் ஒரு நிரந்தரத்தீர்வு ஏற்படுவது கடினமான விடயம்.

ஆகவேதான் நாங்கள் சொல்கிறோம். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற இந்த மூன்று அடிப்படைகளை ஏற்றுக்கொண்ட ஒரு தீர்வுத்திட்டத்தை சிங்கள தேசம் முன்வைத்தால் நாங்கள் அதை பரிசீலனை செய்வோம். அதை எமது மக்கள் ஏற்றுக்கொள்வார்களா என்பதை நாங்கள் முதலில் பரிசீலனை செய்வோம். அது எப்படியான தீர்வுத்திட்டம் என்பதை நாங்கள் இப்பொழுது சொல்லமாட்டோம். அரசு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கட்டும்.

ஆனால் எங்களுடைய இலட்சியம் தமிழீழ தனியரசு இந்ததமிழீழ தனியரசை அரசுஏற்றுக் கொள்ளவிரும்பாத பட்சத்தில் அரசாக ஒரு தீர்வுத்திட்டத்தை முன்வைக்கட்டும் நாங்கள் அதை பரிசிலனை செய்து பார்ப்போம் இது தான்எங்களுடைய நிலைப்பாடு அதில் தெளிவாக இருக்கிறோம்.

ஏனென்று சொன்னால் பலபக்கத்தால் கேள்விகள் வருகிறது. இவர்கள் என்ன பேசப்போகிறார்கள? தமிழீழத்தை கைவிட்டு விட்டார்களா? அப்படியானால் இவ்வளவு காலமும் எதற்காக போராடினார்கள்? இவ்வளவு ஆயிரமாயிரம் போராளிகளை ஏன் பலி கொடுததார்கள்? என்று கேட்கலாம்.

நாங்கள் எங்களுடைய கொள்கையை ஒரு நாளும் கைவிடப்போவதில்லை ஆனால் சர்வ தேச உலகத்தின் அழுத்தத்தின் பேரில் சிங்கள அரசாங்கம் ஒரு மாற்றுத்திட்டத்தை தமிழ்மக்களால் ஏற்றுக்கொள்ளககூடிய மாற்றுத்திட்டத்தை முன்வைத்தால் நாங்கள் அதை பரிசீலனை செய்வோம்.

வன்னிமக்களின் பங்களிப்பைபப்பற்றி நாலு வார்த்தைகள் சொல்லவேண்டும். வெளிநாட்டிலிருந்து வந்தேன் இங்குள்ள நிலைமை தெரியாமல் பேசுகிறார் என்று நினைக்கலாம்.

வன்னிப்பெருஞ்சமர்களில்வன்னி மக்கள்ஆற்றிய மகத்தான பங்களிப்பைபற்றி எங்களுக்குத்தெரியும். அலையலையாக நிகழ்ந்த எமது புலிப்படைவீரர்களின் வியக்கத்தக்க சாதனைகளுக்கு மலையாக நின்று நீங்கள்செய்த உதவிகள் அர்ப்பணிப்புக்கள் உயிர்தியாகங்கள் கூட எமக்குத்தெரியும் அதற்காக எமது இயக்கத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுககளையும் உங்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இங்குஉருவாக்கப்பட்ட போரெழுச்சிக்குழுக்கள் அவற்றின் செயற்பாடுகள் அவற்றின் பங்களிப்புக்கள் எல்லைப்படைகளாக, கிராமியப் படைகளாக, துணைப்படைகளாக நீங்கள் ஆற்றிய தொண்டு, பங்களிப்பு போரில் நேரடியாக செய்த பங்களிப்புக்கள் கிட்டத்தட்ட முந்நூறு பேர்வரை மாவீரர்களாகிய உங்களது மகத்தான தியாகங்களை உலகத்தமிழினம் நன்கறியும் அதையிட்டு வன்னி மக்கள் மேல் உலகத்தமிழினம் மிகவும மரியாதையும் மதிப்பும் வைத்திருக்கிறது என்பதை இங்கு சொல்ல விரும்புகின்றேன்.

ஒரு சில தகவல்களை இன்று உங்களுக்குச் சொல்ல விரும்புகின்றோம். இனி என்ன நடக்கப்போகிறது. நான் இங்கு நிற்கும் காலத்தில் சில முக்கிய நிகழ்வுகள் நடக்கும்.

ஒன்று எதிர்வரும் பத்தாம் திகதி எமது தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள் உள்நாட்டு வெளிநாட்டு பத்திரிகையாளர்களை சந்திப்பதற்கு தீர்மானித்திருக்கிறார் முதற்தடவையாக பத்து ஆண்டுகளுக்கு பின்னர் சர்வதேச ஊடகவியலாளர்களை எமது தலைவர் நேரடியாக சந்தித்து எமது மக்களின் அரசியல் கருத்துக்கள் நிலைபற்றி எமது இயக்கத்தின் கொள்கைபற்றி எமது இயக்கத்தின் எதிர்காலத்திட்டங்கள் பற்றி நேரடியாக எடுத்துக் கூறி விளக்க இருக்கிறார்.

அத்தோடு எதிர்வரும் பன்னிரண்டாம்திகதி தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களையும் நாங்கள் வன்னிக்கு அழைக்கின்றோம். நாங்கள் கூப்பிட இல்லை. தலைவர் கூப்பிடுகின்றார். ஏனென்றால் இவர்கள் எல்லோரும் விடுதலைப் புலிகள்தான் தமது ஏகப்பிரதிகள் என்று சொல்லிக்கொண்டு விடுதலைப் புலிகள்தான் உண்மையான மக்களின பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொண்டு எங்களுடைய பெயரைச் சொல்லிக் கொண்டு வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற ஆசனத்தில் குந்திக்கொண்டிருந்து இப்பொழுது ஐக்கிய தேசியககட்சி பிரதம மந்திரிக்கு பின்னாலும் அமைச்சர்களுக்குப் பின்னாலும் திரிகிறார்கள்.

ஆகவே, இவர்களுக்கு எங்களுடைய மக்களின் இலட்சியம் என்ன? நாங்கள் எந்த இலட்சியப்பாதைக்கு போகின்றோம்? பாராளுமன்ற அரசியலுக்கு புறம்பான விடுதலை இயககமாக நாங்கள் நிற்கிறோம். எங்களுடைய பிரதிநிதிகள் என்று நீங்கள் சொன்னால எங்களின் மக்களிடம் எங்களுடைய பெயரைச் சொல்லி வாக்கைப்பெற்று நீங்கள் பாராளுமன்றில்செயற்படுவதானால் எங்களுடைய தலைமையின் வழிகாட்டலின் கீழ் செயறபடவேண்டும்.

அவர்களைக் கூப்பிடுவது ஏனென்று சொன்னால் இங்கிருந்து சொன்னால் கேட்காது.

இபபொழுது சமாதானம் வந்துவிட்டது. இனி எப்படி நடக்க வேண்டும். எங்களுடைய தலைமைப் பீடத்தின் கொள்கை என்ன? நீங்கள் பாராளுமன்றத்தில் என்ன கதைக்க வேண்டும் என்ற ரீதியில் அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு தேசிய தலைமை என்ற ரீதியில் எமது தலைமைப்பீடத்திற்கு உண்டு.

அடுத்ததாக இன்னும் ஓரிரு வாரங்களில் முஸ்லிம் தலைவர்களையும் மலையக தலைவர்களையும் அழைத்து எமது தலைவருடன் கலந்துரையாட முடிவு செய்திருக்கிறோம். அது முக்கியமான விடயம்.

அனைத்து தமிழ் மக்களும் அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரு தலைமையின் வழிநடத்தலின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும். அதேவேளை சிறுபான்மை இனத்தவராகிய முஸ்லிம மக்களும் மலையக தமிழ மக்களும் அவர்களது அரசியல் அபிலாசைகளும் உர்மைகளும் அதற்காகவும் நாங்கள் குரல கொடுத்து போராடத் தயாராக இருக்கிறோம். அவர்களுடன் ஒத்துழைத்து அரசியல் நடத்த தயாராக இருக்கிறோம் என்பதை அவர்களுடன் கதைத்து அவர்களையும் எங்களோடு அரவணைக்க வேண்டும்.

முஸ்லிம் மக்களின பிரச்சினை சம்பந்தமாக எமது இயக்கத்தின் நிலைப்பாடு இயக்கத்தின் தத்துவ ஆசிரியர், கொள்கை வகுபபாளர் என்ற ரீதியில் நான் சில விடயங்களைச் சொல்கிறேன்.

முஸ்லிம் மக்களுக்கு சொல்லப்பட வேண்டிய விடயங்களை இந்த கூட்டத்தில் சொல்கின்றேன. அதாவது மொழி ரீதியாக பொருளாதார ரீதியாக, புவியியல் ரீதியாக தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் ஒன்றிணைந்து வாழ வேண்டியவர்கள்.

ஏனென்றால் அவர்களது பொருளாதார வாழ்க்கையும் சமூக வாழ்கையும் ஒன்றாக பின்னிப்பிணைந்து இருக்கிறது.

அதேவேளை முஸ்லிம் மக்களின் கலாச்சார தனித்துவத்தையும் மதத்தனித்துவத்தையும் நாங்கள் ஏற்று அதைக் கௌரவிக்கிறோம்.

நாங்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம் யாழ்ப்பாணத்திலிருந்து எமது சகோதரர்களான முஸ்லிம் மக்கள் அகற்றப்பட்ட நிகழ்வு ஒரு துயரமான சம்பவம் இதற்காக நாம் மனம்வருந்துகிறோம்

அந்த மக்களை மீண்டும் யாழ்ப்பாணத்திற்கு அழைத்து அவர்களுடன் ஒன்றிணைந்து வாழும் சூழ்நிலையை நாங்கள் உருவாக்கிக் கொடுப்போம்

முஸ்லிம் தலைவர்களை அழைத்து அவர்களுடன் பேசுவோம் அவர்களுடன் செறிந்து வாழும் பிரதேசங்களில் அவர்கள் சுதந்திரமாக கௌரவமாக எந்தவித கெடுபிடியுமின்றி வாழ வகைசெய்து கொடுப்போம்

தமிழீழமே முஸ்லிம் மக்களின் தாயகம் இதில் நாம் மிகவும் தெளிவாக இருக்கிறோம்

சரி, பாலசிங்கத்தார் எல்லோரையும்பற்றி எல்லாப் பிரச்சினைகளையும் பற்றி தொட்டுவிட்டார் முக்கியமான விடயத்திலிருந்து நழுவிப்போறார் அதாவது வரி, பாஸ் என்பனபற்றி எங்களுக்குத் தெரியும் இங்கு வரி அறிவிடப்படுகிறது அதாவது வரிப்பளு உங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கிறது என்பது எமக்குத் தெரியும் இந்த வரிப்பளுவை எவ்வளவு சீக்கிரத்தில் உங்களிடமிருந்து நீக்கிவிட வேண்டும் என்பதில் நாம் அக்கறையுடன் செயற்படுவோம்

சரிபோர்க்காலத்தில் நீங்கள் எமதுபோராளிகளுடன் சேர்ந்து அவர்களது துன்பம் துயரங்களை சுமந்து இத்தனைகாலமாக இரத்தம் சிந்தி வியர்வை சிந்தி கஸ்ரப்பட்டு வாழ்ந்த வரலாறு எமக்குத்தெரியும்.

அதை நான் நியாயப்படுத்த வரவில்லை சரி இயக்கத்திற்கும் சில கஷ்ரங்கள் இருக்கிறது பொருளாதார நெருக்கடி இருக்கிறது. இப்பொழுதுதான் அமைதி வந்து ஒரு மாத காலம் இனி வரும் காலங்களில் பொருளாதார அபிவிருத்திததிட்டங்கள், பாதைத்திறப்பால் ஏற்படும் போக்கு வரத்துக்கள், வெளிநாட்டு உதவிகள் இப்படியாக எமது பொருளாதாரம் மேம்பட இந்த வரிச்சுமைகளில் இருந்து எமது மக்களிற்கு விடுதலை கொடுப்போம் என்று எமது பொறுப்பாளர்கள் என்னிடம் உறுதி அளித்திருக்கிறார்கள்.

நாங்கள் இவ்வளவு காலமும் இரத்தம் சிந்தி போராடியது உங்கள் மீது வரியை இறுக்கி உங்கள் மீது பொருளாதார தடையை ஏற்றி உங்களை துன்புறுததுவதற்காக அல்ல.

பதினையாயிரம் இருபதினாயிரம் போராளிகளுக்கு சாப்பாடு கொடுக்க வேணடும். சீருடைகள வழங்க வேண்டும். நிர்வாகச் செலவுகள என நியாயமான செலவு எங்களுக்கு இருக்கிறது

ஆகவே எமது மக்களிடம் இருந்தும் சில வரிகளை எடுத்து இன்று சமாளிக்க வேண்டி இருக்கிறது. ஆனால், வெகுவிரைவில் -திருப்பித் திருப்பிச சொலகிறேன. வெகுவிரைவில்- எமது பொருளாதார நிலை மேம்படும் சூழ்நிலையில் படிப்படியாக உங்கள் மீது திணிக்கப்பட்ட வரியை உங்கள் மீது திணிக்கப்பட்ட பாஸ் முறைகளை நாங்கள நீககி உங்களுக்கு நிம்மதியான ஒரு விடிவை ஏற்படுத்துவோம என எங்களுடைய நிதிப் பொறுப்பாளர் சார்பில் உங்களுக்கு உறுதிமொழி தருகிறேன்.

# விண்ணுலக வாழ்வில் இரண்டாம் ஆண்டு..



தாயின் மடியில்

28.01.1918

முருகனடியில்

05.04.2000

திருமதி

## இரத்தினாம்பாள் துரைராசா

தொண்டமனாறு, ரெத்தினகிரி

பண்புடன் பாசத்தையும், பார்புகழும் கல்வியையும்
எமக்களித்து எம்மை யெல்லாம்
வாழ வழிவகுத்த தெய்வமே. பல ஆண்டுகள்
சென்றாலும் நீங்காதம்மா உன் இன்ப நினைவுகள்:

தகவல்,
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(சி- 6674)

# நான்காம் ஆண்டு நினைவலைகள்



## 2ஆம் லெப். செந்தமிழன்

(திருச்செல்வராசா பிரபாகரன்)

மண்ணில் மலர்வு
14. 09. 1973

மண்ணிற்காய் மறைவு
05. 04. 1998

நான்காண்டுகள் ஆனதோ
நம்பமறுக்கிறதுஎம்இதயங்கள்
இன்றும உன வசந்தம எம
வாசலில வீசுகிறது
விடுதலைக்கு நீங்கள்
கொடுத்த உயிர் விலையால
விடிவு பெறும் எம் தேசம்
எம் மககள் நிம்மதியாய்
வாழ்வர்.

என்றும் உன் நினைவுகளுடன்
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
மச்சான், உற்றார், உறவினர்

7ஆம் வட்டாரம்,
புதுககுடியிருப்பு.

(1618)

இப்பத்திரிகை இவ்வெரசுல் ஈழநாதம் பணிமனையில 2002ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.